குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி

# ஆண்டறிக்கை 2018



# KPL

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL)

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# உள்ளடக்கம்


எம்மைப் பற்றி

நிறுவனத் தகவல்கள் 01
எம்மைப் பற்றி 02
எமது தொலைநோக்கு, இலக்கு, பெறுமானங்கள் 03
சாதனைகள் 04
மைல்கற்கள் 05
தலைவரின் செய்தி 07
பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி 12
பணிப்பாளர் சபை 16
சிரேஷ்ட முகாமைத்துவம் 20
பிரதேச அத்தியட்சகர்கள் 21

முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

நிலைபேற்றுத்தன்மை அறிக்கை 22
இடர் முகாமைத்துவம் 25
கூட்டிணைப்பு ஆளுமை 28
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 29

நிதித்துறை அறிக்கை

பணிப்பாளர் சபையினரின் ஆண்டறிக்கை 30
பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய அறிக்கை 35
நிதி அறிக்கை மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 36
விரிவான வருமான அறிக்கை 41
நிதி நிலைமை அறிக்கை 42
காசுப் பாய்ச்சல் அறிக்கை 44
பங்கு மாற்ற அறிக்கை 46
கணக்கியல் கொள்கைகள் 47
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் 60

இணைப்புக்கள்

வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல் 81
பதிலாள் படிவம்

# நிறுவனத் தகவல்கள்

## கம்பனியின் பெயர்

குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல்
தொலைபேசி : 037 2223133
தொலைநகல் : 037 2223191
மின்னஞ்சல் : kurunegalaplt@sltnet.lk

## கூட்டிணைப்புத் திகதி

1992 ஜுன் 18

## கம்பனிப் பதிவிலக்கம்

PB 1319

## சட்ட அந்தஸ்து

முழுமையான அரச உடைமையாகத் திகழும் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாகும். வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபன அல்லது அரசுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை பொது நிறுவனங்களாக மாற்றும் சட்டத்தின் விதிகளுக்கு அமைய, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கம்பனியின் கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்
306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல
தொலைபேசி: 0112 887028-34
தொலைநகல்: 0112 887223
மின்னஞ்சல்: oaggov@sltnet.lk
இணையதளம் : www.auditorgeneral.gov.lk

## வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி

## செயலாளர்கள்

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (தனியார்) நிறுவனம்
இல. 47, அலெக்சாந்திரா பிளேஸ்,
கொழும்பு 07
தொலைபேசி : 0112 695782
தொலைநகல் : 0112 695410

# எம்மைப் பற்றி

1992 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட, முற்றிலும் அரசுடைமையான, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL), 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதாகும். அரச தனியார் மயப்படுத்தும் கொள்கையின் கீழ் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையான வர்த்தக ஸ்தாபனங்கள் என்பனவற்றை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொது நிறுவனங்களாக மாற்றும் சட்டத்தின் கீழ் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப்பட்ட காணிகளைச் சட்டபூர்வமாக உரித்தாக்கியதன் அடிப்படையில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஒரே ஒரு பங்குடைமையான நிறுவனமாகச் செயல்படும் நிறுவனத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினது செயலாளர் தனியான பங்குதாரராக விளங்குகின்றார். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்தே குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவம் தனியார் துறையை அடித்தளமாகக் கொண்டிருந்தது. பொருளாதார ரீதியில் பின்னடைவு கண்டதனாலும், 13 வருட காலமாக சரியான முகாமைத்துவம் இல்லாததனாலும், 2005 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து நிறுவனத்தின் முகாமைத்துவத்தை மீண்டும் பொறுப்பேற்க அரசாங்கம் தீர்மானித்தது. இத்தகைய நடவடிக்கை காரணமாக, நிறுவனம் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இதன் நிர்வாகம் பல்வேறு அமைச்சுக்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் 2015 செப்டம்பர் 01 ஆம் திகதியிலிருந்து அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தாலும், இது பின்னர் அரசாங்க தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சாக மாறியது.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், 2018 நவம்பர் 09 ஆம் திகதி முதல் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் மொத்த நடவடிக்கைகள் அனைத்தும் தென்னை, விவசாய உற்பத்தி மற்றும் விற்பனை இறப்பர் மற்றும் ஏனைய துணைப் பயிர்ச் செய்கைகளாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றன. குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 4971.12 ஹெக்டயர்களை உள்ளடக்கிய 07 பெருந்தோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு பெருந்தோட்டமும் குறிப்பிட்ட ஏக்கர்களைக் கொண்ட சிறுச்சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டு முதல் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவை உள்ளன.

நிறுவனம் 1,000 பேருக்கு நேரடியாகவும், நேரடியற்ற வகையிலும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதோடு, மேலும் பலரின் ஜீவனோபாயத்துக்கும் பின்னணியிலுள்ளது.

# எமது நோக்கு, இலக்கு, மூலாதாரப் பெறுமானங்கள்

## எமது நோக்கு

தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் சிறந்த மாதிரிப் பெருந்தோட்ட விவசாய, வர்த்தக நிறுவனமாகத் திகழுதல்.

## எமது இலக்கு

பெருந்தோட்ட மற்றும் விவசாய, வர்த்தக நிறுவனங்களை, இயற்கை, பௌதீக, மனிதவளம் என்பனவற்றை ஒன்றுதிரட்டி, சூழலை அசுத்தமாக்காத வகையிலும், சமூக ரீதியில் பொறுப்புணர்ச்சி கொண்ட விதத்திலும், பங்குதாரர்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையிலும் நிர்வகித்தல்.

## மூலாதாரப் பெறுமானங்கள்

**சிறந்த தொழிலதிபர் :**
தரம், உற்பத்தி, தொழிலதிபர் திறன், பெறுமான உருவாக்கம், இலாபமீட்டும் தன்மை, சூழல் பாதுகாப்பு, கூட்டிணைப்பு சமூகப் பொறுப்புணர்ச்சி என்பனவற்றை இலக்காகக் கொண்ட கௌரவம் மிக்க, தகைமை கொண்ட அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவையாளர்களுக்கு அதிகாரமளித்தல்.

**தரம் வழங்குநர் :**
அதிகரித்த மனநிறைவு, செயலாற்றும் சகல விடயங்களிலும் தொடர்ச்சியான அபிவிருத்தி.

**உற்பத்தி :**
ஒரு யூனிற் மூலவளத்திற்கு உச்சக்கட்ட உற்பத்தியைப் பெறுதல், ஒரு ஹெக்டயருக்கு அதிகரித்த விளைச்சலைப் பெறுதல், நிறைபேறான அடிப்படையில் உச்சக்கட்ட காணி உபயோகம், வீண் விரையத்தை இயன்றளவு குறைத்தல்.

**தொழில்முனைவோர் :**
செயற்பாட்டு அடிப்படையில் சகல வேளைகளிலும் புதுப்புது அணுகுமுறைகளை நோக்கி நடவடிக்கை மேற்கொள்ளல்.

**பெறுமான உருவாக்கம் :**
வர்த்தகச் சூழலின் மாற்றமடையும் தேவைகளுக்கு தொடர்ச்சியாக ஈடுகொடுத்தல்.

**இலாபமீட்டும் தன்மை :**
அடிப்படை உற்பத்திப் பொருட்களுக்கும், பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களுக்கும், உச்சக்கட்ட தேறிய விற்பனைச் சராசரியையும், மிகக் குறைந்த உற்பத்திச் செலவினத்தையும் பெறுதல்.

**சூழல் பாதுகாப்பு:**
சுற்றாடலுடன் தொடர்புடைய வளங்களை உபயோகித்து, சூழலுக்கு மிகக் குறைந்த பாதிப்பை அல்லது எத்தகைய பாதிப்புமற்ற சூழலை நிச்சயித்தல்.

**சமூகப் பொறுப்புணர்ச்சி :**
சிறந்த ஆளுமைக்கு மதிப்பளித்து, மக்களுக்கும் சூழலுக்கும் பாதுகாப்பளித்தல்.

# சாதனைகள்

**2011**
- தேசிய மட்டத்தில் தேசிய விவசாய வர்த்தகத்திற்கான இரண்டாமிடம்
- பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திகளுக்கு தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.

**2012**
- தேசிய விவசாய வர்த்தகப் பிரிவில் தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.
- பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திகளுக்கு தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.

**2013**
- தேசிய விவசாய வர்த்தகப் பிரிவில் தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.
- பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திகளுக்கு தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.

**2014**
- தேசிய விவசாய வர்த்தக பிரிவில் தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது.
- பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திகளுக்கு தேசிய விவசாய வர்த்தகத்திற்கான தங்க விருது - 2014

**2015**
- இலங்கை தேசிய வர்த்தக சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டின் விசேட திறமைக்கான விருது வழங்கும் விழாவில், விவசாய மற்றும் பெருந்தோட்டப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

**2016**
- சர்வதேச மிளகு சமூகத்தினர் ஏற்பாடு செய்த சிறந்த மிளகு விசாயத்திற்கான விருது.

**2017**
- சர்வதேச மிளகு சமூகத்தினர் ஏற்பாடு செய்த சிறந்த மிளகு விசாயத்திற்கான விருது.



# மைல்கற்கள்

**1992 ஜுன் 18**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL), 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. அரச தனியார் மயப்படுத்தும் கொள்கையின் கீழ், கூட்டுத்தாபனங்கள், அரச உடைமை நிறுவனங்கள் என்பனவற்றை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பூரணமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. அப்போது, சபை இல. (V) இன் கீழ் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்பட்ட காணிகள் 1992 ஜுன் 18 இலிருந்து 2004 டிசம்பர் 31 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டு தனியார் முகாமையாளர் ஒருவரினால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

**2007 ஏப்ரல் 18**
அரச பெருந்தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் கீழ் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகம் மாற்றப்பட்டது.

**2010 ஜுன் 18**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகம், அரச வளங்கள் மற்றும் நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றப்பட்டது.

**2015 செப்டம்பர் 21**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், பொது நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2005 ஜனவரி 01**
தனியார் முகாமையாளர் ஒருவரினால் 13 வருட காலமாக சீரற்ற முறையில் நிர்வகிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அப்போதைய அரசாங்கம், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிருவாகத்தை 2005 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து பொறுப்பேற்றுக் கொள்ளத் தீர்மானித்தது. இதனையடுத்து இதன் நிர்வாகம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2006 ஜுன் 06**
தெங்கு அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் கொண்டுவரப்பட்டது.

**2015 பெப்ரவரி 18**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2010 நவம்பர் 16**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், தெங்கு அபிவிருத்தி மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2018 மே 01**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், அரசாங்க தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சுக்கு கைமாற்றப்பட்டது.

**2018 நவம்பர் 09**
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், பெருந்தோட்டக் கைத்தொழிற்துறை அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

# தலைவரின் செய்தி



அன்புள்ள பங்கேற்பாளருக்கு,

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளை முன்வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது அறிக்கை, நிறுவனத்தின் நிலையாதார அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடு பற்றி ஆழமான புரிதல் ஒன்றை வழங்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், தென்கிழக்காசிய வலயத்தில் தோட்டத்துறை மற்றும் விவசாய, வர்த்தக முகாமைத்துவ நிறுவனங்களுள் ஒரு மாதிரியாகத் திகழ்ந்து வருகிறது. இந்த தொலைநோக்கைப் பூர்த்தி செய்வதில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், அதன் தோட்டங்களையும், ஏனைய விவசாயம், வர்த்தகம் என்பவற்றின் உற்பத்தித் திறன், இலாபத்தன்மை மற்றும் நிலையாதாரத் தன்மை என்பவற்றை அதன் இயற்கை, பௌதீக மற்றும் மனித வளங்களை உச்ச பயன்பாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் தொடர்ச்சியாக வைத்திருக்க முயற்சிக்கின்றது. இவ்வாறு செயற்படுகையில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், சுற்றுச் சூழல், நிலையாதாரத் தன்மை மற்றும் சமூகப் பொறுப்பு தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களைப் பின்பற்றுவதன் மூலம் நிறுவனத்தின் சகல பங்கேற்பாளர்களுக்கும், நாட்டிற்கும் தனது கடமையைச் செய்து வருகிறது.

# தலைவரின் செய்தி

உள்நாட்டுப் பெரும்பாக பொருளாதார அழுத்தங்களுக்கு மேலதிக புறச் சூழலில் இருந்து தோன்றிய அழுத்தங்கள், பொருளாதார வளர்ச்சியை மந்தமாக்கிய போதிலும், அது மற்றுமொரு பயனுள்ள வருடமாக அமைந்திருந்தது. வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, நாம் ஒரு குறிப்பிட்ட நில அலகின் இலாபகரத் தன்மையைப் பன்முகப்படுத்தல் மூலம் அதிகரிக்க எத்தனிக்கும் அதேவேளை, எமது பிரதான பயிர்ச் செய்கையான தெங்கு உற்பத்தியையும் மேம்படுத்தி வருகின்றோம்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் நிறுவனத்தின் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 189 மில்லியனைப் பதிவு செய்து ஒரு பலமான செயற்பாட்டைப் பெற்றுக்கொடுத்தமையை உறுதிப்படுத்துகிறது. அதேவேளை, கடந்த வருடத்தில் இது, 17% வளர்ச்சியையும் காட்டுகிறது. 2018 ஆம் நிதியாண்டில் வருமானம் 11% ஆல் அதிகரித்து, ரூபா 613 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், தென்னைப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் வலுவான அபிவிருத்தியைக் காட்டியுள்ளன. தென்னை உற்பத்தி 1.9 மில்லியன் தேங்காய் விதைகள் மூலம் உயர்வடைந்து, தெங்குத் துறையின் வருவாய் ரூபா 73 மில்லியனாக அதிகரித்து கடந்த வருடத்தில் 18% உயர்வைப் பதிவு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் சாதகமான மழை வீழ்ச்சியின் பின்னடைவு காரணமாக, 2018 ஆம் ஆண்டில் பெருமளவில் தெங்கு அபிவிருத்தி செய்யப்படும் பிரதேசங்கள் பாதிப்படைந்தன. இதன் விளைவாக, ஒட்டுமொத்த வளர்ச்சி 7.1% ஆகக் குறைவடைந்தது. தேசிய தெங்கு உற்பத்தியில் வீழ்ச்சியடைந்த இந்தப் போக்கு, 2018 ஆம் ஆண்டில் மீள வலுப்பெற்றது. ஆகவே, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தியில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் அதிக செயற்பாட்டைக் காட்டியது. 2018 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி, தென்னை சார்ந்த பல்வேறு பொருட்களின் உற்பத்தி அளவு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 இல் குறைவடைந்துள்ளது. இதன்படி, உலர்ந்த தேங்காய் (DC) மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி என்பன கணிசமான அளவு வீழ்ச்சியடைந்திருந்தன. மேலும், தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் வீழ்ச்சிடைந்து காணப்பட்டது. அதேவேளை, தேங்காய் எண்ணெய்க்கு நெருக்கமான மாற்றுப் பொருளாக இருக்கும் பனை எண்ணெய் இறக்குமதி 2018 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டது.

தேசிய இறப்பர் உற்பத்தி 0.6% ஆல் வீழ்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 83.1 மில்லியன் கிலோ கிராமுடன் ஒப்பிடுகையில், 2018 இல் 82.6 மில்லின் கிலோ கிராம் உற்பத்தியைப் பதிவு செய்தது.

தோட்டப் பிரதேசங்களில் இறப்பர் வெட்டும் காலங்களில் பெய்த தொடர் மழை காரணமாகவும், உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரித்த செலவு மற்றும் தோட்டத்துறைகளின் மோசமான நிர்வாகம் என்பன காரணமாகவும், 2018 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தியில் விழ்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டு காலப்பகுதியில் இறப்பர் உற்பத்தி ஒரு வீழ்ச்சிப் போக்கை காட்டியுள்ளது. அதன் பின் இறப்பர் பயிர்ச் செய்கை பண்ணப்படும் பாரிய பிரதேசங்களில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக, கணிசமான அளவு உற்பத்தி அதிகரித்தது. நிறுவனத்தின் இறப்பர் உற்பத்தி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 6,408 கிலோ கிராமினால் வீழ்ச்சியடைந்து 5% குறைவைக் காட்டியது. இதற்கு மிகப்பிரதான காரணம், முதிர்ச்சியடைந்த இறப்பர் தோட்டங்களைப் பிடுங்கி அகற்றியதாகும். நிறுவனத்தின் கடந்த வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று, நிறுவனம், அனைத்து சாத்தியமான இறப்பர் தோட்டங்களையும் உயர்ந்த அறுவடையைப் பெற்றுக் கொடுக்கின்ற ஏற்றுமதிப் பயிர்களான மிளகு மற்றும் கறுவா என்பவற்றை பயிர் செய்கை பண்ணப்படும் தீர்மானத்தை மேற்கொண்டது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் நடவடிக்கை, கடந்த வருடத்தைப் போன்றே 2018 ஆம் ஆண்டிலும், தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் வலுக்குன்றியது. இந்த வீழச்சியடைந்த உற்பத்திக்கு மிகப்பிரதான காரணம், வரண்ட காலநிலை மற்றும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் ஏற்பட்ட மழை வீழ்ச்சி வடிவங்களில் காணப்பட்ட வழமைக்கு மாறான மாற்றமாகும்.

நிறுவனத்தின், இடைப் பயிர்ச் செய்கைத் துறையும் மறுபரிசீலனைக்கு உட்பட்ட வருடத்தில் குறைவு ஒன்றைப் பதிவு செய்து, 2017 இல் பதிவு செய்யப்பட்ட 27.5 மில்லியன் ரூபா வருவாயுடன் ஒப்பிடுகையில், ரூபா 4 மில்லியன் வீழ்ச்சியை காட்டியது.

றப்புட்டான் மூலம் பெறப்பட்ட வருமானம், ரூபா 7.8 மில்லியனில் இருந்து ரூபா 6.5 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டியது. இதற்குக் காரணம், காற்றினால் சுமார் ஒரு மில்லியன் பழகங்கள் சேதமடைந்தமையாகும். இல்லையெனில், 2018 இல் றம்புட்டானில் இருந்து உயர்ந்த வருமானத்தைப் பெற்றிருக்கலாம். 2018 ஆம் ஆண்டில் மிளகும் ஒரு சரிவைக் காட்டியது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 4.3 மில்லியனாக இருந்த வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1.1 மில்லியனாகக் குறைவடைந்து, ரூபா 3.2 மில்லியனைக் காட்டியது. இதற்கு பிரதான காரணம், விலை சரிவினால் தூண்டப்பட்ட உற்பத்திக் குறைப்பாகும்.

பூப் பூக்கும் காலங்கள் மற்றும் கனியாகும் காலங்களின் போது, பிரதானமாக மிளகுப் பயிர் செய்யப்படும் பிரதேசங்களில் நிலவிய சாதகமற்ற காலநிலை காரணமாக, தேசிய மிளகு உற்பத்தி 31.9% ஆகக் குறைவடைந்து 20,135 மெற்றிக் தொன் உற்பத்தியைப் பதிவு செய்தது.

# தலைவரின் செய்தி

இதேவேளை, பண்ணை வாயில் மற்றும் ஏலத்தில் விற்கப்படும் விலைகள் என்பன மிளகு உற்பத்தியில் கணிசமான குறைவைப் பதிவு செய்து, 30% ஆகக் காட்டியது. இதற்கான பிரதான காரணம், உலக சந்தை விலைகளில் ஏற்பட்ட விழ்ச்சிப் போக்கு மற்றும் குறைந்த தரத்தையுடைய மிளகு இறக்குமதி செய்யப்பட்டு வணிக உடன்படிக்கைகளின் கீழ் மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டமையாகும்.

காலம் கடந்து கனியாகியமை காரணமாக, 2017 ஆம் ஆண்டு மா மரங்களில் கிடைக்கப் பெற்ற ரூபா 5.5 மில்லியன் வருமானம், 2018 இல் ரூபா 4.2 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டு, கணிசமான அளவு வீழ்ச்சியைக் காட்டியது. எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மரமுந்திரிகை உற்பத்தி சிறப்பாக இருந்தமையினால் வருமானம் ரூபா 10 மில்லியனால் அதிகரித்தது. (2017 - உற்பத்தி ரூபா 6.2 மில்லியன்) இதுவே, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த வருமானமாகும். அத்தனகல்ல பிரதேச தோட்டத்திலுள்ள தன்சல்வத்த பிரிவில் துர்யன் உற்பத்தி மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வருவாய்க்கு 1.2 மில்லியன் ரூபாவை சேர்த்தது. சமீப காலங்களில் நிறுவப்பட்ட கறுவாத் தோட்டங்களும் 2018 இல் அறுவடை செய்யப்பட்டு, முதல் முறையாக கறுவாவின் இலாபத்தை அதிகரித்தது. 2017 இல் பதிவு செய்யப்பட்ட ஒரு ரூபா மில்லியனோடு ஒப்பிடுகின்ற போது, இவ்வருட வருமானம் ரூபா 1.4 மில்லியனாகும்.

ஏனைய வருமான வழிமுறைகளும் 2018 ஆம் ஆண்டில் பலவீனமடைந்தன. இறக்குமதி செய்யப்பட்ட மரப் பலகைகளுக்கு இருந்த தேவை காரணமாக, தென்னை மரங்களின் விற்பனையும் குறைவடைந்தன. இலங்கையின் மரக் கூட்டுத் தாபனத்தில் மரங்களின் விலை உயர்வு திருத்தியடைக்கப்பட்டதன் காரணமாக, 2017 ஆம ஆண்டில் உயிரியல் சொத்துக்களில் மதிப்பீட்டு இலாபம் ரூபா 48 மில்லியனுக்கும் கூடுதலாக அதிகரித்து இதன் வருமானம் 2018 இல் 19 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 31.8 மில்லியனினால் செயற்பாட்டு வருமானத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. அன்னாசி, இஞ்சி சோற்றுக் கற்றாளை, வெற்றிலை போன்ற குறுங்காலப் பயிர்களை விவசாயம் செய்வதற்கு வெளிப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு வசதி அடிப்படையில் விரிவாக்கப்பட்ட உப குத்தகை வசதியின் விளைவாக, 2018 ஆம் வருடத்தில் ரூபா 2.6 மில்லியன் வருமானத்தை கம்பனி அதிகரிப்பாகப் பெற்றுக்கொண்டதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

இந்த விடயம், இரு திறத்தவர்களுக்கும் வெற்றி நிலைமையைத் தருகிறது என்பதை குறிப்பிட வேண்டியது அவசியமாகும். நிறுவனத்தின் நோக்கில் பார்க்கும் போது, இது, இன்னுமொரு மேலதிக வருமானமாக இருக்கும் அதேவேளை, பயிர்ச் செய்கையாளர் விவசாய களை கட்டுப்படுத்துவதை மேற்கொள்வதனால், நிறுவனத்திற்கு இது, செலவைச் சேமிக்கும் ஒரு உபாயமாகவும் காணப்படுகிறது. மேலும், இது, எமது தோட்டங்களில் நுண்ணிய உயிரியல் காலநிலையை உருவாக்குகிறது. இது எமக்கு உள்ளார்ந்த நன்மைகளை அளிக்கிறது. இதனைவிட நாம் தேங்காய் விதைகளின் வளர்ச்சி புலப்படுகின்ற வேறுபாட்டை காட்டக் கூடியதாகவும், சாத்தியமாகவும் உள்ள நிலங்களில் புதிய / கீழ், தென்னைத் தோட்டங்களை அறிமுகப்படுத்துகிறோம். மறுபுறத்தில் இந்தத் திட்டம், கிராம மக்களுக்கு கணிசமான அளவு மேலதிக வருமானத்தைப் பெறுவதற்கு உறுதுணையாக உள்ள அதேவேளை, தேசிய உற்பத்திக்கும் பங்களிப்பைப் பெற்றுக்கொடுக்கிறது.

நீர்ப்பாசன முறைமைகளை அமுல்படுத்துவதன் மூலமும், தேங்காய் மட்டை குழிகள் போன்ற ஈரப்பாதுகாப்பு முறைகளைச் செயற்படுத்துவதன் மூலமும் விவசாய உற்பத்தி மீது காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பல உபாயங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

### எமது மக்கள்

தரம், உற்பத்தித் திறன், தொழில்முனைவு, பெறுமதி உருவாக்கம், இலாபத்தன்மை, சூழல் நட்புறவு மற்றும் கூட்டுறவு சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற நேர்மையான தகுதி வாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் பணியாளர் தொகுதியைக் கட்டியெழுப்புவதில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம். எம்முடைய பணியாட்களை மேம்படுத்துவதில் நாம் இரண்டு வகையான அணுகுமுறைகளை கையாள்கின்றோம். முதலாவது, எமது ஊழியர்களுக்கு செயற்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும், சிறந்த வசிப்பிட சலுகைள் போன்ற நிதி அல்லாத அனுகூலங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய நிதி அனுகூலங்களை எமது பணியாளர்களுக்கு வழங்கி வருகின்றோம். இதன் விளைவாக, இந்த வருடத்தின் போது, 26 விடுதிகளை நிர்மாணிப்பதற்கு கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதற்கு மேலதிகமாக, அலுவலகப் பொறுப்பு அதிகாரிகளுக்குரிய 15 விடுதிகள் நிர்மாணிக்கப்பபட்டன. இதனைவிட, தொலைதூர பிரதேசங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு மின்சாரம், நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கியுள்ளோம். மேலும், சில ஊழியர்களுக்கு சூரிய சக்தி முறைமைகளும்,

# தலைவரின் செய்தி

இலவசமாக மண்ணெண்ணெய் மற்றும் தெங்காய்களும் வழங்கப்பட்டன. இரண்டாவதாக, தொடர்ச்சியான பயிற்சி மற்றும் திறன்கள் என்பவற்றின் மூலம் அவர்களின் தற்போதைய அறிவையும், திறமையையும் வளர்த்துள்ளோம். இந்த நிதியாண்டின் போது, அனைத்து மட்ட ஊழியர்களையும் உள்வாங்கிக் கொள்ளும் அடிப்படையில் பல எண்ணிக்கையான பயிற்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

## பூச்சியக் காடழிப்பு மற்றும் பொறுப்புடனான பயிர் நடுகை நடவடிக்கை

எமது எல்லைக்கு உட்பட்ட ஒவ்வொரு நில அளவையையும் பயன்படுத்துவதன் மூலம், பொறுப்பான நடுகைச் செய்கைக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். மேலும், அரசாங்கக் காணிகளை காடழிப்பு மற்றும் தவறான பாவனைகளில் இருந்து பாதுகாக்க நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

பொறுப்பான நடுகையை நோக்கிய எமது முயற்சி, பெரும் பயிர்களுக்கு இடையில் இடைப்பயிர்களை விவசாயம் செய்வதன் மூலம் நிலப் பிரதேசத்தில் இருந்து அதிகூடிய பலனை பெறுவதும், மண்ணின் தரத்தை மேம்படுத்துவதும் இன்னுமொரு சான்றாக அமைகிறது. இதனைவிட இவ்வாண்டின் போது குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஒவ்வொரு தோட்டத்தின் நிலப்பரப்பையும் சட்ட ரீதியான எல்லைக்குள் வரையறை செய்வதற்காக நில அளவை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் யதார்த்தமான KPI களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக நிறுவப்பட்டது.

## கூட்டுறவு ஆளுகை

தோட்டத்துறை மற்றும் அரசினால் உரிமை கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், அரசாங்கக் கொள்கைகள், சிறந்த கைத்தொழில் நடைமுறைகள் என்பவற்றைப் பின்பற்றுவதன் மூலம், நாம் உயர்ந்த தரத்தை உடைய கூட்டுறவு ஆளுகையையும், வியாபார நடத்தையையும் நிலைநிறுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எவ்வாறாயினும், ஒழுங்குபடுத்தல்கள், வரையறைகள் எமது பணிகளை செயற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களையும், நிதி ஸ்திர நோக்கில் எமது முழுமையான ஆற்றலை நிறுத்துவதும் அத்துடன், எமக்கு இருக்கின்ற தகைமைகளையும் கட்டுப்படுத்துகிறது. கோப் குழு மற்றும் பொது நிறுவன அமைச்சு என்பனவற்றை உள்ளடக்கிய பொருத்தமான அதிகார சபைகளுக்கு இது சம்பந்தமாக கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## சமூக மற்றும் தேசியப் பங்களிப்பு

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், அதன் பங்களிப்பை சமூகத்திற்கும், நாட்டிற்கும் அதிகரிக்கும் நோக்கில், குறுங்கால பயிர்ச் செய்கையை விவசாயம் செய்வதற்காக குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத் தோட்டங்களைச் சூழவுள்ள கிராமத்தவர்களுக்கும், ஏனைய அக்கறை உள்ள திறத்தவர்கள் / வெளிப் பயிர்ச் செய்கையாளர்கள் ஆகியோருக்கு காணிகளைக் குத்தகைக்கு வழங்கியுள்ளது. இது இரு திறத்தவர்களுக்கும் வெற்றியை உருவாக்கியுள்ளது. ஒருபுறம், இது எமது களை பிடுங்குதல் செலவை குறைக்கின்ற அதேவேளை, வெளி விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்திகளுக்கு சிறந்த இலாபத்தை ஈட்டிக்கொடுப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. மேலும், இந்த இலக்கை அடைவதில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், உயர் தரம் கொண்ட முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றது. இந்த நடைமுறைகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் கடந்த பல வருடங்களாக குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வரும் விருதுகள் மற்றும் பரிசுகள் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எமது நிறுவனத்தின் விவசாய மற்றும் நிதிச் செயற்பாடு, எமது தரம் வாய்ந்த முகாமைத்துவ நடைமுறைகளினால் மேலும் சான்றுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில், நாட்டில் எமது நிறுவனம், தொழில்முறை ரீதியாக விவசாய வியாபாரத்தை முகாமைத்துவம் செய்யும் நிறுவனம் என்பது, முன்வைக்கப்பட்டுள்ளது. இது, எமது இலக்கை நோக்கிய திசையில் தென்கிழக்கு ஆசிய வலயத்தில் ஒரு மாதிரி தோட்டக் கம்பனியாக இடம்பெற்றுள்ளது.

## எதிர்காலம் நம்பிக்கையுடன் புலப்படுகிறது

துரதிஷ்டமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் எதிர்நோக்கலாம் என்ற எதிர்பார்ப்பில், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், எதிர்காலத்தை துணிச்சலுடன் நோக்குகின்றது. நிறுவனத்தின் இலாபத் தன்மையை மேலும் அதிகரிப்பதற்காக கரிம தேங்காய் எண்ணெய் போன்ற இறுதி உற்பத்திப் பொருட்களை உள்ளடக்கிய அதன் பொருட்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு சாத்தியமான ஒவ்வொரு வழிமுறையையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், மற்றொரு வருமானம் ஈட்டும் வழிமுறையாக சுற்றுச் சூழல் சுற்றுலாத் திட்டங்களில் காலடி வைத்துள்ளது. நீண்டகாலத்தில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், இதேபாதையை தொடர முயற்சிக்கின்றது. இது, விரிவான நிலப்பகுதி ஒன்றை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் திட்டங்களைப் பன்முகப்படுத்தி, அபிவிருத்தியை விவரிவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்கையில், மேலே குறிப்பிடப்பட்ட சிக்கல்களை தாண்டுவதற்காக பகிரங்க - தனியார் பங்குடைமை முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கையும் எடுக்க விரும்புகிறது.

# தலைவரின் செய்தி

## பாராட்டு

எமது இலக்குகளை அடைவதில் உறுதுணையாக இருந்த பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க மற்றும் தோட்டத்துறை பிரதியமைச்சர் கௌரவ வடிவேல் சுரேஷ் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜே.ஏ.ரஞ்சித் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) திரு.பிஎல்.ஏ.ஜே.தருமகீர்த்தி மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைத்து சபை விடயங்களிலும் ஆர்வத்துடன் பங்குபற்றியமைக்காகவும், சகல உதவிகளையும் எல்லா நேரத்திலும் எனக்கு வழங்கிய எனது சபை உறுப்பினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்த வருடத்தின் போது அர்ப்பணிப்புடன் செயலாற்றிய முகாமைத்துவக் குழுவுக்கும் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எமது நிறுவனத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள எம்முடைய சகல பங்கேற்பாளர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, எதிர்வரும் வருடங்களிலும் உங்களுடைய தொடர்ச்சியான ஆதரவு கிடைக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

கையொப்பமிட்டவர்

ஏ.எம்.பியசோம உபாலி
தலைவர்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி




குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில், 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது தோட்டங்களுக்கான பெறுமதிமிக்க விவசாய உபாய நுட்பம் என்ற எண்ணக்கருவுடன் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய வெற்றிப் பாதையை நோக்கி நிறுவனம் சென்று மற்றுமொரு வெற்றிகரமான வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மறுபரிசீலனைக்கு உட்பட்ட இந்த வருடம், இயற்கை அனர்த்தங்கள், புவியியல் அரசியல் பதற்றம் மற்றும் பல நாடுகளில் இருந்த ஆழமான அரசியல் பாகுபாடுகள் போன்ற பல்வேறு காரணிகளுடன் சவாலுக்கு உட்பட்டது. கடுமையான வறட்சி மற்றும் வெள்ளம் என்பன தொடர்பான தடைகள் காரணமாக, விவசாயத்துறை மோசமாகப் பாதிக்கப்படைந்தன. குறிப்பாக, விவசாயம் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் நிலவிய கடுமையான வறட்சி நிலைமைகள், விவசாய நடவடிக்கைகளின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிதுள்ளன.

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

மேலே கூறப்பட்ட சவால்களுக்கு மத்தியில், 2018 ஆம் ஆண்டு குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தைப் பொறுத்தவரை ஒரு உற்சாகம் மிக்க வருடமாக அமைந்திருந்தது. இந்த வருடத்தில் நாம் பல்வேறு மைல் கற்களை அடைந்துள்ளோம். இதன் மூலம் நாம் இலங்கையில் முன்னணி மிக்க பன்முகப்படுத்தப்பட்ட தெங்கு உற்பத்தி நிறுவனமாக வரும் எமது இலக்கை அடைவதற்கு வழி ஏற்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மிளகு சமூகத்தினரில் 46வது அமர்வில் சிறந்த மிளகு பயிரிடுபவர் என்ற விருது வழங்கப்பட்டதே மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியில் அடைந்த மிக முக்கியமான மைல்கலாகும். எமது உபாய நுட்பம் மற்றும் திடமான அடிப்படைகள் என்பவற்றின் காரணமாகவே எம்மால் இலாபத் தன்மையை அடைவதற்கான வாய்ப்பு கிடைத்தது என்பதை பெரு மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றேன்.

### தெங்குத்துறை

மீளாய்வுக்கு உட்பட்ட நிதியாண்டில், கடந்த வருடம் பெற்ற 10.64 மில்லியன் தேங்காய் விதைகளோடு ஒப்பிடுகையில், இவ்வாண்டில் 12.55 மில்லியன் தேங்காய் அறுவடையை எமது நிறுவனம் பெற்றுக் கொண்டது. இது, 18% அதிகரிப்பாகும். சிறந்த உரமிடுகை மற்றும் ஏனைய அறுவடையை முன்னேற்றும் பொறிமுறைகளே இந்த அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தவையாகும். இவை கடந்த வருடத்தில் நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டன. தேங்காய் மட்டைகளுடன் ஓகானிக் உரமிடும் செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின், உரமிடும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட செலவுத் தொகை குறைக்கப்பட்டதோடு, அறுவடையும் அதிகரித்தது. வறண்ட விவசாய - காலநிலை வலயத்திற்குள் குருநாகல் பெருந்தோட்ட நிறுவன தோட்டங்கள் காலநிலை மாற்றத்தினால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. எனினும், பாதகமான வறட்சி தாக்கங்கள், பொருத்தமான விவசாய நடைமுறைகளினால் தணிக்கப்பட்டது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தினால் பேணப்பட்ட அதன் சிறந்த விவசாய மற்றும் கள முகாமைத்துவ நடைமுறைகள் என்பன கடந்த வருடத்தின் போது உச்ச பலன்களைப் பெற்றுக்கொடுத்தன.

மீளாய்வுக்கு உட்பட்ட நிதியாண்டின் முடிவில், ஒரு ஏக்கருக்கான மரங்களின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்ததுடன், நடவு மற்றும் நிரப்புதல் என்பன அசாதாரணமான சாதகப் போக்குகளைக் காண்பித்துள்ளன. இது, நிதியாண்டின் முடிவில் வலுவான விளைச்சலை உறுதி செய்ததோடு, எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### இறப்பர் துறை

தேசிய இறப்பர் உற்பத்தி 0.6% வீழ்ச்சியைக் காண்பித்துள்ளது. இந்தக் கைத்தொழில் துறை, உலகளாவிய சந்தைகளின் கேள்வி மற்றும் தேவைகளின் அடிப்படையில் ஏலவிலை, வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தின் கீழ் சிதைவடைந்துள்ளது.
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் இறப்பர் உற்பத்தி, கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் 5% ஆல் வீழ்ச்சியடைந்தது. இதற்கான பிரதான காரணம், பழைய, உற்பத்திக்குப் பொருத்தமற்ற இறப்பர் தோட்டங்களை பிடுங்கி அகற்றுவதும், கறுவா, மிளகு போன்ற ஏனைய பொருத்தமான பயிர் வகைகளை பதிலீடு செய்தமையுமாகும். இது, மாறுபட்ட சந்தையின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் வியாபார மாதிரியை நாம் கையாளுவதற்குரிய ஒரு உண்மையான சான்றாகும்.

### ஏனைய பயிர்கள்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், 2005 ஆம் ஆண்டிலிருந்து, பெரும் வெற்றியுடன், இடைப் பயிர்களை விரிவாகப் பன்முகப்படுத்தி வருகிறது. 2005 ஆம் ஆண்டில் ஏனைய பயிர்களின் விரிவாக்கம் 59.28 ஹெக்டயர்கள் ஆகும். 2018 வில் ஏனைய பயிர்களின் நிலப் பரப்பளவு 568.72 ஹெக்டயராக கணக்கிடப்பட்டது. மரமுந்திரிகை, கறுவா, டிரகன், மா மற்றும் கொய்யா என்பன குருநாகலில் உள்ள உலர் தோட்டங்களில் பயிரிடப்பட்டன. றம்புட்டான் மற்றும் துர்யான் போன்றவை கம்பஹாவிலுள்ள ஈர நிலப் பிரதேசங்களில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில், ஏனைய பயிர்துறை குறிப்பிட்டுக் காட்டக்கூடிய வளர்ச்சியைப் பிரதிபலித்தன. எனினும், கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், இடியுடன் கூடிய மழை மற்றும் மோசமான காலநிலை என்பன இடைப் பயிர்களிலிருந்து பெறும் வருமானத்தை 2018 இல் 04 மில்லியனால் வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

### மூலோபாயம் மற்றும் கவனம்

நிதி ஒருபுறமிருக்க, நாம் செயற்பாட்டு ஒழுக்கம் மற்றும் தொடர்ச்சியான செயன்முறையில் மேம்படுத்தல்கள் என்பவற்றை பின்பற்றுவதில் உறுதியாக இருப்பதை நினைவுபடுத்தினோம். இவை, இவ்வருடத்தில் ஏற்பட்ட சவால்களைச் சமாளிப்பதற்கான திறவுகோல்கள் என நான்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

நம்புகிறேன். மேலும், நாம் எமது முக்கியமான வணிகத்திலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

எமது முக்கிய சக்திகளையும் ஒருங்கிணைத்து, நாம் பெறுமதி மாற்றத்தை மறுபரிசீலனை செய்துள்ளதோடு, நீண்ட காலத்தில் வளர்ச்சியில் நிலையாக இருப்பதிலுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளைக் கவனத்தில் கொண்டு, எமது ஒவ்வொரு துறையிலுமுடைய போட்டிப் போக்கை மதிப்பீடு செய்துள்ளோம். கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் பொதுத் திட்டங்கள் (PPP) இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அத்துடன், சுற்றுச் சூழல், உல்லாசப் பிரயாணம் மற்றும் மாறுபட்ட சூழலுடன் தொடர்புடைய திட்டங்கள் என்பன எமது சிந்தனையில் இருப்பதோடு, நாம் காலநிலை மாற்றங்களையும் மேலும், சந்தைப்படுத்தல் அணுகுமுறையில் இருந்து பார்க்கும் போது, பல்வேறுபட்ட உபாய நுட்பங்கள் மூலம் எமது நேரடியான சந்தைப்படுத்தல் முயற்சிகளை விரைவு படுத்தியுள்ளோம். இது, சாதகமான பெறுபேறுகளை எமக்குப் பெற்றுக் கொடுத்துள்ளன. இதேவேளை, தென்னையின் கீழ் எமது பன்முகப்படுத்தல் முயற்சிகளுக்கு சமாந்தரமாக, நாம் திட்பமான விவசாய நடைமுறைகளை மேற்கொண்டு வரும் உபாய நுட்பத்தின் ஒரு பகுதியாக முதலீடு செய்துள்ளோம். இது, எதிர்காலத்தில் அதிகூடிய நிலையாதார வளர்ச்சியை நோக்கி நகரும். ஏற்கனவே, நாம் உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமைகளை உள்வாங்கியுள்ளதோடு, எமது தோட்டங்களுக்கான நீர்ப்பாசன முறை ஊடாக ஆரோக்கிய உரமிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைவிடப்பட்ட, செயலற்ற சில தோட்டங்களில் விதையற்ற பலா மரங்களை நடுகை செய்வதற்கான ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இவற்றை ஏனைய பிரதேசங்களில் பன்முகப்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் கண்காணித்து வருகின்றோம். இது, நாம் கால்பதிக்க இருக்கும் சுற்றுச் சூழல் / விவசாய உல்லாசப் பிரயாணத்துறைக்கு உதவியாக அமைந்திருக்கும்.

### ஆளுகை மற்றும் பணி மேற்பார்வை

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தில் வலுவான கூட்டுறவு ஆளுகை, நிலையான வர்த்தகத்தைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமான மூல காரணியாகும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எனவே, எமது சகல பங்குபற்றுநர்களுக்குரிய ஒரு பகுதியாக ஆளுகை நடைமுறைகளில் உயர்ந்த தராதரங்களைப் பேணுவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். சபையானது, நிறுவனம் எதிர்கொள்ளக்கூடிய இடர்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும், சாதகமான கையாள்கைக்கும், கைத்தொழிற்துறை எதிர்கொள்ளக்கூடிய சவால்களில் இருந்து மீள்வதற்கு உரிய வகையில் முகாமைத்துவத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறது என்பதை நான் மீள வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

### எதிர்கால கண்ணோட்டம்

தோட்டங்களின் நிலையாதார அபிவிருத்திக்கான நீண்டகால உபாய நுட்பத்துடன் இணங்குகின்ற வகையில், நாம் அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தல் திட்டங்களை தொடரவுள்ளோம். ஒரு உபாய நுட்ப மட்டம் என்ற அடிப்படையில், எமது நீண்டகால வழிகாட்டி, தொடர்ச்சியான அபிவிருத்தி மீது இருக்கின்றது. அத்துடன், பல்வேறுபட்ட பயிர் பெறுமதி உருவாக்க முயற்சிகள் ஊடாக பன்முகப்படுத்தலை நோக்கிய அபிவிருத்தியை ஒருங்கிணைத்து, எமது முக்கிய தோட்டத்துறை வர்த்தகத்தை நோக்கிய வளர்ச்சியில் பயணம் செய்கிறோம். இது, நிறுவனம் ஒரு முதன்மை தயாரிப்பாளர் என்ற அந்தஸ்தில் இருந்து பெறுமதி கூட்டப்பட்ட நடைமுறை நிறுவனம் ஒன்றாக நிலைமாற்றம் அடைவதன் மூலம், அதன் நீண்டகால நிலையாதாரத் தன்மையை உறுதி செய்கிறது.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சிறந்த எதிர்காலம் இருக்குமென நான் நம்புகிறேன். மீட்பு மெதுவான வேகத்தில் நடைபெற்று வருகின்ற போதிலும், தெங்குக் கைத்தொழிலுக்கு உள்நாட்டில் இருக்கின்ற தேவை அதிகரித்துள்ளது. எனவே, நீண்டகால நன்மைகளை அறுவடை செய்வதற்கு நாம் தயாராக இருப்பது முக்கியமாகும். இறப்பர் தொழிற்துறை 2019 ஆம் ஆண்டில் மீண்டும் முன்னேற்றமடையும் எனவும், இது கடந்த 6 ஆண்டுகளில் ஏற்பட்ட கஷ்டங்களை முடிவுக்கு கொண்டுவரும் எனவும் நான் நம்பிக்கை கொள்கின்றேன். இதனாலேயே முன்னோக்கிச் செல்லும் போது, நாம் வியாபாரத் துறைகளை நீண்டகால வெற்றியை அளிக்கும் வகையில் நிலையாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவதோடு, வியாபாரத்தின் அனைத்துப் பங்குபற்றுநர்களுக்கும் பெறுமதியை சேர்க்கின்ற வளர்ந்து வரும் வாய்ப்புக்களின் முழுமையான பயனை அடைவதிலும் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இதேவேளை, கடந்த வருடங்களாக எமது வெற்றியைத் தக்க வைத்துக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த முக்கியமான எண்ணக்கருக்களையும் நாம்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றோம். இதன் மூலம் விளங்கிக் கொள்வது யாதெனில், பெறுமதியை உருவாக்குவதில் முன்னணியில் இருப்பதற்கு வினைத்திறன் மற்றும் புதுமைகளை உருவாக்குதல் என்பவற்றில் அசைக்க முடியாத கவனத்தைச் செலுத்துவதாகும்.

சுற்றுச் சூழல், உல்லாசப் பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாண விவசாயத் துறைகளில் ஆரம்பப் படிகளை எடுத்து வைக்க நாம் எதிர்பார்க்கின்றோம். இவை, எமது நிறுவனத்திற்கு மாத்திரமன்றி, முழு நாட்டிற்கும் பலாபலன்களை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த முயற்சிகளையும், ஏனைய சுற்றுச் சூழல் முயற்சிகளையும், எதிர்வரும் வருடங்களில் அமுல்படுத்தி பயனடைய எதிர்பார்க்கிறோம். மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடம், பாதகமான காலநிலைக் காரணிகளால் எமது வளர்ச்சி மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஒரு நிறுவனம் என்ற வகையில், முழுமையான தோட்டக் கைத்தொழிலில் முக்கியமான விவசாய நடைமுறைகளையும், ஏனைய பிரதான முயற்சிகளை எடுப்பதன் மூலம் அதன் பலன்களைப் பகிர்ந்து கொள்வதோடு, நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக இலங்கை தோட்டப் பயிர்களில் முன்னணி வகிப்பதையும் உறுதிப்படுத்தி, பலன்களின் உச்ச பெறுமதியை அடைவதற்கு நாம் பணிபுரிந்து வருகின்றோம்.

#### அங்கீகாரங்கள்

பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க, தோட்டக் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜே.ஏ.ரஞ்சித், மேலதிகச் செயலாளர்கள், ஏனைய அமைச்சு உத்தியோத்தர்கள் ஆகியோர் எமக்கு வழிகாட்டிகளை வழங்கியதோடு, ஊக்குவிப்பு அளித்தமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

எனது தலைவர் - திரு. பியசோம உபாலி அவர்கள், சளைக்காது, தொடர்ச்சியாக எமக்கு வழிகாட்டியதோடு, சபையின் ஏனைய உறுப்பினர்களால் வழங்கப்பட்ட பெறுமதி மிக்க உள்ளீடுகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் ஆதரவு என்பவற்றுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் லிமிட்டெட் - குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் செயலாளர்கள், ஏனைய பங்குபற்றுநர்கள் மற்றும் இக்காலப் பகுதியின் போது நிறுவனத்திற்கு பல்வேறு வகைகளிலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது வினைத்திறன் மிக்க சிரேஷ்ட முகாமைத்துவக் குழு, பிரதேச தோட்ட மேலதிகாரிகள் மற்றும் ஏனைய சகல ஊழியர்கள் ஆகியோரின் கவனம், அர்ப்பணிப்பு, நம்பிக்கை என்பவற்றுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் ஆதரவு காரணமாகவே குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் தொடர்ச்சியாக குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்துள்ளது.

கையொப்பமிட்டவர்

கையொப்பம்
எஸ்.எம்.எம்.சமரக்கோன்
பிரதம நிறைவேற்று அதிகாரி

# பணிப்பாளர்கள் சபை

## திரு.ஏ.எம்.பியசோம உபாலி
தலைவர்



திரு. பியசோம உபாலி, குருநாகல் பிளாண்டேஷன்ஸ் லிமிட்டெட் (KPL) இனது தலைவர் பதவியில் 2015 ஆம் ஆண்டு தை மாதத்தில் இணைந்து கொண்டார். இவர் தன்னுடன் கூடவே கொண்டு வந்த மிகப்பரந்த அறிவும், வெளிப்பாடும், இந்நிறுவனமானது இன்று உள்ள நிலையை எட்டுவதற்கு மிகவும் செயல்திறன்மிக்க வகையில் பங்காற்றுகின்றது. இவர் மூன்று தசாப்த காலமாக அரசியல் நிர்வாகத் துறையில் ஒப்பற்ற பணியினை ஆற்றிக் கொண்டிருந்த வேளையில், வரலாற்றில் குளியாப்பிட்டிய பிரதேச சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தனிநபராகவும், வயம்பவின் முதலாவது மாகாண சபையின் வடமேல் மாகாண சபையின் துணைத் தலைவராக 1988 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நபராகவும் விளங்குகின்றார்.

இவர், தனது அரசியல் பணியினை ஆரம்பிக்கும் முன்னரே, 1980 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தின் முதல் அபிவிருத்திச் சபையின் அங்கத்தவராகவும், குளியாப்பிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராகவும் பதவிகளை வகித்து, பொதுமக்களிற்குத் தனது சேவைகளை ஆற்றியுள்ளார். அதிலிருந்து திரு. உபாலி அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில், குளியாப்பிட்டிய வாக்காளர் தொகுதியை 1988 ஆம் ஆண்டில் பிரதிநிதித்துவப்படுத்தியும், 1989 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து 16 வருடங்கள், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் குருநாகல் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் இருந்தார்.

இவர் 2002 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலும் அரச போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார். இலங்கை பாராளுமன்றத்தில் இவரது நீண்ட பதவிக் காலத்தின் போது, எண்ணற்ற பதவிகளையும், அவற்றில் சிலவற்றில் துணை அரசாங்க முதல்வராகவும், உதவி அரசாங்க முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். ஜப்பானில் இடம்பெற்ற விவசாய மற்றும் கூட்டுறவுகள் தொடர்பான நிகழ்ச்சி, ரஷ்யாவில் இடம்பெற்ற இளைஞர் விவகார நிகழ்ச்சி, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற அதிகாரப் பகிர்வு தொடர்பான நிகழ்ச்சி உள்ளடங்கலாக பல்வேறு வெளிநாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார். மேற்கூறப்பட்டவற்றுக்கு மேலாக, தனது மாவட்டமான குருநாகலில் மிகவும் கவனத்தைச் செலுத்திய வண்ணம் தேசிய அளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலும், செயல்திறன் மிக்க வகையில் தொடர்புபட்டிருக்கின்றார். திரு. உபாலி அவர்களது சர்வதேச மற்றும் உள்நாட்டின் வாயிலாகப் பல வருடங்களாகக் கிடைத்த வெளிப்பாடும், அனுபவமும், குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட்டினது நேர்நிலையான அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தினை நோக்கியதான ஒரு சொத்தாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

## திரு. எச்.ஏ.பி. துஷித குமார டயஸ்
நிறைவேற்றுப் பணிப்பாளர்



குருநாகலில் மிக ஆழமாக வேரூன்றிய வர்த்தகக் குடும்பத்தில் இருந்து வந்தவர் என்ற அடிப்படையில் திரு. டயஸ் அவர்கள், தனது வாழ்க்கையின் ஆரம்ப காலகட்டத்திலேயே அவர்களது குடும்ப வியாபாரத்தில் தொடர்புபட்டிருக்கின்றார். இவர், தனது கல்வியினை குருநாகல் மலியதேவ கல்லூரியில் பெற்றுக்கொண்டதன் பின்னர், வர்த்தகத்தை விருத்தியடையச் செய்யும் நோக்கில், ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இரண்டு சக்கர டிரக்டர் வண்டிகளை இறக்குமதி செய்யும் அவர்களது வியாபாரத்தில் இணைந்து கொண்டார். அக்காலத்தில் நாட்டிற்கு 'குபோட்டா' கையால் இயக்கும் டிரக்டர்களை இறக்குமதி செய்த முன்னோடிகளில் ஒன்றாக டயஸ் மோட்டர் இன்ன்ஜினியர்ஸ் மற்றும் சேல்ஸ் விளங்கியது. ஜப்பானிற்கும் இலங்கைக்கும் இடையிலான பயணங்களை அதிகளவு மேற்கொண்டிருந்த வேளையில், இந்த வியாபாரத்தை மேலும் விருத்தி செய்துகொள்ளும் வகையில், பாரமான இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் டிரக்டர்கள் போன்ற மேலும் பல இறக்குமதித் துறைகளிலும் இவர் துணிந்து இறங்கினார்.

பின்னாளில் இவ்வியாபாரமானது, LST வர்த்தகத்தின் கீழ் சொத்து விரிவாக்கம், கட்டுமானம், வாடகைக்கு விடுதல் மற்றும் பிற வியாபாரங்களுக்காக வணிகக் கட்டடங்களைப் பராமரித்தல் எனப் பல்வகைப்பட்டது. மேலும், இவர் தென்னை, இறப்பர் பயிர்ச் செய்கைகள் மற்றும் தோட்ட முகாமைத்துவங்களிலும் ஈடுபட்டுள்ளார். திரு. துசித அவர்கள், அப்பகுதியில் உள்ள கீழ் மட்ட சமூகத்தினரை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தியதுடன். நன்கு அறியப்பட்ட ஒரு கொடையாளியும் ஆவார்.

# பணிப்பாளர்கள் சபை

திரு. எம்.ரீ.பி.குலசூரிய
செயலாற்றுப் பணிப்பாளர்



2018 ஜுலை மாதம் முதல் செயற்படும் வகையில், செயலாற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திரு. குலசூரிய அவர்கள், ஹேவாஹெட்ட மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். இவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்சார் டிப்ளோமாப் பாடநெறியைப் பூர்த்தி செய்துள்ளார். கிராமோதய சபையின் தலைவராக பல வருட காலம் பணியாற்றிய அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். இவர், புத்தசாசன அமைச்சரும் கலகெதர வாக்காளர் ஒழுங்கமைப்பாளருமான காலஞ்சென்ற திரு. டப்ளியூ.எம்.ஜீ.ரி.பண்டா அவர்களின் ஆதரவின் கீழ் 1988 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்திருந்தார்.

அவர் கலகெதர மாநகர சபையின் உறுப்பினராக தொடர்ந்து சுமார் 30 வருட காலம் பணியாற்றியுள்ளார். அந்தக் காலப்பகுதியில், கலகெதர மாநகர சபையின் தலைவராக மூன்று தடவைகளும், அந்த மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவராக மூன்று வருட காலமும் பதவி வகித்துள்ளார். அவர் மாநகர சபையின் உறுப்பினராகச் சேவையாற்றிய காலப்பகுதியில் பல்வேறு சமூக சேவைகளை மேற்கொண்டிருந்தார். இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முறுத்தெனிய சிறி பியரத்ன அறநெறிப் பாடசாலை அவர் ஆற்றிய பணிகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இதற்கு மேலதிகமாக இவரால் முன்னெடுக்கப்பட்ட சமூக நல்வாழ்விற்கான பல உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள். பாடசாலைகள், விகாரைகள், பாதைகள் மற்றும் நீர் வழங்கல் அமைப்புகள் முதலானவற்றை சீர்செய்தமையை உள்ளடக்கும். இவரது பாராட்டத்தக்க சேவைகளைக் கருத்திற் கொண்டு இவருக்கு சியம் மகா நிக்காயவின் அஸ்கிரி அத்தியாயத்தின் தேஷபந்து சங்க சபாவ பட்டம் அளிக்கப்பட்டது.

1992 முதல் 1996 வரை இவர், உள்ளூராட்சி அரசாங்கத் தலைவர்களது அமைப்பின் செயலாளராக இருந்ததுடன், காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் வழிகாட்டலின் கீழ் இலங்கையில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு பாராட்டத்தகு சேவைகளை ஆற்றியுள்ளார்.

இவர் 2010 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டதுடன், வாக்கு ஆதரவின் அடிப்படையில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து இவர், அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன், தற்போது பாராளுமன்றத் தலைவரான மாண்புமிகு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அவர்களின் ஒருங்கிணைப்பு செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

திரு. டப்ளியூ.எம்.டி.பி.அபேரத்ன
பணிப்பாளர்



மார்ச் 2015 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் KPL இனது பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திரு. அபேரத்ன அவர்கள், கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் துறைகளில் பல வருட கால அனுபவம் வாய்ந்தவர் ஆவர். மேலும், குருநாகல் பிளாண்டேஷன்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டினது கணக்காய்வுக் குழுவின் ஒரு அங்கத்தவராகவும் ஏப்ரல் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து சேவையாற்றி வருகின்றார். இவர் தனது தொழிலை தோர்ன்டன் பண்டிதரத்ன அன்ட் கம்பனி நிறுவனத்தில் ஆரம்பித்ததுடன், பின்னாளில் மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா லிமிட்டெட், மாலைதீவின் ஹொலிடே ஐலன்ட் றிசோட், டி.பி.அபேரத்ன அன்ட் கம்பனி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலும் சேவையாற்றினார்.

இவரிடம் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் டிப்ளோமா உள்ளிட்ட பல தொழில் தகைமைகளும் உள்ளன.

மிகவும் தகுதிவாய்ந்த கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தொழில் சார்ந்தவரான திரு. அபேரத்ன, MAAT- இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம், AFA - நிதிக் கணக்காளர்கள் சங்கம் - ஐக்கிய இராச்சியம், FIAB - சர்வதேச கணக்குப் பதிவாளர் சங்கம் - ஐக்கிய இராச்சியம், ACPM - இலங்கை சான்றுபடுத்திய முகாமைக் கணக்கறிஞர் நிறுவகம் (இலங்கைக் கிளையினை நிறுவிய அங்கத்தவர்) (ICMA), இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கம் (APFA) மற்றும் கண்டி றோட்டரி ஹெரிடேஜ் - இலங்கை ஆகிய அமைப்புக்களின் அங்கத்தவரும், அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார்.

# பணிப்பாளர்கள் சபை

**திரு. எம்.ஜீ.டி.இந்துனில் அமரசிங்க**
பணிப்பாளர்



தொழில் ரீதியில் பண்ணையாளரான திரு. இந்துனில் அமரசிங்க, பெருந்தோட்டத் துறையில் சிறப்பு வாய்ந்த தொழிலைக் கொண்டுள்ளார். இவர் இத்தொழில் துறையில் 1999 ஆம் ஆண்டில் கொட்டகல பெருந்தொட்டத்தில் இளநிலை துணை மேலதிகாரியாக சேவையாற்றியதன் மூலம் இணைந்து கொண்டார்.

அவர் 2003 ஆம் ஆண்டில் பின்லேஸ் தேயிலைத் தோட்டத்தில் இணைந்து கொண்டதுடன், அலுப்பொல தோட்டம், Blairlemond தோட்டம், தம்மேரியா ஏ தோட்டம், நாகவில தோட்டம் ஆகியவற்றில் மேலதிகாரியாகவும் தற்போது பின்லேஸிற்குக் கீழே உள்ள பசற குழுவிலுள்ள 1100 ஹெக்டயர்கள் கொண்ட பல பயிர் தம்மேரியா பீ தோட்டத்தை நிர்வகித்து வருகின்றார். இவர், தென்னை, இறப்பர், கறுவா, மிளகு மற்றும் தேயிலை சார்ந்த அனைத்து விடயங்களிலும் அனுபவம் வாய்ந்தவர்.

இவர் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினை வயம்ப பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொண்டார். UVA Executives Association இனது செயலாளராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்.

**திரு. எச்.என்.பி.ஜினசேன**
பணிப்பாளர்



இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பண்ணையாளராக ஏறத்தாள 21 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள திரு. ஜினசேன அவர்கள், 2018 ஜுலை 24 அன்று முதல் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

திரு. நிஷாந்த புஷ்பகுமார ஜினசேன அவர்கள், இலங்கையின் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் ஆகஸ்ட் 1992 இல் கண்காணிப்பு உதவியாளராக இணைந்து கொண்டு, 2005 இல் கண்காணிப்பாளர் பதவிக்கு உயர்வு பெற்றார். அன்று முதல் இவர் இலங்கையின் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் வரும் 1,500 ஊழியர்கள், 100 பணியாளர்கள் மற்றும் நான்கு கண்காணிப்பு உதவியாளர்கள் ஆகியோர்களை கொண்ட மிகப்பெரிய தோட்டமான கலேபொக்க தோட்டத்தை நிர்வகித்து வந்தார்.

2017 இல் இவர், இலங்கையின் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளராக தோட்ட மற்றும் தலைமைக் காரியாலய பணியாட்கள் உள்ளிட்ட 16 தேயிலைத் தோட்டங்கள், ஒரு இறப்பர் தோட்டம் என்பனவற்றை முகாமை செய்யும் வகையில் பதவி உயர்வு பெற்றார். மேலும், இவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் செயலாளராகவும் செயலாற்றி வருகின்றார். இவர் தற்போது இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் விவசாய நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பைத் தொடர்ந்து வருகின்றார்.

# பணிப்பாளர்கள் சபை

## திரு. எச்.ஏ.என்.சமன் குமார
திறைசேரியின் பிரதிநிதி



மார்ச் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குருநாகல் பெருந்தொட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி பதவிக்கும், ஏப்ரல் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவினது தலைவர் பதவிக்கும் நியமிக்கப்பட்ட திரு. குமார அவர்கள், இலங்கையிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களில் மூத்த முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவராகவோ அல்லது சபையின் பணிப்பாளராகவோ கடமையாற்றியதன் மூலம் பெற்றுக் கொண்ட பல வருடகால அனுபவம் வாய்ந்தவர் ஆவார். இவர் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை பல்வேறு அரச துறைகளிலும் அமைச்சுக்களிலும் பணியாற்றியுள்ளார். தற்போது அவர், பொதுத் திறைசேரியில் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தில் பணிப்பாளர்களில் ஒரவராகக் கடமையாற்றி வருகின்றார்.

திரு. குமார அவர்களது முன்னைய சபைப் பதவிகளானவை, 2006 இலிருந்து 2010 வரையில் காணிகள் சீர்திருத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவி, 2008 இலிருந்து 2011 வரையில் கல்ஓயா பிளான்டேஷன்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி, 2009 இலிருந்து 2011 வரை கல்ஓயா ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி, 2010 இலிருந்து 2011 வரையில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பதவி, 2013 இலிருந்து 2015 வரையில் பரந்தன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி, 2015 இலிருந்து 2018 வரையில் திவிநெகும நம்பிக்கை நிதியத்தின் திறைசேரிப் பிரதிநிதி என்பனவற்றை உள்ளடக்குவதோடு, மேற்குறிப்பிட்ட அனைத்து நிறுவனங்களிலும் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது இவர் 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டெட்டினதும், 2018 ஆம் ஆண்டு முதல் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினதும் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார். திரு. குமார வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் பல ஆண்டுகள் பணி புரிந்த அனுபவம் வாய்ந்தவர். தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட நிதி முகாமைத்துவ மின்திறன் திட்டத்தில் பணியாற்றி வருகின்றார். மத்திய அரசின் நிதி அறிக்கையை மாற்றியமைக்கப்பட்ட பண அடிப்படையிலிருந்து முழு சம்பள அடிப்படைக் கணக்கில் குழுவாக மாற்றுவதற்கான தேசிய வழிகாட்டல் குழு போன்ற தேசிய அளவிலான பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல குழுக்களையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிகமாணி (சிறப்பு) பட்டத்தினையும் (2001), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பிரயோக நிதியியலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் (2009), ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் (2013) பெற்றுள்ளார்.

திரு. குமார உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பல தொழில்முறை உறுப்பினர்களைக் கொண்டுள்ளார். அவர் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும், இங்கிலாந்தின் பட்டய பொது நிதி மற்றும் கணக்கியல் நிறுவனத்தின் (CIPFA) உறுப்பினராகவும் உள்ளார். அவர், இலங்கை பட்டய பொது நிதி கணக்கியல் (CPFA) மற்றும் இலங்கையின் பொது நிதி கணக்காளர் நிறுவகம் (APFASL) என்பவற்றின் உறுப்பினருமாவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. எஸ்.எம்.எம்.சமரக்கோன்
B. Sc. (விவசாயம்) சிறப்பு
M. Sc. (விவசாய பொருளாதாரம்)



பிரதிப் பொது முகாமையாளர்
திரு. ஏ.எம்.எஸ்.பி.அத்தநாயக்க
B.Sc. விவசாயம்
M.Sc. விவசாயம்



முகாமையாளர் - நிதி
திரு. பீ.எம்.டீ.ஜீ.பிரேமதிலக
B. Sc. கணக்கியல் மற்றும்
நிதி முகாமைத்துவம் (சிறப்பு),
CBA, MCPM



முகாமையாளர்
மனித வள மற்றும் நிர்வாகம்
திரு. ஐ.ஏ.குணவர்தன
B.B. முகாமைத்துவம் (மனிதவளம்)
சிறப்பு, PG Dip M (இலங்கை)



முகாமையாளர்
பெருந்தோட்டக் கண்காணிப்பு
மற்றும் ஒருங்கிணைப்பு
திரு. எஸ்.எம்.ஆர்.பீ.சத்குமார
B. Sc. (விவசாய விஞ்ஞானம்)
பெருந்தோட்ட முகாமைத்துவத்தில்
விசேடத்துவம்



முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
திரு. ஜே.கே.ஜே.பீ.ஜயவர்தன
B. Sc. (விவசாயம்)
M.Sc. (விவசாய விஸ்தரிப்பு)



கணக்காய்வு முகாமையாளர்
திரு. எம்.எம்.ஜே.குரே
வர்த்தக இளமாணி (சிறப்பு)
CBA

# பிராந்திய அத்தியட்சகர்கள்



திரு. ஜீ.கே.ஏ. ஜயவர்தன



திரு. கே.எல்.எச்.சீ. பெரேரா
விலங்கினப் பராமரிப்பு டிப்ளோமா



திரு. ஆர்.எம்.பீ.யூ. பிரசாந்த
B.V.Sc. பதிவுபெற்ற கால்நடை
அறுவைச் சிகிச்சை
நிபுணரும் பயிற்சியாளரும்



திரு. எம்.ரீ.ஜே.பெரேரா
B.Sc. விவசாயம் (விசேடம்) சிறப்பு



திரு. ஜே.எம்.ஏ.ஏ.முனசிங்க
NDT தொழில்நுட்பம் (விவசாயம்)
B.Sc. பெருந்தோட்ட முகாமைத்துவம்



திரு. டப்ளியூ.எம்.ஜீ.கே.பி. வீரசிங்க
B.Sc. பெருந்தோட்ட முகாமைத்துவம்
MBA



திரு. எஸ்.எல்.பீ.விதானகே
B.Sc. பெருந்தோட்ட முகாமைத்துவம்

# நிலைபேற்றுத்தன்மை அறிக்கை

பருந்தோட்ட நிறுவனம் என்ற வகையில், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தைச் சேர்ந்த நாம் நிலைபேறான தன்மையை, பொருளாதார சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி எனக் கருதுகின்றோம். பொருளாதார நிலைபேறான தன்மை நிறுவனத்தின் நிதித்துறை நிலைபேற்றுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இதன்மூலம் சமூகத்தினருக்கும், பங்குதாரர்களுக்கும் பொருளாதார சந்தர்ப்பங்களும், நன்மைகளும் நிச்சயிக்கப்படுகின்றன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம் என்ற வகையில் நிதித்துறை நிலைபேறான தன்மை, சூழல் நிலைபேறான தன்மையுடன் இணைந்துள்ளதாகும். எனவே, எமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் இயற்கைச் சூழலையும், புவியியல் வழிமுறைகளையும் பாதுகாத்துக் காப்பாற்றுவதில் நாம் அர்ப்பணித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதன் காரணமாக, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது உட்பட நிலத்தையும் நீரையும் நிலைபேறாக உபயோகித்தல், நிலைபேறான விவசாய வழிமுறைகளைப் பிரயோகித்தல் என்பன இதில் அடங்கும்.

பெருந்தொட்டக் காணிகளின் வட்டாரத்தின் சமூக தொடர்புகளினூடாக சமூக நிலைபேண்தகு தன்மையை நிறுவனம் ஊக்குவிக்கின்றது. சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்கள் எமது வணிகத்தின் ஒருங்கிணைந்த ஒரு அங்கமாக இருப்பதால் இந்த சமூகங்களுக்கிடையிலான இடைத் தொடர்பானது சந்தேகத்திற்கிடமின்றி ஒற்றுமையை பலப்படுத்துகின்றது என நாம் நம்புகின்றோம்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் சிறந்த ஆளுமை மூலம் பொதுமக்களுக்கான நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதில் எமது கடப்பாட்டையிட்டு நாம் கவனம் செலுத்தியுள்ளோம். வெளிப்படையான நடைமுறைகள், ஒழுங்கான கண்காணிப்பு, மதிப்பீடு, அறிக்கை சமர்ப்பித்தல் என்பனவற்றின் மூலம் சிறந்த ஆளுமையை நாம் நிச்சயித்துள்ளோம். இவற்றின் அடிப்படையில் இலஞ்ச ஊழலும், தவறான நடவடிக்கைகளும் தவிர்க்கப்படுகின்றன.

### நிலைபேறான விவசாய நடவடிக்கைகள்

நிறுவனத்தின் ஆரம்ப காலத்திலிருந்து நிலைபேறான விவசாய முகாமைத்துவ வழிமுறைகளே எமது முதுகெலும்பாக இருந்து வந்துள்ளது. எமது 08 பெருந்தோட்டங்களிலும் இந்த வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை அவதானிக்க முடியும். அதிகரித்த காணிப் பாவனைத் திறமை, பயிர்கள் பன்முகப்படுத்தல், ஊடுபயிர்ச் செய்கை, தென்னை மரங்களின் கீழான பயிர்ச்செய்கை ஆகிய நடவடிக்கைகள் மூலம் இவை பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒரு ஏக்கருக்கு உச்சக்கட்ட தென்னை மரங்கள் என்பதை ஸ்தாபிப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

2018 ஆம் ஆண்டு முடிவின் போது மொத்த தெங்கு நிலப் பிரதேசங்களில் கீழ் நடுகை செய்யப்பட்ட நிலப்பகுதி 28% (875.33 ஹெக்டயர்) எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இதேகாலப்பகுதியில், முதிர்வடையாத தெங்குத் தோட்டங்களில் ரூபா 87.6 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எமது எல்லாத் தோட்டங்களிலும் ஒரு ஏக்கருக்கு அதிகரித்த தென்னைகளின் எண்ணிக்கையானது, எதிர்காலத் தேங்காய் விளைச்சலை மறுப்பதற்கிடமின்றி ஊக்குவிக்கும். இதன் மூலம் நிறுவனத்தின் நிலபேண் தன்மை நீடித்து நிலை நிறுத்தப்படுகின்றது.

சிறந்த விவசாய வழிமுறைகளான சேதனப் பசளையின் அதிகரித்த உபயோகம், இரசாயனப் பசளையின் பாவனை ஒழுங்கான அடிப்படையில் குறைப்பு, விவசாயக் காணிகளைச் சரிவான முறையில் புனரமைக்கும் தொழில்நுட்பம், வடிகாண்கள், கால்வாய்கள் அமைப்பு என்பன எமது காணிகளில் நிலைபேறான உற்பத்தி அதிகரிப்பை நிச்சயிக்கும். சேதனப் பசளையின் உபயோகம், மண் வளத்தில் ஈரலிப்பை பேணுதல், மண்ணுக்குள் போதிய காற்றோட்டம், மண்ணின் நுண் உயிரியல் நடவடிக்கை என்பனவற்றை நிச்சயிக்கும். இத்தகைய விவசாய வழிமுறைகள் எமது காணிகளின் நிலைபேறான தன்மையை மேம்படச் செய்கின்றன.

பெருந்தோட்டங்களில் இரசாயனப் பசளையின் உபயோகம் குறைப்பு

சுற்றாடல் பாதுகாப்பானது ஒரு நிறுவனத்தின் முக்கிய கவனம் கொள்ளவேண்டிய மையமாக காணப்படுவதால், உயிரியல் மற்றும் இயந்திர கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும், இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலமும், களைக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகள் போன்ற செயற்கை இரசாயனப பயன்பாட்டை குறைக்க சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம்.

### உயிரியல் கட்டுப்பாடு

- தென்னந் தோட்டங்களில் தென்னைகளை

அழிக்கும் வண்டுகள், பூச்சிகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த, சிலந்தி வேட்டைக்கு (நியோனசிலஸ் பரகா) சிலந்தி கட்டுப்பாட்டிற்காக (அஸேரியா கெரெரோனிஸ்) சிலந்தி வேட்டை பாவனையானது (நியோனசிலஸ் பரகா) கட்டுகம்பொலயிலுள்ள முழு உறுதியான ஆய்வு கூடத்தில் தொடர்ச்சியாக ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. இந்த நட்புறவுச் சூழல் தொழில்நுட்பமானது உயர்ந்த உறுதியளிக்கும் முடிவுகளை எடுத்துக் காட்டுகின்றது.

- பெரோமோன் பொறிகள் - பழ தோட்டங்களில் பழ ஈக்கள் (ட்ரோசோபிலா இனங்கள்) மற்றும் தென்னந் தோட்டங்களிலுள்ள சிவப்பு அந்துப் பூச்சிகள் (ரைன்கோபோரஸ் ∴பெருஜினியஸ்) ஆகியவற்றை கட்டுப்படுத்த சிவப்பு எறும்புகள் (சொலெனோபிஸிஸ் இனங்கள்) அறிமுகம்

- மரமுந்திரிகைச் செய்கையில் காணப்படும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவென செந்நிற எறும்புகளை அறிமுகம் செய்தல்.

### இயந்திரவியல் கட்டுப்பாடு

கிருமிநாசினியான கிளைபோசெட்டின் (புடலிாழளயவந) உபயோகம் பற்றி பல்வேறு கருத்தரங்குகளில் விவாதிக்கப்பட்டுள்ளன. அதன் இடத்தில், களைகளைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையாக நாம் பின்வருவனவற்றை சமர்பித்துள்ளோம்.

- உழுதல், தரையைச் சமப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கென இயந்திரங்களை உபயோகித்தல்.
- கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடல்
- காப்புறைப் பயிர்களை வளர்த்தல்
- பசளை சுற்றுவட்டங்களின் ஈரத்தை பாதுகாத்தல்

### சேதனப் பசளையின் உபயோகம்

இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைப்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகள், சேதனப் பசளைப் பயன்பாட்டிற்கு வழி வகுக்கின்றது. இதற்கு மேலதிகமாக, இரசாயனப் பொருட்களின் கையாளல், பாவனை சம்பந்தமான கண்காணிப்பில் விழிப்புடன் இருக்கும் போது, நாம் எமது தோட்டங்களில் இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்துள்ளோம். இவ்வகையான இரசாயனங்களை கையாளும், தெளிக்கும் கள நிலை ஊழியர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான பயிற்சி அளிக்கப்பட்டு கல்வி கற்பிக்கப்படுகின்றது.

### உயிரியல் பன்முகத்தன்மை

உயிரியல் பன்முகத் தன்மையை மேம்படுத்துவதில் எமது சகல நடவடிக்கைகளிலும் சிறப்பாக வேலை செய்கிறோம். தோட்டத்தில் பயிரிடப்பட்ட தற்போதய பரப்பினையும் பொருத்தமான ஊடு பயிர், பலகையின் விரிவாக்கத்திற்கான எதிர்கால பரப்பினையும் அடையாளம் காண மதிப்பீடுகளை வெற்றிகரமாக நாம் மேற்கொண்டுள்ளோம்.

பாவனைக்குரிய உயிரியல் சொத்து என்ற வகையில் மர வளங்களைத் தரும் விருட்சங்களை வளர்ப்பதன் முக்கியத்துவம் முூடு இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதிர்ச்சியடைந்த மரங்கள் சூழல் அபிவிருத்தி அதிகார சபை, வன பரிபாலன திணைக்களம், அமைச்சு, பிரதேச செயலகம் என்பனவற்றிலிருந்து அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் ஒழுங்கான அடிப்படையில் அறுவடை செய்யப்படுகின்றன. பேண்தகு தன்மையை மேம்படுத்துவதில் அறுவடை செய்யப்படும் மரங்களுக்கான மரக் கன்றுகளை எமது நிறுவனம் முறையாக நிறுவியுள்ளது என்பதனைக் குறிப்பிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

### எமது ஊழியர்கள்

#### ஊழியர் நன்மைகளும் ஊக்குவிப்புக்களும்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது, எமது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பானதும் மனதிற்கு உகந்ததும் வெகுமானம் அளிக்கத்தக்கதுமான ஒரு சூழலை வழங்குவதில் அதன் அர்ப்பணிப்பினால் முன்னிலையில் திகழ்கிறது. எமது தொழிலாளர்கள் தகைமையுள்ளதும், அனுபவம் வாய்ந்ததுமான ஒப்பீட்டு அனுகூலத்தைக் கொண்டுள்ளதுடன், பொருத்தமான திறமைகள் மற்றும் அறிவு என்பவற்றைக்கொண்ட மனித முதலீட்டு கலப்பை வளர்ப்பதிலும், கையகப்படுத்துவதிலும் முயல்கின்றனர். குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் 2018 இன் இறுதியில் மொத்த தொழிலாளர் தொகை 1075 பணியாட்களை உள்ளடக்குகிறது.

#### செயற்திறன் அடிப்படையிலான சலுகைகளுக்கான கொடுப்பனவு

நிறுவனமானது, 2005 தொடக்கம் எமது தொழிலாளர்களின் மேம்பட்ட செயற்திறனை ஊக்குவிக்கும் முகமாக செயற்திறன் அடிப்படையிலான சலுகைகளுக்கான கொடுப்பனவை ஆரம்பித்துள்ளதுடன் தொடர்கிறது. 2018 ஆம் ஆண்டில் செயற்திறன் அடிப்படையிலான சலுகைகளுக்கான கொடுப்பனவை ரூபா 29.6 மில்லியனாகச் செலுத்தவுள்ளது. இத்தொகையானது, மாதாந்தக் கொடுப்பனவு பெறும் தொழிலாளர்களுக்கு சம்பளத்தில் இரு மடங்கை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், தினக் கொடுப்பனவுத் தொழிலாளர்களுக்கு 18,000 ரூபாவையும் செலுத்த கணக்கிடப்பட்டுள்ளது. 2017 இல் செலுத்தப்பட்ட சலுகைத் தொகை ரூபா 27.5 மில்லியன் ஆகும்.

# நிலைபேற்றுத்தன்மை அறிக்கை

**எமது சேவையாளர்கள் பெறும் ஏனைய நன்மைகள்**

- குறைந்த வட்டி வீதத்தில் இடர் நிவாரணக் கடன்பாடசாலைப் புத்தகங்களுக்கும் துணி வகைகளுக்குமென வட்டியில்லாக் கடன்கள்
- சகல ஊழியர்களுக்கும் தேங்காய் ஒன்று, ஒரு ரூபா என்ற மிகக் குறைந்த வீதத்தில் மட்டுப்படுதப்பட்ட எண்ணிக்கையான தேங்காய்களை சொந்தப் பாவனைக்கு வழங்குதல்.
- கீழே விழுந்த தேங்காய்களைச் சேகரிப்பதற்கான ஊக்கக் கொடுப்பனவும் காவலாளர்களுக்கு மாதாந்த தின வருகை சம்பந்தமான ஊக்கக்கொடுப்பனவும்
- மின்சாரம் இல்லாத இடங்களில் வசிக்கும் காவலாளிகளுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பனவு
- சகல ஊழியர்களுக்கும் காப்புறுதி வசதிகளும் தொழிலாளர் நட்டஈட்டுக் கொடுப்பனவும்
- நிறைவேற்று அதிகாரிகளுக்கு விபத்துக் காப்புறுதியாக ஒரு மில்லியன் ரூபா தனிப்பட்ட காப்புறுதி
- நிறைவேற்று அதிகாரிகளின் குடும்பங்களுக்கு சுகாதாரக் காப்புறுதியாக ரூபா 400,000
- சேவையாளர்களின் உயர் கல்விக்கென நிதியுதவி
- சேவையாளர்களின் பிள்ளைகளினது உயர் கல்விக்கான புலமைப் பரிசில்கள்
- உபயோகிக்காத மருத்துவ விடுமுறையை ஈடு செய்வதில் ஒரு மாத சம்பளக் கொடுப்பனவு

**இருப்பிட வசதிகள்**

கடந்த காலங்களில் எமது தோட்டங்கள் முழுதும் உள்ள வீடுகளின் நிலைகளை அவிருத்தி செய்ய நாம் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளோம். நி'றுவனமானது, எப்போதும் குடியிருக்கும் தொழிலாளர்கள் குறித்து கவனம் செலுத்துவதுடன், நாம் மின்சார வசதி மற்றும் சுகாதார வசதி என்பவற்றுடன் கூடிய இருப்பிடங்களையும் வழங்கியுள்ளோம். இவ்வருடத்தில் நாம் சில இருப்பிடங்களைப் புதுப்பித்தமைக்கு மேலதிகமாக 07 OIC குடியிருப்புக்களையும், 06 பார்வையாளர் குடிசைகளையும், நீர், மின்சாரம் மற்றும் சுகாதாரம் முதலான தேவையான வசதிகளுடன் அமைத்துள்ளோம்.

**சேவையாளர் பயிற்சியும் அபிவிருத்தியும்**

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது, எமது ஊழியர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவு, திறன், நடத்தைகள் போன்றவற்றினுடனான பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் தொடர்ந்தும் முதலீடு செய்கின்றது. எமது உழியர்களின் தனிப்பட்ட தொடர்ச்சியான கற்றல் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு, பரந்த அளவியிலான உள்ளக, வெளியக பயிற்சி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிற்குள் 11 பயிற்சித் திட்டங்கள் அனைத்து மட்ட ஊழியர்களையும் உள்ளடக்கியதாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதியமாக, எமது ஊழியர்களுக்கான டிப்புளோமா, பட்டம், முதுமாணிப்பட்டம் போன்றவற்றிக்கும் நாம் ஆதரவு வழங்கியுள்ளோம். எமது கள நிலை உழியர்களுக்காக வேலை நேர பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதியமாக, நெற் செய்கைத் துறையில் நிபுணத்துவம் மிக்க நிபுணர்களினுடன் விசேட பயிற்சி திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**சேவையாளருடன் வாழ்நாள் முழுவதற்குமான உறவை ஏற்படுத்துதல்**

சேவையாளருடன் வாழ்நாள் முழுவதற்குமான உறவை ஏற்படுத்துவதில் நிறுவனம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்துள்ளது.

- தொடர்ந்து 11வது வருடமாக இரவு முழுவதற்குமான பிரித் பாராயணம் பூர்த்தி
- குருநாகல் தலைமை அலுவலகத்தில் தொடர்ச்சியாக பத்தாவது வருடமாகவும் பொசோன் பண்டிகையின் போது கிரிபத் தானசாலை.
- ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருடன் வருடாந்த ஒன்று கூடல்
- பெருந்தோட்டங்களுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி
- வருடாந்த சுற்றுலா நடவடிக்கைகள்
- எமது மனிதவள முகாமைத்துவ வழிமுறைகள் சேவையாளர் மத்தியில் உந்துசக்தியை வழங்குவதை இலக்காகக் கொண்டிருந்தன. இதன்பலனாக, உச்சக்கட்ட உற்பத்தி, விசுவாசம், நிறுவனத்திற்கான அர்ப்பணித்த சேவை என்பன பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## KPL உம் சமூகமும்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது, தொடர்ச்சியாக அயலிலுள்ள விவசாயிகளுக்கு நிலத்தினை தங்களது கால்நடைகளை வைத்திருப்பதற்கும், மேய்ச்சலுக்குப் பாவிக்கவும் வசதியளித்துள்ளது. இதனால் KPL க்கு கால்நடைகளின் மேய்ச்சலின் மூலமாக பூச்சிகளை கட்டுப்படுத்தவும், சேதனப் பசளைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதுமான அனுகூலங்களைப் பெறலாம். இந்த செயன்முறையானது தேசிய பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிவகுப்பதோடு, கால்நடைகளின் எண்ணிக்கையை பெரியளவல்

அதிகரிக்கவும் செய்கின்றது. எங்கள் தோட்டங்களில் பண முக்கியத்துவம் வய்ந்த மற்றும் அரைவற்றாத பயிர்களை பயிரிட அண்டை கிராம வாசிகளுக்கு நிறுவனம் வசதி செய்துள்ளது. அவை பொருளாதார முக்கியத்துவம் வாயந்தவை. இந்த முயற்சியானது அவர்களது குடும்ப வருமானத்தையும், விவசாயத்தில் தேசிய உற்பத்தி நிலையையும் மேம்படுத்த உதவுகின்ற அதேவேளை, தோட்டங்களின் மண் கட்டமைப்பில் உயிரியல் மற்றும் சுற்றுச் சூழல் சமநிலையையும் உருவாக்குகின்றது. பாரம்பரிய விவசாய அறிவைக் கொண்ட திறமையான உழைப்பை அடையாளம் கண்டு உள்வாங்கவும் இந்த வழிமுறை நமக்கு உதவுகின்றது.

KPL ஆனது கண்டி ஸ்ரீ தலதா பெரஹர, உள்ளூர் விகாரைகள், பெரஹராக்கள் மற்றும் தேவாலயங்களில் கலாசார விடயங்களுக்காக கொப்பராத் தேங்காய்கள் வழங்கும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. பாடசாலைகள் மற்றும் சமய வணக்கஸ்தலங்களின் கட்டுமான புதுப்பித்தல் பணிகளுக்கான மரக் கோரிக்கைகளையும் நிறுவனம் சாதகமாக கருதுகின்றது. KPL பொருளாதார ரீதியில் தொடர்ந்து நிலைபெறக்கூடிய விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதுடன், சூழல் பாதுகாப்பு, உயிரியல் பன்முகத் தன்மையின் அபிவிருத்தி, அதன் சேவையாளர்கள் மற்றும் எமது நாட்டு மக்கள் ஆகியோரின் நலனை நிச்சயித்தல் என்பனவற்றிலும் கவனம் செலுத்தியுள்ளது.

KPL இடர் முகாமைத்துவத்தை சிறந்த நிர்வாகம் மற்றும் ஆளுகையின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாக அங்கீகரிப்பதால், தோட்டத்துறைக்கு உரிய குறிப்பான பொதுவான இடர்களையும் மேலதிக இடர்களையும் இனங்கண்டுள்ளது. குறிப்பான இடர்கள் இறப்பர், தென்னை மற்றும் ஏனைய இடைப் பயிர்களின் பயிரிடுதல் மற்றும் பதப்படுத்தல் என்பவற்றுடனும் இவை செயற்படுகின்ற நிதிச் சூழலுடனும் தொடர்புபட்டவையாகும். சிறந்த நிதி மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டு முறைமைகள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து வர்த்தக இடர்களை நிர்வாகம் செய்வதில் கவனம் செலுத்துகிறது. பங்குதாரர்கள் முதலீடு மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக மேல் நோக்கிச் செல்லும் இடர்களைப் பயன்படுத்தி, கீழ் நோக்கிச் செல்லும் இடர்களை நீக்குவதற்கு உரிய முறைமைகளின் வினைத்திறனை காலத்திற்குக் காலம் உள்ளகக் கணக்காய்வாளர்களும் முகாமைத்துவக் குழுவும் மீளாய்வு செய்து வருகிறது.

### இடர் கலாசாரம்

பணிப்பாளர் சபை தமது அந்தஸ்தை இனங்கண்டு, அத்தகைய முறைமை ஒன்றில் காணப்படும் விடயங்களோடு இணங்குவதை குறிக்கோளாக் கொண்ட விரிவான இடர் முகாமைத்துவ முறைமயை நிர்வகிப்பதற்கு ஒரு தெளிவான, சீரான தொனி பராமரிக்கப்பட்டுள்ளது. நெறிமுறைக் கொள்கைகளுக்கான அவர்களின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிப்பதிலும், நிாவாகம் தீர்மானம் எடுக்கும் போது பரந்த பங்குதாரர் நிலைமையை கருத்திற் கொள்கிறது. தலைமைத்துவத்துடன் இணங்கி நடப்பதற்கு பணியாட்கள் அத்தகைய நெறிமுறைக் கொள்கைளின் முககியத்துவத்தை அங்கீகரித்ததோடு, தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர்.

### இடரை இனங்காணுதல்

எமது பணியாட்கள் மத்தியில் போதுமான இடர் விழிப்புணர்வை உருவாக்கும் அதேவேளை, எமது நிறுவனத்தின் உயர்மட்ட நிர்வாகம் நிறுவனத்திற்குள் இடர் கலாசாரத்தை உருவாக்குவதற்கு உறுதி பூண்டுள்ளது. நிறுவனம், உள்ளக இடர்களை இனங்காண்பதற்கு கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றி வருகின்றது. செயற்பாட்டு மட்டத்திலும் கூட பணியாட்கள் தமது தொழில்சார் துறைகளில் இருந்து எழுகின்ற இடர்களை அடையாளம் காணுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். வெளிப்புற இடர்களை அடையாளம் காண்பதில் வெளியக அபிவிருத்திகளை உருவாக்குவதிலும் உயர் நிர்வாகம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடர்களை நிறுவனம் வினைத்திறனான கட்டுப்பாட்டு நோக்கங்குக்காக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொதுவான சில இடர்கள் மற்றும் தோட்டத்துறைக்கு உரிய குறிப்பான இடர்கள் என வகைப்படுத்தியுள்ளது.

### செயற்பாட்டு இடர்கள்

தென்னை எமது பிரதான பயிராக தொடர்ந்தும் இருப்பதோடு, நிறுவனத்திற்கு இது முக்கியமான வருமானத்தை ஈட்டித் தருகிறது. உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களில் 70% சமையல் நோக்கங்குக்காக உள்நாட்டில் நுகர்வு செய்யப்படுவதோடு, 30% கைத்தொழில் பாவனைக்காக நுகரப்படுகிறன.

உயரிய பயிர் உற்பத்தி குறைந்த வருடாந்த வருமானத்திற்கு இட்டுச் செல்வதால் இது சந்தை ஸ்திரத்தன்மையற்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. எனினும், KPL அறுவடையின் போது ஒதுக்கி

வைக்கப்படும் தேங்காய்களின் விகிதம் குறைவாக இருப்பதனால் கொள்வனவாளர்களிடம் உயர் தரத்திலான தேங்காய்களை அளிப்பதன் மூலம் மதிப்பை பெற்றுள்ள காரணத்தினால் தெங்கு அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட ஏல விற்பனையில் ஒரு உயர்ந்த நிகர விற்பனைகள் சராசரியை அடையக் கூடியதாக இருந்தது.

அதன் அறுவடை காலங்களில் விநியோகிப்பதற்காக நன்மை பயக்கக்கூடிய உயர் போட்டியிலான சந்தையைக் கொண்ட உள்நாட்டு வாடிக்கையாளர் தளத்தை நிர்வகிப்பதற்கான முயற்சியையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, KPL மோசமான சூழ்நிலைகளில் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு உகந்த இடங்களை அமைத்திருப்பதும் ஏற்றுகின்ற நேரங்களில் நெகிழ்வுத் தன்மையைப் பின்பற்றுகின்றமையும் தேங்காய் மட்டையை வாங்குவோருக்கு வதிவிட வசதிகள் வழங்கப்பட்டிருப்பதும் சேகரிப்பு இடங்களுக்கு இலகுவாக செல்லக்கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வாடிக்கையாளர் நட்புறவுடனான விநியோக முறையை அறிமுகப்படுத்தி இருப்பதனால், கொள்வனவாளர்களிடையே அதிக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாண்டின் போது நீடித்த வறட்சி நிலை அல்லது வெள்ளப் பெருக்கு காரணமாக ஏற்பட்ட காலநிலை தொடர்புடைய சூழ்நிலைகள் எண்ணெய் உட்பட சகல விவசாயப் பயிர்களிலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தின. மோசமான காலநிலை நிலைமைகளுக்கான ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக நிறுவனம் நிலப்போர்வை, தேங்காய் மட்டைகளை புதைத்தல், பயிர்களை மூடுதல், காயப்படுத்துதல், விழிம்பு வடிகால் முறைமைகள், மண்ணின் ஈரப்பதனைப் பாதுகாப்பதற்கான கரிம உரத்தை பயன்படுத்துதல் மற்றும் மண் வளத்தைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைளை நிறுவனம் எடுத்தது. இந்த நடவடிக்கைகள் நம்பிக்கைக்குரிய பெறுபேறுகளை அளித்தபடியால், இறப்பர் தோட்டங்களையும் இத்தகைய காலநிலை மாற்றங்களில் இருந்து பாதுகாப்பதற்கு நிறுவனம் இதையொத்த நடவடிக்கைகளை எடுத்தது. இவை, TRI யினால் பரிந்துரைக்கப்பட்ட உருவங்கள் மற்றும் பாதகமான காலநிலை காரணமாக இழக்கப்படும் பயிர்களின் அளவை குறைத்து இறப்பர் மரங்களை பாதுகாப்பதற்கான மழைப் பாதுகாவலர்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

### பூச்சி மற்றும் நோய்

உயர் தரத்திலான தேங்காய்களுக்கு தொடர்ச்சியான சேதத்தை ஏற்படுத்தக்கூடிய பூச்சிகளும் நோய்களும் தோட்டங்களில் பரவியிருப்பதனால் தற்போது பூச்சி மற்றும் நோய்களுக்கான தொகுப்புகளில் தேங்காய் பூச்சி "Aceria guerreronis", "Plessispa" மற்றும் "Weligama Wilt" ஆகியவற்றை சேர்த்துள்ளது. சூழல் நட்பு ரீதியான பூச்சிக் கொல்லியை அறிமுகப்படுத்தியதன் மூலம் உயிரியல் ரீதியாக தேங்காய் பூச்சி தொற்று வெற்றிளித்துள்ளது. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி எமது ஆய்வுகூடத்தில் பூச்சிக் கொல்லிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது, எமது தோட்டங்களில் பயன்படுத்தப்படுவதோடு, எமது தோட்டங்களுக்கு அருகாமையிலுள்ள தெங்கு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்கப்படுகிறது.

அனுபவம் வாய்ந்த கள ஊழியர்களின் நெருக்கமான மேற்பார்வையுடன் இத்தகைய மரங்களை முன்கூட்டியே கண்டறிதல் மூலம் எமது தோட்டங்களில் உருவாகும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தி அழிக்கக்கூடியதாக இருந்தது. எமது நிறுவனம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கிரமமான பயிற்சிகள் மூலம் எமது கள ஊழியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் அவர்களின் அறிவை புதுப்பித்து வருகிறது.

### தொழிலாளர் பற்றாக்குறை

அறுவடை செய்த தேங்காய் மட்டைகளை சேகரித்தல், தேங்காய் பறித்தல் ஆகியவற்றுக்கு திறமை வாய்ந்த பணியாட்கள் அவசியமாகும். எனினும், கடந்த ஆண்டுகளில் நிறுவனத்தின் முகாமைத்துவம் திறமைவாய்ந்த தொழிலாளர் பற்றாக்குறையை எதிர்நோக்கியது. இது, அன்றாட நிர்வாக நடவடிக்கைகளை முடக்கியது. தேயிலை மற்றும் இறப்பர் போன்றவற்றுக்கு இருக்கக்கூடிய இருப்பிட பணியாட்கள் தெங்குப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தாமையினால், நிறுவனம் கிராமத்தில் இருந்து கிடைக்கக்கூடிய தொழிலாளர்களில் தங்கியிருக்க வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளானது. இதனைத் தவிர, தோட்டங்களை நன்கு பராமரிப்பதற்கு நிறுவனம் களை பிடுங்குதல், வடி கட்டுதல், உரமிடுதல் ஆகிய பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தியதோடு, நியாயமான இரசாயனவியல் களையெடுப்பு பயன்படுத்தப்பட்டது. எமது தொழிலாளர் சக்தியிலிருந்து அதிகூடிய பெறுபேறுகளை நாம் பெறுகின்றோம் என்பது பற்றி கவனம் செலுத்தினாலும், இயந்திர மயமாக்கல் மூலமாகவும், நாம் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுள்ளோம். மேலும், பணியாட்களுக்கு இலவச இருப்பிட வசதிகள், மின்சாரம், நீர், தேங்காய் என்பவற்றை சலுகை விலையில் வழங்கி, அவர்களின்

# இடர் முகாமைத்துவம்

செயற்திறனுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு, போனஸ், பிள்ளைகளின் கல்விக்கான புலமைப் பரிசில்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கான பல்வேறுபட்ட கடன் திட்டங்கள், ஊழியர்களுக்கான இடர் கடன்கள், உரிய காலத்தில் கொடுப்பனவுகளை செலுத்துல், தொழில்முறை ரீதியான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் நட்பு ரீதியான, ஒழுக்கரீதியான வேலை செய்யும் சூழ்நிலையை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிலாளர்கள் தக்கவைத்துக் கொள்ளப்பட்டனர்.

### பயிர் பாதுகாப்பு

தேங்காய் சமையலுக்கு அதிகமாக நுகரக்கூடிய பொருளாக இருப்பதனால் திருடுவதற்கான வாய்ப்பு அதிகம். பல்வேறு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் எமது தோட்டங்கள் பரந்து காணப்படுவதனால் தேங்காய்களை பாதுகாத்தல் பெரும் பிரச்சினையாக இருப்பதோடு, மோசடிகளைக் குறைப்பதற்காக உயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேங்காய்களை மாதம் இரு முறை பறிப்பதனால், திருடுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

எனவே, இதனை நிர்வகிப்பதற்காக நிறுவனம், மாதாந்த அடிப்படையில் அறுவடையின் அளவை 90% வரை நீடித்துள்ளது. இந்த நடைமுறையை வலுப்படுத்துவதற்கு சுற்று வேலிகள் அமைக்கப்பட்டு, கண்காணிப்பாளர்கள், உதவி கண்காணிப்பாளர்கள், கள ஊழியர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு அலுவலர்கள் ஆகியோரின் நெருக்கமான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனுள்ள வகையில் மோசடி குறைக்கப்படுகிறது. கீழே விழுந்த தேங்காய்களை பொறுக்குகின்ற மற்றும் தேங்காய்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்ற காவலாளிகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு மூலம் ஊக்கமளிக்கப்படுகிறது. நிறுவனம் போக்குவரத்தின் போது ஏற்படக்கூடிய இயற்கை அழிவுகள், திருட்டு மற்றும் தீ என்பவற்றினால் ஏற்படும் அழிவுகளை தடுப்பதற்காக பயிர்க் காப்புறுதி செய்துள்ளது.

### காணி கையகப்படுத்தல் சம்பந்தமான ஆபத்து

தேசியத் தேவைகள் பொது மக்கள் தேவைகள் மற்றும் நியதிச் சட்ட பிரமானங்கள் என்பவற்றின் மூலம் நிறுவனத்திற்குரிய காணிகள் கையேற்கப்படுவதற்கான அதிக ஆபாயத்தை நிறுவனம் எதிர்நோக்கி வருகிறது. இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து 1992 ஆம் ஆண்டில் இருந்து மொத்த காணிகளில் இருந்து 20% ஐ KPL இழந்துள்ளது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

### தொழிற்சங்கள் சமூக மற்றும் சுற்றுச் சூழல் மாற்றங்கள்

தொழிற்துறை இணக்கத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதில் KPL தொழிற்சங்கங்கள் மற்றும் இலங்கை தொழில் தருநர் சபை என்பனவற்றோடு கைச்சாத்திட்டு அவற்றின் உறுப்பினராக இருக்கின்றது. இத்தகைய உறுப்புரிமையின் காரணமாக, சம்பளம், சட்டரீதியான நிலுவைத் தொகை என்பனவற்றை உரிய நேரத்தில் வழங்குதல், தொழிலாளர் பிணக்குகள் சம்பந்தமாக உடனடி கவனம் செலுத்துல் போன்றவற்றின் காரணமாக, தொழிலாளர் நல்லுறவு பலப்படுத்தப்பட்டுள்ளது.

### கண்காணிப்பு மற்றும் மீளாய்வு

நிறுவனம் நடைமுறைப்படுத்தும் கட்டுப்பாட்டு முறையில் உள்ள பலவீனங்களை இனங்காணும் நோக்கத்திற்காக காலத்திற்குக் காலம் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ கூறுகளின் செயற்பாடு மற்றும் இருப்பு என்பன மீளாய்வு செய்யப்படுகிறது. இதன் மூலம், தேவையான உள்ளக மற்றும் வெளியக மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நடைமுறையில் இருக்கும் கண்காணிப்பு முறைகளை அல்லது பிரத்தியேக மதிப்பீடுகளை மேற்பார்வையிடும் முழுப்பொறுப்பும் உயர்மட்ட நிர்வாகத்திற்கும், கணக்காய்வுக் குழுவுக்கும் இருந்த போதிலும், எமது உள்ளகக் கணக்காய்வுக் குழு ஒவ்வொரு தோட்டத்திற்கும் சமூகமளித்து, அடிக்கடி கணனி அடிப்படையிலான மேற்பார்வைகளை மேற்கொள்வதோடு, உடனடி அவதானம் தேவைப்படும் விடயங்கள் பற்றி அறிக்கையிடும். இடர் முகாமைத்துவ செயன்முறைகளின் வினைத்திறன் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். இந்தக் கட்டத்தில், பொருத்தமான தகவல்கள் இனங்காணப்பட்டு, நிறுவனத்தின் இடர் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருப்பவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

# கூட்டிணைப்பு ஆளுமை

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் கௌரவம், கூட்டிணைப்பில் பக்கம் சாராமை, வெளிப்படையாக நடவடிக்கை மேற்கொள்ளல், கணக்கியல் தன்மை ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இத்தகைய முக்கியமான கொள்கைகள், நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் சகல தரப்பினருடனும் பலமான உறவை மேற்கொள்ளவென உதவுகின்றன. தார்மீக தரத்திற்கு அமைய நிறுவனத்தின் அடிப்படைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அதன் பங்குதாரர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சகல நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இத்தகைய அர்ப்பணிப்பு, சரியான பங்களிப்பு, அமைப்பு, தகவல் பரிமாற்றம் என்பனவற்றோடு இணைந்துள்ளது. இவையனைத்தும் சட்டபூர்வ இணக்கத்தையும், வர்த்தகத்தின் நிலைபேறான தன்மையையும் நிச்சயிக்கும் வகையில் கொள்கைகள், வழிமுறைகள், செயல்முறைகள் என்பனவற்றில் அடங்கியுள்ளன. இவற்றின் மூலம் வர்த்தக நடவடிக்கையின் பெறுமானமும் அதிகரித்துள்ளது.

### பணிப்பாளர் சபை

நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் பணிப்பாளர் சபையினரே பொறுப்பாகவும், இறுதி பதிலளிப்பவராகவும் உள்ளனர். கூட்டிணைப்பு ஆளுமை வழிமுறைகளுக்கான முக்கிய அமைப்பாகவும் பணிப்பாளர் சபை உள்ளது.

### பொறுப்புணர்வு

முக்கிய கொள்கைகள், பிரதான நோக்கங்கள் என்பனவற்றை பணிப்பாளர் சபை தீர்மானிப்பதோடு அவை நடைமுறைக்கிடப்படுவதையும் நிச்சயிக்கிறது. நிதித்துறைத் தகவல்களின் நேர்மைத்தன்மை, நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் தாக்கம் என்பனவற்றின் இறுதிப் பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

### அமைப்பு

பணிப்பாளர் சபையில் தலைவர் உட்பட 07 நிறைவேற்று அதிகாரம் பெறாத நியமனம் பெற்ற பணிப்பாளர்கள் உள்ளனர். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பணிப்பாளர்கள் குழுவின் உறுப்பினர்கள் பின்வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளனர்:

திரு. டீ.எம்.பண்டாரநாயக்க மற்றும் திரு. ஆர். சிட்னி குலதிலக ஆகியோருக்குப் பதிலாக முறையே செயலாற்றுப் பணிப்பாளராக திரு. எம்.ரீ.பி.குலசூரியவும், திரு. எச்.என்.பி.ஜினசேனவும் 2018 ஜுலை 24 ஆம் திகதி தொடக்கம் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

மாதாந்த அடிப்படையில் சபைக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இத்தகைய கூட்டங்களில் நிறுவனம் சம்பந்தமான முக்கிய தீர்மானங்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மீளாய்வு, சகல நடவடிக்கைகளினதும் முன்னேற்றம், மீள் செலவின மற்றும் மூலதன நடவடிக்கைகள் என்பன ஆராயப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்னராக சபை அங்கத்தவர்களுக்குப் பொருத்தமான ஆவணங்கள் வழங்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் பத்து (10) சபைக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெற்றன:

- 2018 ஜனவரி 25 இல் 339வது சபைக் கூட்டம்
- 2018 மார்ச் 06 இல் 340வது சபைக் கூட்டம்
- 2018 மார்ச் 26 இல் 341வது சபைக் கூட்டம்
- 2018 மே 23 இல் 342வது சபைக் கூட்டம்
- 2018 ஜுன் 28 இல் 343வது சபைக் கூட்டம்
- 2018 ஜுலை 31 இல் 344வது சபைக் கூட்டம்
- 2018 ஆகஸ்ட் 21 இல் 345வது சபைக் கூட்டம்
- 2018 செப்டம்பர் 21 இல் 346வது சபைக் கூட்டம்
- 2018 நவம்பர் 12 இல் 347வது சபைக் கூட்டம்
- 2018 டிசம்பர் 28 இல் 348வது சபைக் கூட்டம்

| | |
|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி - தலைவர் | 10/10 |
| திரு. எச்.ஏ.பி.துஷித குமார டயஸ் - நிறைவேற்றுப் பணிப்பாளர் | 10/10 |
| திரு. எம்.ரீ.பி.குலசூரிய செயலாற்றுப் பணிப்பாளர் (2018.07.24 இல் நியமனம்) | 04/10 |
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார திறைசேரிப் பிரதிநிதி | 08/10 |
| திரு. டப்ளியூ.எம்.டி.பி.அபேரத்ன | 09/10 |
| திரு. எம்.ஜி.டி.இந்துனில் அமரசிங்க | 09/10 |
| திரு. எச்.என்.பி.ஜினசேன (2018.07.24 இல் நியமனம்) | 03/10 |
| திரு. டி.எம்.பண்டாரநாயக்க முன்னாள் செயலாற்றுப் பணிப்பாளர் (2018.07.24 இல் பதவி விலகல்) | 05/10 |
| திரு. ஆர்.சிட்னி குலதிலக (2018.07.24 இல் பதவி விலகல்) | 04/10 |

### சட்டபூவத் தேவைகளைக் கடைப்பிடித்தல்

நிறுவனத்தின் நினைவுக் குறிப்பு, கம்பனியின் அமைப்பு அகவிதி என்பனவற்றோடு, அரச உடைமை வர்த்தக நிறுவனங்களுக்குப் பொருத்தமான சட்டங்களும், பிரமானங்களும் நிறுவனம் கடைப்பிடிப்பதை நிச்சயிப்பதற்கு பணிப்பாளர் சபை சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் அனைத்தும்

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

இலங்கை கணக்கியல் தரங்களைக் கடைப்பிடித்து தயாரிக்கப்படுகின்றன என்பதை சபை நிச்சயிப்பதோடு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுடன் இணங்கியிருப்பதை நிச்சயிப்பதும் சபையின் கடப்பாடாகும்.

### கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளனர். கணக்காய்வுக் குழுவில் மூன்று நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தேவைக்கேற்ற வகையில் கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இலங்கை பொதுத் திறைசேரியின் பிரதிநிதியாகவுள்ள பணிப்பாளர் சபை அங்கத்தவர், கணக்காய்வுக் குழுவின் தலைவராக உள்ளார். பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் பிரதேச அத்தியட்சகர்கள் ஆகியோர் அழைப்பின் பேரில் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கூட்டங்களை கணக்காய்வு முகாமையாளர் ஒழுங்கு செய்வது வழக்கமாகும். கணக்காய்வுக் குழு 2018 ஆம் ஆண்டில் நான்கு (04) முறை கூடியுள்ளது. சமூகமளித்தவர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1வது கணக்காய்வுக் கூட்டம் | 2018.02.02 |
| 2வது கணக்காய்வுக் கூட்டம் | 2018.06.05 |
| 3வது கணக்காய்வுக் கூட்டம் | 2018.06.21 |
| 4வது கணக்காய்வுக் கூட்டம் | 2018.10.05 |

### மேற்குறிப்பிடப்பட்ட கூட்டங்களுக்கு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு அமைந்திருந்தது:

| | |
|---|---|
| திரு. எச்.ஏ.என்.எஸ்.குமார<br>கணக்காய்வுக் குழுவின் தலைவர்<br>பணிப்பாளர் / திறைசேரியின் பிரதிநிதி | 4/4 |
| டப்ளியூ.எம்.டி.பி.அபேரத்ன<br>பணிப்பாளர் | 4/4 |
| திரு. ஆர். சிட்னி குலதிலக<br>பணிப்பாளர்<br>(2018.07.24 இல் பதவி விலகல்) | 1/4 |

### நிதியாண்டின் போது ஏற்பட்ட முன்னேற்றம்

கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்கான அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும் நடைமுறைக்குமென சமர்ப்பிக்கப்படுகின்றன. கணக்காய்வின் எல்லைகளை மீளாய்வு செய்வதோடு, கணக்காய்வுக் குழு கணக்காய்வின் எல்லைகளையும் கண்காணிக்கிறது. அதன் நோக்கம் மற்றும் அதன் நடவடிக்கைகளின் தாக்கம் என்பனவும் அவதானிக்கப்படுகின்றன. எதிர்கால சுபீட்சத்தை முக்கியமாகக் கொண்டு குருநாகல் பெருந்தொட்ட நிறுவனத்தின் நடவடிக்கைகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்வது வழக்கமாகும். முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அது மேற்கொண்ட நடவடிக்கைகள் தற்சமயம் நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் தாக்கம் என்பனவும் வர்த்தகப் பிரிவுகளின் தலைவர்கள் / அத்தியட்சகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு, சரியான வழிமுறைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் மீது கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும், அதற்கான முகாமைத்துவத்தினரின் பதில்களும் கணக்காய்வாளர்களுடனும், முகாமைத்துவத்தினருடனும் கலந்துரையாடப்பட்டு தவறுகளை சீராக்கவென தேவையான ஒழுங்குகள் தீர்மானிக்கப்பட்டன.

உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் இனங்காணப்பட்ட தென்னந் தோட்டங்களின் பலமற்ற தன்மை பற்றி, பிரதம நிறைவேற்று அதிகாரியுடனும், அத்தியட்சகர்களுடனும் கலந்துரையாடப்பட்டன. இறுதியில் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகளுக்கென பொருத்தமான பரிந்துரைகள் கொண்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் இணக்கமின்மை குறித்து கணக்காய்வாளர் குழு பணிப்பாளர்கள் சபையின் கவனத்திற்கு சுட்டிக் காட்டியுள்ளது. கணக்காய்வாளர்கள் குழு எண்ணெய் உற்பத்திக்கான வரவு செலவுப் பட்டியலில் உள்ள பலவீனம், வீழ்ந்த தேங்காய்களின் வீதத்தின் கம்பனிக் கொள்கைக்கு இணங்குதல், கொள்வனவாளரின் நிராகரிப்பு வீதம் என்பவற்றை இனங்கண்டுள்ளது. மேலும், உரமூட்டிகளின் பிரயோகம் தொடர்பான விடயங்கள் தலைமை நிர்வாக அதிகாரியுடன் கண்கணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

மூலதன விடயங்கள் தொடர்பான எழுத்தாக்கங்கள் விபரமாக ஆராயப்பட்டுள்ளதுடன், அனுமதி வழங்கப்பட முன் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடபடி முறைகள் மற்றும் தகைமைகள் என்பன குறித்தும் பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சிறப்பான உள்ளகக் கணக்குப் பதிவேட்டு அறிக்கைகள் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டதுடன், அது பணிப்பாளாகள் சபைக்கு மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டது. வனவிலங்குகளால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கான ஊறு தணிக்கும் முறைகளுக்கான நிறைவு பின்பற்றப்பட்டதுடன், பாதுகாப்பு முறைகளின் பிரயோகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் கணக்காய்வாளர் குழுவினால் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும், புதிய பயிரிடலுக்கு முந்திய கள ஆய்வு, புதிய பயிரிடல் தொடர்பான கிரமமான மேற்பார்வை, ஊடுபயிர்ச் செய்கை, காலநிலை நிலவரங்கள் மற்றும் பிறவகையான அச்சுறுத்தல்கள் என்பன காரணமாக ஏற்படத்தக்க இழப்பீடுகளுக்கான ஊறு தணிப்பு என்பன குறித்து, தோட்டக் கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுக் குழுவுடன் போதுமான வசதிகளுக்கான வாய்ப்பு, அவர்களால் முகம் கொடுக்கப்பட்ட பிரச்சினைகள், பரிந்துரைகள் என்பன குறித்து கலந்தாலோசித்ததுடன், வழக்கமான கால கட்டமைப்புக்கள் மட்டுப்படுத்தாதது உள்ளக கணக்காய்வாளர் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாளர்களால் வழங்கப்பட்ட சேவை குறித்து நன்றி தெரிவிக்க விரும்புவதுடன், நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய அவர்களால் எடுக்கப்படும் முயற்சிகளையும் ஏற்று இணங்குகிறது.

கையொப்பமிட்டவர்

எச்.ஏ.என்.எஸ்.குமார
கணக்காய்வுக் குழுவின் தலைவர்



# நிதித்துறை அறிக்கை

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்கள், 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளுடன் அவர்களது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

### நிறுவனத்தின் சட்ட அந்தஸ்து

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனங்கள், அரச உடைமை வர்த்தக நிறுவனங்கள் என்பனவற்றை உரிமை மாற்றும் ஏற்பாடுகளின் கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது. அது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் PB 1319 என்ற புதிய பதிவிலக்கத்துடன் மீள் பதிவு செய்யப்பட்டது. நிறுவனத்தின் பதிவுபெற்ற அலுவலகம், குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. தனி பங்குதாரர் நிறுவனமாக கம்பனி தொடர்ந்தும் இருந்து வருகிறது. இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியின் செயலாளர் பங்குதாரராக உள்ளார்.

### முக்கிய நடவடிக்கைகளும் வணிகத்தின் தன்மையும்

நிறுவனத்தின் முதன்மை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்த உற்பத்தி மற்றும் தென்னை இறப்பர் ஏனைய பயிர்கள் மற்றும் விவசாய உற்பத்தி என்பனவற்றின் விற்பனை முதலியவற்றை உள்ளடக்கிய விவசாய நடவடிக்கைகளை குறிக்கிறது. மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில், மஹாயாய பகுதியை சேர்ந்த தோட்டங்கள் அத்தனகல்ல பகுதியில் உள்ள தோட்டங்களுடன் இணைக்கப்பட்டன. நிறுவனத்தின் காணிகள், நாரம்மல, கட்டுகம்பொல, குருநாகல், ஹிரியால, தொடங்கஸ்லந்த, தம்பதெனிய, அத்தனகல்ல முதலிய 07 தோட்டங்களைக் கொண்டுள்ள குருநாகல், கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பரந்துள்ளது.

### வைத்திருக்கப்படும் காணிகளின் பரப்பளவு

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், நியதிச் சட்டப் பிரகடனங்கள், தேசியத் தேவைப்பாடுகள் என்பன காரணமாக, காணிகளை பெருமளவில் இழந்துள்ளது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது, கம்பனியின் உருவாக்கத்தின் போது 1992 இல் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட காணிகளில் இருந்து (6,722 ஹெக்டயர்கள்) 26% (1750.88 ஹெக்டயர்கள்) காணிகளை இழந்துள்ளது.

### பிரதேசத் தோட்டங்களின் காணி அளவு

| | பரப்பளவு (ஹெக்டயர்கள்) |
|---|---|
| அத்தனகல்ல | 1114.53 |
| தம்பதெனிய | 462.18 |
| தொடங்கஸ்லந்த | 690.73 |
| ஹிரியால | 980.21 |
| கட்டுகம்பொல | 617.12 |
| குருநாகல் | 555.80 |
| நாரம்மல | 550.55 |
| மொத்தம் | 4,971.12 |

### உற்பத்தி பட்டியல்

தொடங்கஸ்லந்த மற்றும் அத்தனகல்ல ஆகிய பகுதிகள் இறப்பரில் தங்கியுள்ள போதிலும், 07 தோட்டப் பகுதிகளிலும் தென்னை பிரதான பயிராகக் காணப்பட்டு வருகிறது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், தென்னந் தோட்டக் காணிகளில் காலநிலை பொருத்தத்தின் கீழ் ஊடு பயிர்களாக வளரும் ஏனைய பயிர்களையும் பேணி வருகிறது.

### தொடர்ந்து செயற்படும் வழிமுறை

எதிர்காலத்திலும் நிறுவனம் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேவையான வளங்களைக் கொண்டுள்ளது என்பதில் பணிப்பாளர் சபையினர் மன நிறைவடைந்துள்ளதன் காரணமாக, நிதி அறிக்கைகள் “தொடர்ந்து செயற்படும் அடிப்படையில்” தயாரிக்கப்பட்டுள்ளன.

### நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

கடந்த 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், பணிப்பாளர்களினால் கையெழுத்திடப்பட்டதுடன், கணக்காய்வாளர் அறிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### கணக்கியல் கொள்கைகள்

கணக்கியல் கொள்கைகள், நிதிக் கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும். கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகள், எவ்வித மாற்றமும் இன்றி இவ்வாண்டிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

### வருமானம்

நிறுவனத்தின் வருமானம் கடந்த ஆண்டிலும் பாாக்க 11% க்கும் கூடுதலான அதிகரிப்பைக் காண்பித்துள்ளது. வருமானத்தின் கலவை பின்வருமாறு:

| | 2018<br>ரூ. மில். | 2017<br>ரூ. மில். | அதிகரிப்பு/ (குறைவு)<br>% |
|---|---|---|---|
| தென்னை | 532 | 459 | 16 |
| இறப்பர் | 27 | 35 | (23) |
| ஊடுபயிர் | 24 | 28 | (14) |
| ஏனையவற்றின் மூலம் | 30 | 31 | (3) |
| மொத்தம் | **613** | **553** | **11** |

### வரிக்கு முந்திய இலாபமும் வரிக்குப் பிந்திய இலாபமும்

நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூபா 613 மில்லியன் (2017 - 553 மில்லியன்) ஆகும். இவ்வருடத்திற்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 68 மில்லியன் (2017 - ரூபா 100 மில்லியன்) ஆகும். 2018 ஆம் ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 221 மில்லியன் (2017 - ரூபா 248 மில்லியன்) ஆகும். நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகள் விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

| | 2018<br>ரூ. மில். | 2017<br>ரூ. மில். |
|---|---|---|
| தேங்காய் மூலம் வருமானம் | 236 | 211 |
| இறப்பர் மூலமான இழப்பு | (11) | (2) |
| ஏனைய மூலங்களில் இருந்து இலாபம் | 32 | 28 |
| **மொத்த இலாபம்** | **257** | **237** |
| ஏனைய செயற்படு வருமானம் | 68 | 100 |
| நிர்வாகச் செலவுகள் | (154) | (131) |
| செயற்படு நடவடிக்கைகளிலிருந்து இலாபம் | 171 | 206 |
| நிதித்துறை வருமானம் | 78 | 68 |
| நிதிச் செலவுகள் | (28) | (26) |
| வரிக்கு முந்திய இலாபம் | 221 | 248 |
| ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் வருமான வரிச் செலவு | (16) | (29) |
| ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு | (16) | (57) |
| **ஆண்டுக்கான வருமானம்** | **189** | **162** |

### தெங்குத் துறை

2018 ஆம் ஆண்டின் இறுதியில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் தென்னை பயிரிடலின் அளவு 3,127.23 ஹெக்டயர்கள் ஆகும். தற்போது, தென்னை பயிரிடல் 28% (875.33 ஹெக்டயர்கள்) ஆகக் காணப்படுகிறது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் தென்னந் தோட்டங்கள் ஏக்கருக்கு 57 பனை மரங்கள் என்ற அடர்த்தியை ஏக்கருக்கு 60 பனை மரங்கள் என்ற வழக்கத்துடன் ஒப்பிடும் போது கொண்டுள்ளது. நிறுவனத்தின் முகாமைத்துவம் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட 2005 ஜனவரி 01 தொடக்கம் ஒரு ஏக்கருக்கு 50 பனை மரங்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் தெங்கு விளைச்சல் தொடர்ந்து அதிகரித்ததுடன், அதிகபட்சமாக 2012 இல் 18.1 மில்லியன் தேங்காய்களை பதிவு செய்தது. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் தேங்காய் உற்பத்தி 13.0 மில்லியன் தேங்காய்களாக வீழ்ச்சியடைந்து பாரிய பின்னடைவை எதிர்நோக்கின. எவ்வாறாயினும், நிறுவனத்தின் தெங்கு உற்பத்தி பின்னர் அதிகரித்த போக்கைக் காட்டியது. 2014 ஆம் ஆண்டில் 16.7 மில்லியன் தேங்காய்களையும், 2015 இல் 14.1 மில்லியன் தேங்காய்களையும் 2016 இல் 16.7 மில்லியன் தேங்காய்களையும் பதிவு செய்துள்ளது.

எவ்வாறாயினும், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், 2017 ஆம் ஆண்டில் வரலாற்றில் மிகக்குறைந்த உற்பத்தியைப் பதிவு செய்து, 10.6 மில்லியன் தேங்காய்கள் என குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும், தெங்கு உற்பத்தி கடந்த ஆண்டிலும் பார்க்க 18% அதிகரிப்பை பதிவு செய்து, 2018 இல் 12.6 மில்லியன் தேங்காய்களுக்கு விருத்தி கண்டது.

உற்பத்தி 18% ஆக அதிகரித்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 43.63 மொத்த விற்பனை, சராசரி தேங்காய்களுக்கான எதிர்பார்ப்பாக அமையவில்லை. 2018 இன் தேங்காய்களுக்கான மொத்த விற்பனை சராசரி ரூபா 43.22 ஆகும். இந்த விலை கடந்த ஆண்டு ரூபா 75 மில்லியன் அதிகரித்த வருமானத்தைப் பதிவு செய்து, சாதகமான விளைவை ஏற்படுத்தியது.

### இறப்பர் துறை

நிறுவனமானது, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 158.38 ஹெக்டயர் முதிர்வடைந்த இறப்பர் தோட்டக் காணிகளைக் கொண்டிருந்தது. குறைந்தபட்ச NSA காரணமாக, இறப்பர் நீண்ட காலமாக கவர்ச்சிகரமற்ற துறையாகவே காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இறப்பர் மூலமான இழப்பு 02 மில்லியனில் இருந்து 10.8 மில்லியனாக அதிகரித்தது. 2016 இல் இழப்பு ரூபா 17 மில்லியனாகக் காணப்பட்டது. 2017 இல் இருந்து 2018 இனை ஒப்பிடும் போது ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 66 என்ற வகையில் NSA இனால் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்கான பிரதான காரணமாகும். (2018 இல் NSA ரூபா 243, 2017 இல் NSA ரூபா 309) மேலதிகமாக நிறுவனத்தின் இறப்பர் உற்பத்தியானது, பாதகமான காலநிலை நிலவரம் காரணமாக மற்றும் பழைய, ஆக்க பலமற்ற இறப்பர் தோட்டங்களின் பயிரிடுகை என்பன காரணமாக படிப்படியாக குறைந்தது. உற்பத்தி 2017 இல் 113,407 கிலோ கிராமாக இருந்த அதேவேளை, 2018 இல் 111,112 கிலோ கிராமாக ஆக இருந்தது. ஆக்க பலமற்ற இறப்பர் தோட்டங்கள் அதிக விளைச்சல் தரும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பன்முகத்தன்மைக்கு பயன்படுத்தப்பட்டன. சந்தை இலாபத்தையும், வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு கறுவா, மிளகு முதலிய பயிர்களின் செய்கைகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சில காணிகள் ஒரே பயிர் உற்பத்திக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டன.

### ஏனைய பயிர்கள்

எமது ஊடுபயிர் பயிர்ச் செய்கை இவ்வருட மீளாய்வின் போது எமது வருமானத்தில் ரூபா 23.5 மில்லியனை அளித்திருந்தது. எமது தலைசிறந்த வெற்றி, இலாபமீட்டுகை என்பன தொலைநோக்குள்ள மூலோபாய இயக்கத்திற்கு அளிக்கப்படலாம். கடந்த காலங்களில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நுணுக்கமான மூலோபாயமானது, எமது வருவாயில் ஏறத்தாழ 80% ஐ வழங்கும் முதன்மை பயிரான தென்னையில் தங்கியிருப்பதை குறைத்து ஊடுபயிரின் பன்முகத்தன்மை முயற்சியை பாரிய அளவில் மேற்கொண்டமையாகும். இதன் காரணமாக, எம்மால் காணித் துண்டில் இருந்து பெறப்பட்ட வருமானத்தை ஊடுபயிரினால் பெறப்பட்ட மேலதிக வருமானத்துடன் அதிகரித்துக் கொள்ள முடிந்தது.

றம்புட்டான், மாம்பழம், கருமிளகு முதலான ஊடு பயிர்கள் இவ்வருமானத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன. இவ்வூடுபயிர்ச் செய்கையினால் ஏனைய பல்வேறு நன்மைகளும் கிடைக்கப் பெற்றன. பல்வகைத் தன்மையை உருவாக்குவதில் ஊடுபயிர்ச் செய்கை சாதகமான விளைவை வழங்கியிருந்தது.

நடைமுறையில் உள்ள பயிர்ச் செய்கை முறைமைகளை மேம்படுத்திக் கொள்வதில் அதன் குறைந்த செலவிலான விநியோக அணுகுமுறையுடன் KPL தனது, பொருளாதார ரீதியில் கணிக்கத்தக்க போது ஊடு பயிர்ச் செய்கை அறுவடையை குத்தகைக்கு அளித்தலை அறிமுகம் செய்தது. இதன் மூலம் அறுவடைக்குப் பின்னரான கம்பனிக்கான ஊறுகளை குறைத்து, அறுவடையை மேற்கொள்ளுதல் மற்றும் விற்பனை செய்தல் முதலான பொறுப்புடைமையை கொள்வனவாளருக்கு வழங்கியது.

### மூலதனச் செலவும் முதலீடுகளும்

நிறுவனமானது, தென்னை மற்றும் ஊடுபயிர்கள் முதலானவற்றை விரிவாக்கல் மற்றும் தோட்டங்களின் முதிர்வடையாத காலத்தின் பேணல், முதலியவற்றை உள்ளடக்கிய மூலதன அபிவிருத்தியில் வருட காலமாக பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ளது. நிதியாண்டின் மீளாய்வின் கீழ் நிறுவனத்தன் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 194 மில்லியனில் (2017 - ரூபா 143 மில்லியன்) ரூபா 111 மில்லியன் (2017 - ரூபா 98 மில்லியன்) முதிர்வடையாத தோட்டங்களின் மீது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### நிதிநிலைமைக் கட்டமைப்பு

உற்சாகமூட்டும் நிதி நிலைமைக் கட்டமைப்புகளில் வருடங்களாக மொத்த சொத்து அதிகரித்து வந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், பயிர் சொத்து மற்றும் உபகரணம் என்பவற்றில் ரூபா 194 மில்லியன் முதலீடு, நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களில் மொத்த முன்னேற்றம் ரூபா 12 மில்லியனாகவும், நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா 219 மில்லியனாகவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 219 மில்லியன் மொத்த சொத்து விருத்திக்கு மீளாய்வு வருடத்தில் பங்களிப்புச் செய்துள்ளது. நிறுவனத்தின் பணப்புழக்க நிலையை உறுதி செய்து, கடந்த ஆண்டின் குறுகியகால முதலீடு ரூபா 30 மில்லியனால் விருத்தி கண்டுள்ளது.

### பணப்புழக்க முகாமைத்துவம்

நிறுவனத்தின் நிகர மூலதனம், குறுகிய கால முதலீடுகள் காரணமாக ரூபா 686 மில்லியன் (2017 - ரூபா 646 மில்லியன்) இனால் அதிகரித்தது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிதி மற்றும் குறுகியகால முதலீடுகள் என்பன நிறுவனத்தினால் பிரயோகிக்கப்பட்ட அறிவார்த்தமான நிதி முகாமைத்துவ வழக்கங்கள் என்பவற்றின் விளைவாக 2017 இல் ரூபா 627 மில்லியனாக இருந்து 2018 இல் ரூபா 670 மில்லியனாக ஆக முன்னேற்றம் கண்டுள்ளது. 2018 டிசம்பர் 31 இல் நிறுவனம் 2017 இன் 600 மில்லின் ரூபாவுடன் ஒப்பிடும் போது ரூபா 630 மில்லியன் பெறுமதியான குறுகிய கால முதலீடுகளைக் கொண்டுள்ளது. இந்த முதலீடுகள் அரச வங்கிகளில் வைப்புக்களை உள்ளடக்குகின்றன.

| | 31.12.2018 இல் உள்ளவாறு | 31.12.2018 இல் உள்ளவாறு |
|---|---|---|
| தவணை வைப்புக்கள் 03 மாதங்களில் முதிர்ச்சியடைந்தது | | |
| இலங்கை வங்கி | 10.0 | 55.2 |
| மக்கள் வங்கி | 85.0 | 75.0 |
| | 95.0 | 130.0 |
| தவணை வைப்புக்கள் 03 மாதங்களில் முதிர்ச்சியடைந்தது | | |
| இலங்கை வங்கி | 375.2 | 225.0 |
| மக்கள் வங்கி | 50.0 | 95.0 |
| தேசிய சேமிப்பு வங்கி | 110.0 | 150.0 |
| | 535.2 | 470.0 |
| மொத்தம் | 630.2 | 600.2 |

## தெரிவிக்கப்பட்ட மூலதனம்

இது, பங்குகளின் வழங்குகை மூலமாக நிறுவனம் பெறுகின்ற மொத்தத் தொகையைக் குறிக்கிறது. 2018 டிசம்பர் 31 இன் பிரகாரம், நிறுவனத்தின் தெரிவிக்கப்பட்ட மூலதனம் 200,000,010 ரூபா ஆகும். இது, 20,000,000 சாதாரண பங்குகள் மற்றும் இலங்கை அரச பொது திறைசேரியில் கொண்டிருக்கப்பட்ட ஒரு தங்கப் பங்கினையும் உள்ளடக்குகிறது. இவ்வருடத்தில் பங்குகளுக்கான எவ்வித ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## ஒதுக்கங்கள்

நிறுவனத்தின் ஒதுக்கங்கள் 31.12.2018 இல் பின்வருமாறு:

| | 2018 இல் ரூ. மில்லியன் | 2017 இல் ரூ. மில்லியன் |
|---|---|---|
| தக்கவைக்கப்பட்ட வருமானம் | 1,388 | 1,218 |
| உயிரியல் சொத்து மதிப்பீட்டு ஒதுக்கம் | 335 | 315 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 65 | 65 |
| | 1,987 | 1,598 |

பங்கிலாப செலுத்துகை

பல அரச திணைக்களங்கள், பொதுத் திறைசேரிக்கு அமைவாக இருக்க குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் வெற்றிகரமான சுய நிதி நிறுவனமாக மட்டுமன்றி, தங்கப் பங்கு உரிமையாளரான பொதுத் திறைசேரிக்கு பங்கிலாபம் செலுத்துவதன் மூலம் அதன் பங்கெடுப்பை பூர்த்தி செய்யும் ஒன்றாகவும் பரிணாமம் அடைந்துள்ளது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் KPL தொடர்ந்து அரச முகாமைத்துவத்தின் கீழ் சுய நிதி அளிக்கும் பொது நிறுவனமாக செயற்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கீழ் KPL இன் முகாமைத்துவம் கொண்டுவரப்பட்ட பின்னர், வரலாற்றில் முதல் முறையாக 2007 இல் நிறுவனம் பங்கிலாபம் செலுத்தியது. அது தொடக்கம் 2007 இல் ரூபா 392.5 மில்லியன் மொத்தமாக பொது திறைசேரிக்கு பங்கிலாபம் செலுத்தப்பட்டது. 2018 ஆம் நிதியாண்டில் ரூபா 40 மில்லியன் செலுத்தப்படவுள்ளது.

## பணிப்பாளர் சபை

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பதவி வகித்த பணிப்பாளர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | நியமனத் திகதி |
|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி<br>தலைவர் | 29.01.2015 |
| திரு. எச்.ஏ.பி.துசித்த குமார டயஸ்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | 07.10.2016 |
| திரு. எம்.ரி.பி.குலசூரிய<br>செயலாற்றுப் பணிப்பாளர் | 24.07.2018 |
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார<br>திறைசேரியின் பிரதிநிதி | 06.03.2015 |
| திரு. டப்ளியூ.எம்.டி.பி.அபேரத்ன | 13.03.2015 |
| திரு. எம்.ஜீ.டி.இந்துனில் அமரசிங்க | 07.10.2016 |
| திரு. எச்.என்.பி.ஜினசேன | 24.07.2018 |
| திரு. டி.எம். பண்டாரநாயக்க<br>முன்னாள் செயலாற்றுப் பணிப்பாளர்<br>(2018.07.24 இல் பதவி விலகல்) | 26.03.2015 |
| திரு. ஆர் சிட்னி குலதிலக<br>(2018.07.24 இல பதவி விலகல்) | 07.10.2016 |

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு

ஒப்பந்தங்களில் நேரடியாகவோ, நேரடியற்ற வகையிலோ பணிப்பாளர்களுக்கு எத்தகைய ஈடுபாடுகளும் இல்லை.

## பணிப்பாளர்களின் பங்குரிமை

நிறுவனத்தின் பணிப்பாளரோ அல்லது அவரது கணவரோ / மனைவியோ நிறுவனத்தின் எந்தவொரு பங்கையும் கொண்டிருக்கவில்லை.

### கணக்காய்வுக் குழு

2018 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கணக்காய்வுக் குழுவில் சேவையாற்றியுள்ளனர்.

திரு. எச்.ஏ.என்.சமன் குமார - திறைசேரியின் பிரதிநிதி
திரு. டப்ளியூ.எம்.டி.பி.அபேரத்ன
திரு. ஆர். சிட்னி குலதிலக (2018.07.24 இல் பதவி விலகல்)

### வேலை வாய்ப்பு

வேலை வழங்கல் சம்பந்தமாக நிறுவனம் “சகலருக்கும் சம சந்தர்ப்பம்” என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. சகல தீர்மானங்களும் “திறமை”க்கு முதலிடம் அளிப்பதை நிச்சயிக்கும் வகையில், தெரிவு, பயிற்சி, அபிவிருத்தி, பதவி உயர்வு சம்பந்தமான கொள்கைகளில் இது அடங்கியுள்ளது. இனம், மதம், அரசியல் கொள்கை, பால், மனநிலை, உடல்நிலை, விவாக அந்தஸ்து என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது, சகலருக்கும் சம சந்தர்ப்பம் என்ற கொள்கையை நிறுவனம் சகல ஊழியர்கள் சம்பந்தமாகவும் கடைப்பிடித்து வருகிறது.

### நியதிக் கொடுப்பனவுகள்

நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகளும், தீர்வைகளும், சகல கொடுப்பனவுகளும், சகல கட்டணங்களும் நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்பட வேண்டிய வரிகளும், நிறுவனத்தின் ஊழியர்களின் கொடுப்பனவுகளும், ஏனைய சகல நியதிக் கொடுப்பனவுகளும் உரிய தினத்தில் நிறுவனத்தினால் தங்களது அறிவுக்குட்பட்ட வகையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றனர்.

### அறிக்கைக்கான திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

நிறுவனத்தின் கணக்கியலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நிகழ்வும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதைத் தவிர அறிக்கைக்கான திகதியின் பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை.

### கணக்காய்வாளர்கள்

2018 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

### நிதிக் கூற்றுக்கள்

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், கம்பனியின் பணிப்பாளர்கள் சபையால் 2019 மார்ச் 13 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. திரு. ஏ.எம்.பியசோம உபாலி (தலைவர்) மற்றும் எச்.ஏ.என்.சமன் குமார (பணிப்பாளர் / திறைசேரியின் பிரதிநிதி) என்போர் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் சார்பில் நிதிக் கூற்றுக்களில் கையெழுத்திட அதிகாரம் பெற்றுள்ளனர்.

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

வருடாந்தப் பொதுக் கூட்டம், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின், கொழும்பு 9, தெமட்டகொட, பேஸ்லைன் வீதி, இல.712/3 ஆம் இலக்க கொழும்பு அலுவலகத்தில் 2019 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 03.00 மணிக்கு நடைபெறும். வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் அறிவித்தல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### பணிப்பாளர் சபைக்காகவும், சபையின் சார்பிலும்

| | |
|---|---|
| கையொப்பமிட்டவர் | கையொப்பமிட்டவர் |
| ஏ.எம்.பியசோம உபாலி<br>தலைவர் | திரு. எச்.ஏ.பி.துசித்த குமார டயஸ்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் |

கையொப்பமிட்டவர்
கூட்டிணைப்பு ஆலோசனை சேவைகள் நிறுவனம்
செயலாளர்கள் - குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
2019 ஜுலை 12.

# பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய அறிக்கை

நிதித்துறை அறிக்கைகள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள், கீழ்க்காணும் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. நிதி அறிக்கை சம்பந்தமாக கணக்காய்வாளர்கள் கொண்டுள்ள பொறுப்புக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

### நிதித்துறை அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்களாவன:

விரிவான வருமானம் சம்பந்தமான அறிக்கை. இந்த அறிக்கை, நிறுவனத்தின் நிதியாண்டினது இலாப மற்றும் நட்டம் தொடர்பான நீதியான கருத்தை உண்மையின் அடிப்படையில் வெளியிடுகிறது. மற்றும் நிதியாண்டின் இறுதியளவில் நிறுவனத்தின் நிலைமை சம்பந்தமாக உண்மையான, நீதியான கருத்தை வெளியிடுகிறது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இது அமைந்துள்ளது.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் கீழ்க்காணும் விடயங்களைப் பூர்த்தி செய்யுமாறு பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

- பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலையான அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து வேறுபடும் எந்தவொரு விடயமும் வெளிப்படுத்தப்பட்டு விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.
- பொருத்தமான செயற்படு கணக்கியல் தரங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.
- தீர்மானங்களும், மதிப்பீடுகளும் நியாயமான அடிப்படையிலும், புத்திசாதுரியமான வகையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள போதிய வளங்கள் நிறுவனத்திடம் உள்ளன என்பதை பணிப்பாளர் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். நிதி நிலைமை சம்பந்தமாக நிறுவனம் நியாயமான, சரியான கணக்கியல் பதிவேடுகளைக் கொண்டுள்ளது என்பதையும், நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் இவையனைத்தும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் பணிப்பாளர்கள் மேலும் நிச்சயித்துக்கொள்ள வேண்டும். போதிய சரியான தன்மையுடன் கணக்கியல் பதிவேடுகளை நிறுவனம் பேணிவருகிறது என்பதை நிச்சயிக்கும் பொறுப்பும் பணிப்பாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதும் நிச்சயிக்கப்படும் வகையில் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு பணிப்பாளர் பொறுப்பாகவுள்ளனர்.

பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பணிப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். நிதி அறிக்கைகளை பணிப்பாளர்கள் தயாரிப்பதோ, அதனைக் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு சகல உதவிகளையும் வழங்குவதுடன், அவர்களது கணக்காய்வுக் கருத்தைத் தெரிவிப்பதற்கெனப் பொருத்தமான விடயங்களை வழங்குவதோடு, அவர்களால் மேற்கொள்ளளப்பட்ட மதிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், ஆண்டறிக்கையின் பிரதிகள், நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் தினத்திற்கு 15 வேலை நாட்கள் முன்னராக அனுப்பப்படுவதை பணிப்பாளர் சபை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். இந்த அறிக்கையில் வெளியிடப்பட்ட வகையில், தங்களுக்கான பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளனர் என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும்.

இணக்க அறிக்கை

நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகளும், தீர்வைகளும், சகல கொடுப்பனவுகளும், சகல கட்டணங்களும் நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்பட வேண்டிய வரிகளும், நிறுவனத்தின் ஊழியர்களின் கொடுப்பனவுகளும், ஏனைய சகல நியதிக் கொடுப்பனவுகளும் உரிய தினத்தில் நிறுவனத்தினால் தங்களது அறிவுக்குட்பட்ட வகையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றனர். இவை அனைத்தும், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமான வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சபையின் உத்தரவின் பிரகாரம்

கையொப்பமிட்டவர்

கூட்டிணைப்பு ஆலோசனை சேவைகள் நிறுவனம்
செயலாளர்கள் - குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
2019 ஜுலை 12.

# நிதி அறிக்கை மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

**PLA/A/KPL/01/18/06** 29 மே 2019

தலைவர்
குருணாகலை பிளான்டேஷன் லிமிட்டட்

**குருணாகலை பிளான்டேஷன் லிமிட்டின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

குருணாகலை பிளான்டேஷன் லிமிட்டின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு உகந்த நிலையை அடைந்த சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சொத்தொன்றினை கொள்வனவு செய்த ஆண்டில் தேய்விடப்படாதும், விற்பனை வருடத்தில் முழுமையாக தேய்விடலும் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 1,450,603 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கொண்டுசெல்லும் பெறுமதி மற்றும் ஆயட்காலம் ஒவ்வொரு நிதியாண்டிலும் மீள்மதிப்பிடப்பட்டு நிலவும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மதிப்பீடுகளிலான வேறுபாடாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும், தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 107,775,018 கிரயமான வாகனங்கள் மற்றும் ரூபா 17,693,752 கிரயமான கட்டிடங்கள் மீண்டும் பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் மதிப்பிடப்படாமையால் அந்த சொத்துக்கள் ரூபா 994,790 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) கம்பனியால் 2015 நவம்பர் மாதம் 11 ஆந் திகதி 1.416 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியொன்றினை சுவீகரிப்பதற்காக குருணாகலை பிரதேச செயலாளருக்கு ரூபா 8,123,564 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த காணியின் உரித்து கம்பனிக்கு மாற்றப்பட்டிராததுடன், குறித்த கிரயம் கம்பனியை நடாத்திச் செல்ல உத்தேசித்துள்ள காலத்திற்கு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்பனியின் கணக்கீட்டு கொள்கைக்கமைய குத்தகை அடிப்படையில் காணிகளை சுவீகரிக்கும் போது காணிகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட கிரயம் 30 வருடங்களினுள் காலக்கழிவு செய்யப்பட்ட போதிலும், 1992 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,019,754 ஆன அபிவிருத்தி கிரயத்திற்காக காலக்கழிவு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனியை தாபிக்கும் சந்தர்ப்பத்தில் ஒப்படைக்கப்பட்ட 6722 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியில் 1,750.88 ஹெக்டேயர்கள் மீண்டும் அரசின் பல்வேறு நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 16,214,000 பெறுமதியான 550.88 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி விடுவிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அதற்குரிய காணி அமைவிடப்படம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில்

உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(1) (ஈ) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்டை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.
- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்குகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ை)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

| | |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 180 (3) | சேதமொன்று தொடர்பில் நடவடிக்கை எடுப்பதறகு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரமில்லாத எல்லா சந்தர்ப்பங்களிலும், திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ரூபா 11,110,806 சேதங்களுடனான இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களின் கிரயத்தினை கணக்குகளினூடாக பதிவளிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்குரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சம்பளம் மற்றும் படிகளை தீர்மானிக்கும் போது தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அல்லாது JM மற்றும் அதனைவிட உயர்வான சம்பள படிநிலைகளுக்குரிய 31 உத்தியோகதர்களுக்காக ரூபா 10,835,213 தொகை “ஊழியர் படிகளாக” (Labour Allowance) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படிகளுக்கு உரித்தற்ற MM சம்பள படிநிலைக்குரிய 05 பேருக்கு எரிபொருள் 10,435 லீட்டருக்குரிய ரூபா 1,140,506 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் விலைக்கேள்வியினை மதிப்பீடு செய்வதற்காக மதியுரை சேவையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது அந்த மதியுரையாளர்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்களாக இருக்க கூடாத போதிலும், ரூபா 6,529,930 தொகையான 03 பெறுகைகளுக்குரிய அளவிடைப்பத்திரங்கள் (BOQ) தயாரித்தல், நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவு பட்டியல்களை பரிசோதிக்கும் மதியுரை நிறுவனமொன்று குறித்த தொழிலநுட்ப மதிப்பாய்வு குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களாக செயற்பட்டிருந்தது.

(ஆ) அரசின் பல்வேறு நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்ட 1,750.88 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிகளுக்குரிய குத்தகை கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு கம்பனி எடுத்த தீர்மானத்திற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், அமைச்சின் தரவுகளுக்கமைய கம்பனி செலுத்த வேண்டிய ரூபா 197,581,091 ஆக இருந்தது.

கையொப்பமிட்டவர்

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# விரிவான வருமான அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | குறிப்பு | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | 4 | **612,760,082** | 553,032,421 |
| விற்பனைக்கான செலவினம் | 5 | **(355,660,797)** | (316,042,751) |
| மொத்த இலாபம் | | **257,099,285** | 236,989,670 |
| ஏனைய செயற்பாடு வருமானம் | 6 | **68,603,202** | 100,430,534 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவினம் | 7 | **(154,346,415)** | (131,486,553) |
| செயற்பாடு நடவடிக்கைகள் மூலமான இலாபம் | | **171,356,072** | 205,933,651 |
| தேறிய நிதித்துறை வருமானம் / (செலவினம்) | 8 | **50,055,731** | 41,992,141 |
| வரிக்கு முந்திய இலாபம் | | **221,411,803** | 247,925,792 |
| வருமான வரிச் செலவினம் | 9 | **(32,417,584)** | (86,128,581) |
| ஆண்டுக்கான இலாபம் | | **188,994,219** | 161,797,211 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைதரும் திட்டத்தின் மூலமான இலாபம் / (நட்டம்) | | **522,685** | 11,229,981 |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | **189,516,904** | 173,027,192 |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் | 10 | 9.45 | 8.09 |

# நிதி நிலைமை அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | குறிப்பு | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| வெற்றுக் காணிக்கான குத்தகை உரிமை | 11 | **69,224,109** | 71,838,367 |
| அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் (ஏனைய வெற்றுக்காணி தவிர்ந்த) | 12 | **24,260,939** | 27,897,298 |
| ஆதனம், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | 13 | **1,347,607,060** | 1,199,600,664 |
| நுகர்வோர் உயிரியல் சொத்துக்கள் | 14 | **192,413,409** | 180,105,264 |
| ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | 15 | **10,281,993** | 6,424,199 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **1,643,787,511** | 1,485,865,792 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேடுகளின் அடிப்படையில் | 16 | **46,536,640** | 55,179,685 |
| வைப்புக்கள் | 17 | **1,166,700** | 1,166,700 |
| முற் கொடுப்பனவுகள் | 18 | **2,975,820** | 2,584,544 |
| குறுகியகாலத் திட்டங்களில் முன்னரே செலுத்தப்பட்ட செலவினம் | 19 | **4,816,638** | 6,035,810 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் | 20 | **76,983,429** | 52,003,305 |
| ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | 15 | **8,901,657** | 6,542,532 |
| குறுகியகால முதலீடுகள் | 21 | **630,200,000** | 600,200,000 |
| ரொக்கப் பணமும் வங்கி நிலுவையும் | 22 | **40,221,649** | 27,001,465 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **811,802,533** | 750,714,040 |
| | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,455,590,043** | 2,236,579,832 |

# நிதி நிலைமை அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | குறிப்பு | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| **பங்குகளும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | | |
| அறிவிக்கப்பட்ட மூலதனம் | 23 | **200,000,010** | 200,000,010 |
| ஈட்டிய வருமானம் | | **1,387,534,861** | 1,217,802,960 |
| உயிரியல் சொத்து மதிப்பீட்டு ஒதுக்கம் | | **334,597,642** | 315,335,325 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | | **65,319,179** | 64,796,493 |
| **மொத்தப் பங்குகள்** | | **1,987,451,692** | 1,797,934,788 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு நன்மைக் கடப்பாடுகள் | 24 | **76,915,109** | 75,247,920 |
| குத்தகையாளருக்கான தேறிய பொறுப்பு | 25 | **90,780,842** | 94,346,046 |
| பின்தள்ளி வைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | 26 | **174,810,842** | 158,218,364 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **342,506,793** | 327,812,330 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| குத்தகையாளருக்கான தேறிய பொறுப்பு | 25 | **3,565,204** | 3,565,204 |
| பெறப்பட்ட முற்பணம் | 27 | **7,028,626** | 2,339,284 |
| செலுத்திய வருமான வரி | | **2,215,473** | 10,596,356 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 28 | **112,822,256** | 94,331,870 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **125,631,558** | 110,832,714 |
| **மொத்தப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | **2,455,590,043** | 2,236,579,832 |

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் இந்த நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும்.
நிதித்துறை அறிக்கைகள் யாவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது இத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

கையொப்பமிட்டவர்
பி.எம்.டீ.ஜீ. பிரேமதிலக
நிதி முகாமையாளர்

கையொப்பமிட்டவர்
எஸ்.எம்.எம்.சமரக்கோன்
பிரதம நிறைவேற்று அதிகாரி

இந்த நிதி அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணத்திற்கு பணிப்பாளர் சபையினரே பொறுப்பாக உள்ளனர்.
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கையொப்பமிட்டவர்
ஏ.எம். பியசோம உபாலி
தலைவர்

கையொப்பமிட்டவர்
எச்.ஏ.என். சமன் குமார
பணிப்பாளர்/திறைசேரியின் பிரதிநிதி

குருநாகல், 2019 மார்ச் 13

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள் | | |
| வருமான வரி செலவினத்திற்கு முன்னரான இலாபம | **221,411,803** | 247,925,792 |
| ***சீராக்கல்கள்*** | | |
| தேய்மானங்கள் / இலதாக்கல்கள் | **51,051,498** | 56,629,538 |
| ஓய்வு நன்மைக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | **15,753,184** | 16,001,335 |
| தோட்டங்களின் பெறுமதி குறைப்பு மீதான இழப்பு | **-** | 11,110,806 |
| முதிர்ச்சியடையாத தோட்டங்களின் மாற்றம் காரணமான செலவு | **501,250** | - |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்களின் அகற்றல் மூலமான இலாபம் | **(1,464,506)** | (64,886) |
| நாற்றுக்கள் கொண்டு வந்து விற்பனை மூலம் இலாபம் | **(24,939,181)** | (28,536,868) |
| நீதியான பெறுமதியிலிருந்து பாவனையாளர் உயிரியல்-சொத்துக்களை விற்று, செலவினம் கழித்த மாற்றங்களின் போது ஏற்படும் இலாபம் | **(19,262,318)** | (48,620,556) |
| நிகர நிதி மூல வருமானம் | **(50,055,731)** | (41,992,141) |
| மூலதன மாற்றங்களுக்கு முந்திய இலாபம் | 192,996,000 | 212,453,021 |
| ***செயற்படு மூலதனத்தில் மாற்றங்கள்*** | | |
| கையிருப்பு | **8,643,045** | (16,451,195) |
| வைப்பு | **-** | 967,840 |
| முற்கொடுப்பனவு | **(391,276)** | 284,625 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் | **(26,263,835)** | 14,338,609 |
| குறுகியகாலத் திட்டங்களுக்கு முன்கூட்டியே செலுத்திய செலவு | **1,219,172** | 2,184,957 |
| பெற்ற முற்பணம் | **4,689,342** | (12,668) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | **18,490,385** | 13,187,919 |
| **செயற்பாடுகள் மூலம் எழுந்த காசு** | **199,382,833** | 226,953,107 |
| செலுத்திய ஓய்வூதிய நன்மைச் செலவினங்கள் | **(13,563,310)** | (9,257,187) |
| செலுத்திய வருமான வரி | **(16,518,816)** | - |
| செலுத்திய நிறுத்தி வைத்தல் வரி | **(4,472,920)** | (6,751,418) |
| செலுத்திய பொருளாதார சேவைக் கட்டணம் | **(3,214,253)** | (3,031,073) |
| **செயற்படு நடவடிக்கைகளில் இருந்து நிகர நிதி உருவாக்கம்** | **161,613,534** | 207,913,430 |

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள் | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் கொள்வனவு | **(194,162,972)** | (142,858,157) |
| நுகர்வு உயிரியல் சொத்துக்கள் கொள்வனவு | **(268,979)** | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்களின் அகற்றல் மூலம் கிடைத்த வருமானம் | **1,524,730** | 183,300 |
| வெற்றுத் தாவரங்களை அகற்றியதன் மூலம் கிடைத்த வருமானம் - தெங்கு மற்றும் இறப்பர் | **25,733,402** | 28,756,268 |
| நுகர்வு உயிரியல் சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைத்த வருமானம் | **7,223,151** | 12,145,217 |
| தவணை வைப்புக்களில் நிகர முதலீடு | **(65,200,000)** | (239,200,000) |
| பெற்ற வட்டி | **77,719,742** | 68,163,263 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர காசுப்பாய்ச்சல்** | **(147,430,926)** | (272,810,109) |
| | | |
| நிதித்துறை நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| செலுத்தப்பட்ட குத்தகை வாடகை | **(29,945,504)** | (9,218,993) |
| சேவையாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | **(17,639,001)** | (8,950,800) |
| மீளப் பெறப்பட்ட சேவையாளர் கடன் | **11,422,081** | 8,613,441 |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் | | (35,000,000) |
| நிதித்துறை நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் உபயோகம் | **(36,162,424)** | (44,556,353) |
| காசும் காசுக்குச் சமமானவையும் - தேறிய அதிகரிப்பு (குறைவு) | **(21,979,816)** | (109,453,032) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | **157,201,465** | 266,654,497 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு A) | **135,221,649** | 157,201,465 |

குறிப்பு - A

| காலப்பகுதி முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும் | 31.12.2018 | 31.12.2017 |
|---|---|---|
| | **Rs.** | Rs. |
| மூன்று மாதங்களில் முதிர்ச்சியடையும் தவணை வைப்புக்கள் இலங்கை வங்கி | **10,000,000** | 55,200,000 |
| மூன்று மாதங்களில் முதிர்ச்சியடையும் தவணை வைப்புக்கள் மக்கள் வங்கி | **85,000,000** | 75,000,000 |
| மாற்று மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் (Repo) | **34,000,000** | 14,000,000 |
| வங்கியிலுள்ள காசு | **5,534,333** | 7,266,875 |
| கையிலுள்ள காசு | **677,368** | 5,726,409 |
| தபால் / முத்திரைகள் | **9,948** | 8,181 |
| | **135,221,649** | 157,201,465 |

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் இந்த நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும்.

# பங்கு மாற்ற அறிக்கை

| 2017 ஜனவரி 01இல் மீதி | தெரிவிக்கப்பட்ட மூலதனம் ரூபா. | மர ஒதுக்கீடு ரூபா. | ஏனைய பிடித்து ஒதுக்கீடுகள் ரூபா. | வைக்கப்பட்ட சம்பாத்தியம் ரூபா. | மொத்தப் பங்குகள் ரூபா |
|---|---|---|---|---|---|
| 2017 ஜனவரி 01 இல் மீதி | 200,000,010 | 266,883,194 | 53,566,512 | 1,139,457,880 | 1,659,907,596 |
| 2017 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | 161,797,211 | 161,797,211 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 11,229,981 | - | 11229981 |
| ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்டுள்ள உயிரியல் சொத்துக்கள் | - | 48,452,131 | - | (48,452,131) | - |
| 2015 இல் பங்குலாபம் | - | - | - | (35,000,000) | (35,000,000) |
| 2017 டிசம்பர் 31 இல் மீதி | 200,000,010 | 315,335,325 | 64,796,493 | 1,217,802,961 | 1,797,934,788 |
| 2018 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | 188,994,219 | 188,994,219 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 522,685 | - | 522,685 |
| ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்டுள்ள உயிரியல் சொத்துக்கள் | - | 19,262,318 | - | (19,262,318) | - |
| 2018 டிசம்பர் 31 இல் மீதி | **200,000,010** | **334,597,642** | **65,319,178** | **1,387,534,862** | **1,987,451,692** |

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் இந்த நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும்.

# கணக்கியல் கொள்கைகள்

## 1. பொது

### 1.1 அறிக்கை வழங்கும் நிறுவனத்தின் சட்டபூர்வ அந்தஸ்து

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அரச உடைமையான வர்த்தக நிறுவனங்களை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இவற்றை அரச நிறுவனங்களாக மாற்றுவதன் அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பதிவுபெற்ற அலுவலகம் குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

இது, ஒரேயொரு பங்கைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். இதன் பங்குதாரராக பொதுத் திறைசேரியின் செயலாளர் இருந்து வருகிறார்.

### 1.2 முக்கிய நடவடிக்கைகளும் அவற்றின் விபரங்களும்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகளாக தென்னை, இறப்பர் ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களின் செய்கை, உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்gid என்பனவாகும். இதன் பெருந்தோட்டங்கள் குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவற்றின் 08 பயிர்ச்செய்கை தோட்டங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அத்தனகல்ல | கட்டுகம்பொல |
| தம்பதெனிய | குருநாகல் |
| தொடங்கஸ்லந்த | நாரம்மல |
| ஹிரியால | |

## 2. அறிக்கை தயாரிப்பின் அடிப்படை அம்சங்கள்

### 2.1 இணக்க அறிக்கை

வருமானத்தின் விரிவான தகவல்கள், நிதி நிலைமை பற்றிய அறிக்கை, பங்குகள் மாற்றம் சம்பந்தமான அறிக்கை, காசுப்பாய்ச்சல் அறிக்கை என்பனவற்றுடன் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ("நிதித்துறை அறிக்கைகள்") என்பன இலங்கை கணக்கியல் தரத்திற்கு mika தயாரிக்கப்பட்டுள்ளன. (SLFRS / LKAS) இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகள் என்பனவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் இவை அமைந்துள்ளன.

### 2.2 தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனம்

தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு நிறுவனம் கொண்டுள்ள சக்திவளம் பற்றி பணிப்பாளர்கள் மதிப்பீடு ஒன்iw மேற்கொண்டுள்ளனர். இதனடிப்படையில் நிறுவனத்தைக் கலைப்பதற்கோ, நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கோ பணிப்பாளர்கள் தீர்மானிக்கவில்லை.

### 2.3 சமர்ப்பணத்தின் அடிப்படை அம்சங்கள்

நிதித்துறை அறிக்கைகள், epjp நிலைமை சம்பந்தமான அறிக்கையில் கீழ்க்காணும் அம்சங்களைத் தவிர திரண்ட அடிப்படையிலும், வரலாற்றுச் செலவின அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

- JEDB / SLSPC க்குச் சொந்தமான வெற்றுக் காணியின் குத்தகை உரிமை. 11 ஆம் இலக்கக் குறிப்பில் விபரிக்கப்பட்ட பிரகாரம் இவை மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

- பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் அனைத்தும், விற்பனைச் செலவினம் கழித்த நீதியான பெறுமதியில் தரப்பட்டுள்ளன. (14 ஆம் இலக்க குறிப்பு)

- காப்புறுதி மதிப்பாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஓய்வில் செல்வோருக்கான நன்மைக் கடப்பாடுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. (LKAS 19) (24 ஆம் இலக்க குறிப்பு)

- உயிரியல் சொத்துக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள், தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. தேறிய பெறக்கூடிய பெறுமதி என்பது, இத்தகைய விற்பனையைப் பெறவென முன்மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் கழித்த முன்மதிப்பீட்டு விற்பனை விலையாகும்.

நிதித்துறை அறிக்கைகளில் அதிகரித்த தொகை அம்சங்கள் தொடர்பாக எத்தகைய சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்iy.

**2.4 செயற்படு மற்றும் சமர்ப்பண நாணயங்கள்**

நிதித்துறை அறிக்கைகள் அனைத்தும் நிறுவனத்தின் செயற்படு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள;ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட சகல நிதித்துறைத் தொகைகளும், வேறு வகையில் தெரிவிக்கப்படாதவிடத்து, கிட்டிய ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் உபயோகம்**

இலங்கை கணக்கியல் தரங்களுடன் (SLFRS / LKAS) இணைந்த வகையில் நிதித்துறை அறிக்iffs தயாரிக்கப்படுமிடத்து முக்கிய தீர்மானங்கள், மதிப்பீடுகள், கணக்கியல் கொள்கைகளுக்கு பாதிப்பாகவுள்ள நம்பிக்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவீனம் என்பன சம்பந்தமான அறிவிக்கப்பட்ட தொகைகள் என்பன பற்றி தேவை ஏற்பட்ட இடத்தில் முகாமைத்துவம் தீர்மானம் மேற்கொண்டு வருகின்றது.

தீர்மானங்கள; மற்றும் மதிப்பீடுகள் என்பன வரலாற்று அனுபவம், கடைப்பிடிக்கப்படும் போக்கு, சம்பந்ப்பட்ட சூழ்நிலையில் நியாயமானவை எனக் கருதப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட ஏனைய அம்சங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய உண்மையான பெறுபேறுகள், இத்தகைய தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளில் இருந்து வேறுபடக் கூடும்.

மதிப்பீடுகளும், முக்கியமான நம்பிக்கைகளும் அவற்றின் பெறுமானங்களை நிச்சயிக்கவென, தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் மீளமைக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் மீளமைப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கணக்கியல் கொள்கைகளை நடைமுறைக்கிடும் போது, முக்கிய தீர்மானங்கள் சம்பந்தமான தகவல்கள் கீழ்க்காணும் குறிப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 12 — வெற்றுக் காணிக்குரிய குத்தகை உரிமை தவிர அசையாத குத்தகைச் சொத்துக்கள்

குறிப்பு 14 — பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள்

குறிப்பு 24 — விபரிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் அளவீடு

குறிப்பு 26 — ஒத்திவைக்கப்பட்ட வரி

**2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்**

முந்திய வருடங்களின் நிதித்துறை அறிக்கைகளின் தயாரிப்பும் பகுப்பாய்வும், சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கும் சமகால வருடத்தின் அறிக்கைகளுடன் ஒப்பிடுவதற்கு வசதியாக தேவை ஏற்படும் சமயத்தில் திருத்தப்பட்டுள்ளன.

**3. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்**

இந்த நிதித்துறை அறிக்கைகளின் தயாரிப்பின் போது கடைப்பிடிக்கப்பட்ட முக்கிய கணக்கியல் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. வேறு வகையில் அறிவிக்கப்படாத விடத்து, இந்தக் கொள்கைகள் தொடர்ச்சியாக சகல வருடங்கள் சம்பந்தமாகவும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

**3.1 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படை அம்சங்களும்**

நிதி நிலைமை அறிக்கையில் சமகால சொத்துக்கள் எனத் தெரிவிக்கப்பட்ட சொத்துக்கள், ரொக்கப்பணம், வங்கி நிலுவைகள், நிறுவனத்தின் வழமையான நடவடிக்கைகளின் போது அல்லது அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு வருடம் (இவற்றுள் எது குறுகியகாலமோ அது) ரொக்கப் பணமாகப் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய பொருட்கள் என்பனவாகும். நடைமுறைச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் என்பன அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு அப்பால் வைத்திருப்பதற்கு நிறுவனம் நிச்சயிக்கும் சொத்துக்களாகும்.

**3.1.1 ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள்**

**3.1.1.1 அங்கீகாரமும் அளவீடும்**

ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பன திரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பினால் ஏற்படும் நட்டங்களும் கழிக்கப்பட்ட தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான தொகையைக் கணிக்கும் போது, குறிப்பிட்ட சொத்தைச் செயற்படு நிலைமைக்கு அல்லது பாவனைக்குக் கொண்டுவரும் விதத்தில் ஏற்பட்ட செலவினம் கழிக்கப்பட்ட கொள்விலையாகும். சுயமாக அமைக்கப்பட்ட சொத்துக்களின் விலையில், பொருட்களின் செலவினம், தொழிலாளரின் நேரடிக் கொடுப்பனவு, சொத்துக்களை செயற்படு நிலைமைக்கு அல்லது உத்தேச பாவனைக்குக் கொண்டு வருவதற்கான நேரடிச் செலவினம் என்பன அடங்கும். குறிப்பிட்ட சொத்தை நீக்குவதற்கும், அகற்றுவதற்குமான செலவினங்களும் இதில் உள்ளடங்கும்.

நடைமுறை வேலையில் முன்னேற்றம் என்பது, குறிப்பிட்ட சொத்துடன் இணைக்கப்பட்டு, முதலாவது பாவனையின் காலம் அல்லது சொத்தை முதலாவது பாவனைக்கு உட்படுத்திய காலம் என்பதாகும்.

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் என்பன வெவ்வேறு பயனுள்ள காலத்தைக் கொண்டிருக்கும் சமயத்தில் அவை தனித்தனி விடயங்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

நிரந்தரமான காணி அபிவிருத்திச் செலவினங்கள் என்பது, காணி அமைப்பில் மேற்கொள்ளப்படும் புதிய வீதிகள் உட்பட ஏனைய முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை உள்ளடக்கிய முக்கிய மாற்றங்களுக்கான செலவினங்களாகும்.

ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் அகற்றலினால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள், விற்பனைத் தொகையில் இருந்து, ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் கொண்டு செல்லப்படும் தொகையைக் கழிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. விரிவான வருமான அறிக்கையில் “ஏனைய வருமானங்கள்” என்ற தலைப்பின் கீழ் இவை தரப்பட்டுள்ளன.

#### 3.1.1.2 பின்னர் ஏற்பட்ட செலவினங்கள்

தற்போதைய ஆதனங்கள், இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன சம்பந்தமாக ஏற்பட்ட செலவினங்கள், எதிர்கால பொருளாதார நன்மைகளை இவை வழங்குமென எதிர்பார்க்கப்படுமிடத்து, மூலதனமயமாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சொத்துக்குப் பதிலான சொத்தின் கொண்டு செல்லும் மதிப்பீட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

ஆதனங்கள், இயந்திரசானங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் நாளாந்த பராமரிப்புச் செலவினம், விரிவான வருமான அறிக்கையில் செலவிடப்பட்ட தொகையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து அகற்றப்படுமிடத்து, மீள் மதிப்பீட்டு மேலதிக ஒதுக்கீட்டில் இழைக்கப்பட்ட தொகை பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியம் என்பதற்கு மாற்றப்பட்டுள்ளது.

#### 3.1.1.3 அங்கீகரிக்கப்படாத நிலைமை

ஆதனங்கள், இயந்திரசானங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் கொண்டு செல்லப்படும் தொகை அவை அகற்றப்படுமிடத்து அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றல் என்பனவற்றில் எத்தகைய எதிர்கால பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதவிடத்து விரிவான வருமான அறிக்கையில் “ஏனைய வருமானங்கள்” என்பதன் கீழ் தரப்பட்டுள்ளன.

#### 3.1.1.4 மாற்ற செலவினம்

சொத்துக்களின் கொள்வனவு, வருமானம், உற்பத்தி என்பனவற்றோடு நேரடித் தொடர்பு கொண்ட உரிமை மாற்றச் செலவினமும், உத்தேச பாவனை அல்லது விற்பனை என்பதற்கு தயாராகும் கால செலவினங்களும் மூலதனமயமாக்கப்படுகின்றன. இதற்கான செலவினம் மூலதனமயமாக்கப்படுவதற்கு சட்டபூர்வ உரிமை கொண்டதாகும். இது LKAS 23 இன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூலதனமயமாக்கப்படாத இந்தத் தொகைகள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு விரிவான வருமான அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

உரிமை மாற்ற செலவினங்கள் மூலதனமாக்கப்படாது, அவை ஏற்பட்ட காலப்பகுதிக்கான செலவினத்துடன் இணைக்கப்பட்டு விரிவான வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

#### 3.1.1.5 தேய்மானமும் படிப்படியாக அறவிடுதலும்

தேய்மானம் என்பது, ஒரு சொத்தின் இறுதிப் பெறுமதியை அதன் கொள்முதல் பெறுமதி மற்றும் ஏனைய செலவுகள் கழிக்கப்பட்டு ஒரு காலப்பகுதியில் கணிக்கப்படும் ஒரு தொகையாகும். இந்த தேய்மானமானது, விரிவான வரவு அறிக்கையில் குறிப்பிடப்படுவதோடு, ஒரு நேர்கோட்டு முறையில் குறித்த சொத்தின் பயனுள்ள காலப்பகுதியினால் பிரிக்கப்பட்டு கணக்கிடப்படுகிறது. ஏனெனில், குறித்த சொத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய எதிர்கால பொருளாதார அனுகூலங்களைக் கணக்கிடுவதற்கு இதுவே மிகச் சிறந்த வழியாக இருப்பதனாலாகும்.

குத்தகைக் காலத்தின் முடிவில் குறிப்பிட்ட சொத்தின் உரிமையை நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என்ற நிலைமை ஏற்படாதவிடத்து, குத்தகைச் சொத்துக்கள், குத்தகைக் காலத்தில் அல்லது சொத்தின் பயனுள்ள சேவைக்காலத்தில் மதிப்பிடப்படும் தொகையாகும். காணிகளுக்கு இவ்வாறு தேய்மானம் கணக்கிடப்படுவதில்லை.

தற்கால மற்றும் ஒப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலப்பகுதிகள் வருமாறு:

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 |
| மின் இணைப்புக்கள் | 40 |
| சூரிய சக்தி மின்சாரத் தொகுதி | 10 |
| கிணறுகள் | 40 |
| வேலி | 03 |
| மோட்டார் வாகனங்கள் | 05 |
| இயந்திரசாதனங்கள் | 13 1/3 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 |
| உபகரணங்கள் | 08 |
| நீர்ப்பாசனம் | 08 |
| கணனிகள் | 05 |

ஒரு சொத்தின் தேய்மானம் அந்தப் பொருள் உபயோகிக்கப்பட ஆரம்பிக்கப்படுகையில் தொடங்குகிறது. அதேவேளை, அந்தச் சொத்தின் தேய்மான முடிவு, அது விற்பனைக்கென தரம் பிரிக்கப்பட்ட திகதி அல்லது அந்தச் சொத்தின் உபயோகம் கைவிடப்பட்டு, அது அங்கீகாரம் இழந்த திகதியிலிருந்து கணக்கிடப்படுகிறது.

தேய்மான கணக்கிடும் முறை, பயனுள்ள காலப்பகுதி, எஞ்சியுள்ள பெறுமானங்கள் என்பன ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு தேவையேற்படுமானால் சீராக்கப்பட்டுள்ளன.

குத்தகைச் சொத்துக்களின் பெறுமதி சமதொகையாக கீழ்க்காணும் காலப்பகுதியில் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வெற்றுக்காணி | 53 |
| கட்டடங்கள் | 25 |
| இயந்திரசாதனங்கள் | 15 |
| முதிர்ந்த பெருந்தோட்டங்கள் | 30 |
| காணி அபிவிருத்தி | 30 |

### 3.1.1.6 குத்தகைச் சொத்துக்கள்

குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள், இறுதியில் நிறுவனத்திற்கு குத்தகைச் சொத்துக்களின் உரிமையுடன் இணைந்த நன்மைகளுடனும் அதேசமயத்தில், இடர்களுடனும் மாற்றப்படுகையில், அவை நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டவையாகக் கருதப்பட்டு, காசுப்பண விலையில் மூலதனமாக்கப்படுகின்றன. குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள், அவற்றின் நியாயமான பெறுமதியின் மிகக் குறைந்த தொகைக்குச் சமமாக பெறுமானம் தெரிவிக்கப்பட்டு ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவின் பெறுமதியில் இருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பினால் ஏற்பட்ட திரண்ட நட்டத்திற்குச் சமமான தொகையில் மதிப்பிடப்படுகிறது. குத்தகையாளருக்குக் கொடுபட வேண்டிய தொகை பொறுப்பு / கடப்பாடு என்ற வகையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

குத்தகை அடிப்படையில் வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள், குத்தகைக் காலத்தின் இறுதியில் சொத்துக்களின் உரிமை மாற்றப்படா விட்டால், சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள காலம், குத்தகையின் மிகக்குறைந்த காலத்தில் அல்லது படிப்படியாகக் குறைக்கப்படும்.

குத்தகைக் காலப்பகுதியில் ஏற்படும் இடர்களும் நன்மைகளும் செயற்பாட்டுக் குத்தகைகள் எனக் குறித்துரைக்கப்படுகின்றன. (காப்புறுதி மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் தவிர்ந்த) செயற்படு குத்தகையின் கீழ் இடம்பெற்ற குத்தகைக் கொடுப்பனவுகள் என்பன குத்தகைக் காலப்பகுதிக்கான செலவினம் என விரிவான வருமான அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

### 3.1.1.7 நிதித்துறையற்ற சொத்துக்களின் பெறுமதி குறைப்பு

அறிக்கையிடும் ஒவ்வொரு தினத்திலும் நிறுவனம் ஒரு சொத்து பெறுமதி குறைக்கப்படக்கூடுமா என்பது பற்றி மதிப்பிடுவது வழக்கம். அதேவேளை, இத்தகைய மதிப்பீட்டின் போது வருடாந்த பெறுமதி குறைப்புக்கான பரிசோதனை தேவைப்படுமானால், நிறுவனம் குறிப்பிட்ட அந்தச் சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை சம்பந்தமாக மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும்.

ஒரு சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை என்பது, பாவனையில் உள்ள சொத்தின் உயர் பெறுமதி மற்றும் நீதியான பெறுமானத்தில் இருந்து விற்பனைச் செலவினம் கழிக்கப்பட்டு, அந்த சொத்தில் இருந்து காசுப்பாய்ச்சல் எதுவும் இடம்பெறாத சமயத்தில் ஏனைய சொத்துக்களில் இருந்து வேறுபட்டுள்ளதுடன் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் மதிப்பீட்டுத் தொகை அதிலிருந்து பெறக்கூடிய தொகையிலும் பார்க்கக் கூடியதாக இருக்குமானால், அந்தச் சொத்து பெறுமதியற்றது எனக்கருதப்பட்டு வசூலிக்கும் தொகை அட்டவணையில் பதிவழிக்கப்படுகிறது.

பாவனைக்குரிய காலத்திற்கான பெறுமதியைத் தீர்மானிக்குமிடத்து, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதியில் கழிக்கப்பட்டு, குறிப்பிட்ட அந்தச் சொத்தின் இடர், பணத்தின் பெறுமானத்திற்கான சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக் கழிவு வீதத்தை உபயோகித்து, அவற்றின் தற்போதைய பெறுமதி கழிக்கப்படுகிறது. நீதியான பெறுமதியிலிருந்து விற்பனைச் செலிவனம் தீர்மானிக்கப்படுமிடத்து, சொத்தின் சமீபத்திய சந்தை நடவடிக்கைகளின் பெறுமதி, கிடைக்குமானால், கருத்திற் கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் இனம் காணப்படாதவிடத்து, பொருத்தமான மதிப்பீட்டு வழிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான நடவடிக்கைகளின் பெறுமதிக் குறைப்பினால் ஏற்பட்ட நட்டம் விரிவான வருமான mwpf்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெறுமதி குறைக்கப்பட்ட சொத்தின் செயற்பாடுகளுடன் இவை இணைந்துள்ளன. முன்னரே அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி குறைப்பினால் ஏற்பட்ட நட்டம், சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட மதிப்பீட்டில் மாற்றங்கள் ஏதாவது இருந்தால் மாத்திரமே, மீளமைக்கப்படும். அத்தகைய சூழ்நிலையில் சொத்து ஒன்றின் கொண்டு செல்லும் தொகை வசூலிக்கப்படக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படும். இத்தகைய மீளமைப்புக்கள் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 3.1.2 உயிரியல் சொத்துக்கள்

உயிரியல் சொத்துக்கள், முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள் என இரண்டு வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் என்பன, அறுவடைக்கான காலத்தை அடைந்துள்ள சொத்துக்கள் அல்லது ஒழுங்கான அறுவடையை வழங்கக்கூடிய சொத்துக்களாகும். முதிர்ச்சியடையாத சொத்துக்கள் என்பன அறுவடைக்கான பருவத்தை அடையாத சொத்துக்களாகும்.

உயிரியல் சொத்துக்கள் என்பன, மேலும் இரண்டு வகையில் பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் மற்றும் பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. பயன்தரும் உயிரியல் சொத்துக்களில் விற்பனைக்கு அல்லது அறுவடைக்கான நோக்கங்களைக் கொண்டிராத தென்னை, இறப்பர் மரங்கள், அதேசமயத்தில், விவசாய உற்பத்திப் பொருட்களை அறுவடை செய்யவென மாத்திரம் வளர்க்கப்படும் மரங்களாகும். பயன்தரும் உயிரியல் சொத்துக்களில் பெருந்தோட்டங்களில் திட்டமிடப்படாத தேக்கு, மஹோகனி, ஹல்மில்ல மற்றும் மில்ல போன்ற மரங்களைக் கொண்ட திட்டமிடப்படாத வனப் பிரதேசம் என்பன அடங்கும்.

#### 3.1.2.1 பயன்தரும் உயிரியல் சொத்துக்கள்

ஒன்றுதிரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பு என்பன கழிக்கப்பட்ட பின் கிடைக்கும் தொகை மூலமே, ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு அமைய CASL இனால் நியமிக்கப்பட்டுள்ளவாறு LKAS 16 - பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் கணக்கிடப்படுகின்றன.

நிலத்தைத் தயார் செய்தல், மீளமைத்தல், நடுகை செய்தல், மீள் நடுகை செய்தல், கலப்பினத் தாவரங்களை நடுகை செய்தல், ஊடுபயிர்ச் செய்கை, உரமிடுதல், வர்த்தக ரீதியான அறுடையைப் பெற்றுக்கொள்ளுதல் வரையான சகல நடவடிக்கைகளும் அக்காலப்பகுதி முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களாக காண்பிக்கப்பட்டு அவற்றுக்கு பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட மாட்டாது. முதிர்ச்சியடையாத இந்தத் தாவரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவினங்கள் மற்றும் அவற்றுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நீண்டகாலக் கடன்களின் வட்டி ஆகிய அனைத்தும் ஒன்றாகக் கணக்கிடப்படுகின்றது.

இந்த ஆண்டில் அறுவடைக்கு வரவிருக்கும் முதிர்ச்சியடையாத தென்னந்தோட்டங்களில் இடம்பெற்ற செலவினம் வருட இறுதியில் முதிர்ந்த தோட்டங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டு, அவற்றின் பயனுள்ள காலத்தில் தேய்மானம் கீழ்க்காணும் வகையில் கணிக்கப்பட்டுள்ளது.

*முதிர்ந்த பயன்தரும் உயிரியல் சொத்துக்கள்*

| | |
|---|---|
| தென்னை | 50 |
| இறப்பர் | 20 |
| மரமுந்திரிகை | 20 |
| கறுவா | 20 |
| றம்புட்டான் | 20 |
| டிரகன் புறூட் | 20 |
| மா (மரம்) | 20 |
| மிளகு | 20 |
| கொக்கோ | 20 |
| கொய்யா | 06 |
| முள்நாறி (துர்ரியன்) | 20 |

நிரந்தரமான வலுக்குறைவுகள் பயன்தரும் உயிரியல் சொத்துக்களில் இருந்து கழிக்கப்படும். இது, விரிவான வருமான அறிக்கையில் முழுமையாகக் கழிக்கப்படுவதோடு, முற்கொண்டுவரப்பட்ட தொகையில் இருந்தும் கழிக்கப்படும். குறித்த வருடத்திற்கான நட்டம் கணக்கிடப்பட்ட பின்னரே இவ்வாறு செய்யப்படுகிறது.மரங்களை அகற்றும் பணியானது, முதலில் நடுகை செய்யப்பட்டது முதலில் அகற்றும் முறைக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.1.2.2 பயன்தரும் உயிரியல் சொத்துக்களின் செலவினங்கள்

நிரப்புதல் நடவடிக்கையில் ஏற்பட்ட காணி அபிவிருத்திச் செலவினங்கள் மூலதனமயமாக்கப்படுகின்றன. இத்தகைய நிரப்புதல் நடவடிக்கைகளின் காரணமாக பொருளாதார காலத்தின் அதிகரிப்பு ஏற்படுத்தப்படுமானால், அவ்வாறு மூலதனமயமாக்கப்பட்ட செலவினங்கள் புதிதாக மதிப்பிடப்பட்ட எஞ்சியுள்ள பயன்தரும் பொருளாதார காலத்தில் அல்லது முடிவுக்கு வராத குத்தகைக் காலம் இவற்றில் எது குறைந்ததோ அதனடிப்படையில் பெறுமதி குறைக்கப்படுகின்றது.

மூலதனமயமாக்கப்படாத நிரப்புதல் செலவினங்கள் அவை ஏற்பட்ட வருடத்தில் விரிவான வருமான அறிக்கையில் இணைக்கப்படுகின்றன.

### 3.1.2.3 பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள்

உபயோகிக்கக்கூடிய மர வளத்தைக் கொண்ட விருட்சங்கள் பூர்வாங்க அங்கீகாரத் தொகையில் அளவிடப்பட்டு ஒவ்வொரு அறிக்கைக்கான கலப்பகுதியின் முடிவிலும் நீதியான பெறுமதியில் செலவினங்கள் கழிக்கப்பட்டு விற்பனை விலை LKAS 41 இன் பிரகாரம் கணிக்கப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் இத்தகைய மரங்களின் விலைகள் முக்கியமானவை அல்ல என்பதனால், இத்தகைய உயிரியல் மாற்றத்தின் தாக்கம் இளம் தென்னை மரங்களின் நீதியான பெறுமதியில் உத்தேசமானதாகக் கருதப்படுகின்றது. மர வளம் கொண்ட விருட்சங்களின் நீதியான பெறுமதி, DCF வழிமுறையைக் கடைப்பிடித்து மரத்திற்கு தற்போதைய சந்தையில் கிடைக்கும் விலையை கருத்திற் கொண்டு அளவிடப்படுகின்றன. இந்த விலைகள் குறிப்பிட்ட மரங்கள் முதிர்ச்சியடையும் போது சுயேச்சையான மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்படுகின்றன.

விற்பனை நடவடிக்கையின் போது நீதியான விலையில் செலவினங்கள் கழிக்கப்பட்டு, பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்களின் பூர்வாங்க அங்கீகாரத்தின் மூலம் உருவாகும் இலாபம் அல்லது நட்டம் அது ஏற்படும் காலப்பகுதியில் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன. ஏனைய சகல கருத்துக்களும் குறிப்பு 14 யில் தரப்பட்டுள்ளன.

DCF மாதிரி நடவடிக்கைகளில் முக்கிய வேறுபாடுகள்

| வேறுபாடுகள் | கருத்துக்கள் |
|---|---|
| நாணயப் பெறுமதி | ரூபா |
| மரங்கள் தொடர்பாக | மரத்தின் சுற்றளவு, உயரம் என்பனவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முன்மதிப்பீடு, வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு மரத்தினதும் வளர்ச்சி என்பன கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. நிறுவனத்தின் வனப் பிரதேச திட்டத்துடன் இணைந்த வகையில் தற்சமயம் நடைமுறையில் உள்ள சகல சட்டபூர்வ பிரமாணங்களும் மர அறுவடையின் போது கடைப்பிடிக்கப்படுகின்றன. |
| பொருளாதார அடிப்படையிலான பயனுள்ள காலம | நிறுவனத்தின் வனப் பிரதேசத் திட்டத்துடன் இணைந்த ஒவ்வொரு மரத்தினதும் வழமையான காலத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| விற்பனை விலை | தற்சமயம் நிலவும் நாட்டின் சந்தை விலையில் திப்பீடுகள் அமைந்துள்ளன. மரங்களை விற்பனைக்குரிய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான சகல அம்சங்களும் பூர்த்தி செய்யப்படுவது அவசியமாகும். |
| கழிவுத் தொகை வீதம் | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கீழ்க்காணும் கழிவு வீதத்தில் மதிப்புக் குறைக்கப்படுகின்றன. |
| மரங்கள் | 14% |

#### 3.1.2.4 அங்கீகாரமும் அளவீடும்

ஸ்தூலப்பொருள் என்பது, உயிரியல் சொத்துக்களை அவற்றை ஸ்தூலப்பொருள் கட்டுப்படுத்தும் சமயத்தில் மாத்திரமே அங்கீகரிக்கிறது. இதன்பலனாக, சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் நீதியான பெறுமதியில் அல்லது சொத்துக்களின் நம்பகமான கொள்விலையில் ஸ்தூலப்பொருள்களுக்குச் செல்வது சாத்தியமாகும்.

பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் என்பன கொள்விலையில் இருந்து திரட்டிய தேய்மானமும் டுமுயுளு 16 இன் பிரகாரமான திரண்ட குறைந்த நட்ட மதிப்பீட்டுத் தொகையும் கழிக்கப்பட்டு CASL இனால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அளவிடப்படுகின்றன.

பாவனைக்குரிய மர வளம் கொண்ட விருட்சங்கள் பூர்வாங்க அங்கீகாரத் தொகையில் அளவிடப்பட்டு, ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் நீதியான பெறுமதியில் LKAS 41 இன் பிரகாரமான விற்பனைச் செலவினம் கழிக்கப்படுவதன் மூலம் அளவிடப்படுகின்றன. கொள்விலை என்பது, இளம் தென்னை மரங்களின் நீதியான பெறுமதியாகக் கணிக்கப்பட்டு (05 வருடங்களுக்கு உட்பட்ட மரங்கள்) இந்தக் காலப்பகுதிக்கான இத்தகைய மரங்களின் மீதான உயிரியல் மாற்ற தாக்கங்கள் கருத்திற் கொள்ளப்படுவது அவசியமல்ல.

### 3.1.3 நிதியியல் சாதனங்கள்

#### 3.1.3.1 நிதியியல் சொத்துக்கள்

#### 3.1.3.1.1 ஆரம்ப அங்கீகரித்தல் மற்றும் அளவீடு

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இனது செயற்பரப்பினுள் உள்ளடங்கும் நிதியியல் சொத்துக்களானவை, இலாபம் அல்லது நட்டம், கடன் மற்றும் பெறக்கூடியவை என்பவற்றினூடாக நியாயமான சந்தைப் பெறுமதியில் கிடைக்கும் நிதியியல் சொத்துக்கள் முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை மற்றும் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் சொத்துக்கள் என பொருத்தமானவாறு வகைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமானது, தனது நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கின்றது.

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன், சந்தைப் பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் நேரடியாகக் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் சேர்க்கப்படக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனத்தின் நிதியியல் சொத்துக்களானவை - காசு மற்றும் குறுகியகால வைப்புக்கள், வர்த்தக மற்றும் பிற கிடைக்கத்தக்கவை, கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவை என்பவற்றை உள்ளடக்குகின்றன.

#### 3.1.3.1.2 அடுத்தடுத்த அளவீடு

நிதியியல் சொத்துக்களின் அடுத்தடுத்த அளவீடானது, பின்வருமாறு காட்டப்பட்டுள்ள அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது :

**இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதி கொண்ட நிதியியல் சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியைக் கொண்ட நிதியியல் சொத்துக்களானவை, வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள், மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியினை வைத்து ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம், நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நிதியியல் சொத்துக்களானவை விற்பனை நோக்கத்தில் அல்லது விரைவில் மீளக் கொள்வனவு செய்யும் நோக்கத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. தனியாக்கப்பட்ட ஒன்றிணைந்த வழிப்பொருட்களையும் உள்ளடக்கும் வழிப்பொருட்களானவை, பயனுள்ள இழப்புக் காப்பு என நியமிக்கப்படாத பட்சத்தில் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியிலுள்ள நிதியியல் சொத்துக்களானவை, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் வருமானம் அல்லது நிதியியல் செலவுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சந்தைப் பெறுமதி மாற்றங்களையும் உள்ளடக்கிய சந்தைப் பெறுமதியில் நிதியியல் நிலைமைக் கூற்றினால் தாங்கப்படுகின்றன.

**கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவை**

கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவையானவை, பெறுமதிகள் அல்லாத நிதியியல் சொத்துக்கள் என்பதனுடன், செயற்படும் சந்தையில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் கொண்டதாகும். இவ் நிதியியல் சொத்துக்களானவை, ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து, குறைந்தளவில் வலு இழக்கக்கூடிய பயனுறு வட்டி வீதங்களை உபயோகித்து தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் (EIR) இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கைப்பற்றுகையில் செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கிடுவதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள, நிதியியல் வருமானத்தின் கீழ் பயனுறு வட்டி வீத தேய்மானச் செலவானது உள்ளடக்கப்படுகின்றது. வலு இழப்பதனால் தோண்றக்கூடிய இழப்புகளானவை, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் செலவீனங்களினுள் உள்ளடக்கப்படுகின்றன.

நிறுவனத்தினால் வைத்திருக்கப்படும் கடன்கள் மற்றும் கிடைக்கத் தக்கவைகளானவை, வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவை, வைப்புக்கள், முற்பணங்கள், பிற கிடைக்கத் தக்கவைகள். காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை**

நிறுவனமானது, நேரான நோக்கத்தையும், முதிர்ச்சி வரையில் வைத்திருக்கக்கூடிய திறனையும் கொண்டுள்ள போது, நிலையான மற்றும் தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதியற்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளானவை, முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இவ் முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை, ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து குறைந்தளவில் வலு இழக்கக்கூடிய பயனுறு வட்டி வீதங்களை உபயோகித்து தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கைப்பற்றுகைகளில் செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கிடுவதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. பயனுறு வட்டி வீதத் (EIR) தேய்மானச் செலவானது, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றினுள் நிதியியல் வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது. வலு இழப்பதனால் தோன்றக்கூடிய இழப்புகளானவை அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் செலவீனங்களினுள் உள்ளடக்கப்படுகின்றன.

**விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகள்**

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகளானவை, பங்குரிமை மூலதனம் மற்றும் கடன் பிணையங்களை உள்ளடக்குகின்றன. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய பங்குரிமை மூலதனங்கள் ஆகியவை, விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என்றோ இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை என்றோ வகைப்படுத்தப்படவில்லை. இவ்வகையினுள் உள்ளடங்கும் கடன் பிணையங்களானவை, கால வரையறையற்ற முறையில் வைத்திருப்பதன் மூலம், திரவத் தேவைகளுக்குப் பதிலாக விற்கப்படக் கூடியவை அல்லது சந்தை நிலவரங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய விற்கப்படக்கூடியவை ஆகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் விற்பனை நிதி முதலீடுகளுக்காக இருக்கின்றவைகள் குறிப்பிட்ட முதலீடு அங்கீகரிக்கப்படாத போது ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள விற்பனைகளுக்கு இருக்கக்கூடிய ஒதுக்கீடு என்ற வகையில் பெறப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் இணைத்து நியாயமான பெறுமதியில் அளவிடப்படும். அந்த நேரத்தில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஈடு செய்வதற்குத் தீர்மானிக்கப்படட ஒட்டுமொத்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அந்த நேரத்தில் ஒட்டுமொத்த நட்டம் நிதிச் செலவுகளில் விரிவான வருமானக் கூற்றில் மீள் வகைப்படுத்தப்படுவதுடன், விற்பனைக்காக ஒதுக்கியுள்ளதில் இருந்து விற்பனைக்கு இருக்கக்கூடிய கடன்பாதுகாப்பு மீதான வட்டி வருமானம் பலன்தரும் வட்டி முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுவதுடன், இலாப அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படும்.

### 3.1.3.1.3 அங்கீகரிக்கப்படாதவை

ஒரு நிதியியல் சொத்தானது, (அல்லது எங்கும் பொருந்துமாறு நிதியியல் சொத்தினது ஒரு பகுதி அல்லது ஒத்த நிதியியல் சொத்துக்களின் ஒரு தொகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை காலாவதியாகியுள்ளமை

சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை நிறுவனமானது இடம் மாற்றியிருத்தல் அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சலை தாமதமில்லாமல் முழுவதுமாக ஒரு மூ ன்றாம் தரப்பினருக்கு வழங்க வேண்டிய கடமை இருத்தல், மற்றும் (அ) நிறுவனமானது அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் கணிசமான அளவு இடமாற்றியிருந்தாலோ அல்லது (ஆ) நிறுவனமானது சொத்துக்களில் இருந்து பெறும் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் இடம்மாற்றாமலோ அல்லது நீடுறுதியாக வைத்திருக்காமலோ, ஆனால் சொத்தினது கட்டுப்பாட்டினை இடமாற்றியிருந்தாலோ.

### 3.1.3.1.4 நிதியியல் சொத்துக்கள் வலுவிழத்தல்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிறுவனமானது, ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் ஒரு தொகுதியானது, வலுவிழந்திருக்கின்றதா என்பதனைக் காட்டும் நம்பகரமான புறநிலை ஆதாரங்களை மதிப்பீடு செய்கிறது. ஒரு நிதியியல் சொத்து அல்லது நியியியல் சொத்துக்களின் ஒரு தொகுதியானது, பின்வரும் சந்தர்ப்பங்களான சொத்தினது ஆரம்ப அங்கீகரித்தலுக்குப் பிறகு நிகழும் ஒரு அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக வலு இழந்தமையை உறுதிப்படுத்தும் நம்பகரமான ஆதாரம் காணப்படல் (இழப்பு நிலைமைக்கு உள்ளாகியமை) மற்றும் நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடிய இவ் இழப்பு நிலைமையானது மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் விளைவினை ஏற்படுத்த வல்லதாகவோ காணப்படுவதன் மூலம் வலு இழந்ததாகக் கருதப்படுகின்றது.

### 3.1.3.2 நிதியியல் பொறுப்புக்கள்

### 3.1.3.2.1 ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இனது செயற்பரப்பினுள் உள்ளடங்கும் நிதியியல் பொறுப்புக்கள் ஆனவை, பொருத்தமான விதத்தில் இலாபம் அல்லது நட்டம் அல்லது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பனவற்றிற்கூடாக நியாயமான சந்தைப் பெறுமதியில் கிடைக்கும் நிதியியல் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமானது, தனது நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கிறது. அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் அவற்றின் நிய-ாயமான சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் ஆனவை, நிதியியல் பொறுப்புக்களினைக் கையேற்றல் அல்லது வெளிவிடுதலுடன் நேரடியாகச் சேர்க்கப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனத்தினது நிதியியல் பொறுப்புக்களாவன, வர்த்தகம், பிற கொடுப்பனவுகள், வங்கி மேலதிகப்பற்றுக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியைக்கொண்ட நிதியியல் பொறுப்புக்களின் பின்வருகின்ற அளவீடானது வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படும் நிதியியல் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியினை வைத்து ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதியியல் பொறுப்புக்களானவை, அடுத்து வரும் காலத்தில் விற்பனை செய்யப்படும் நோக்கில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இப்பொறுப்புக்களில் ஏற்படும் ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுவதுடன், அவை அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனமானது, இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியின் ஆரம்ப அங்கீகரித்தலின் போது, எவ் நிதியியல் பொறுப்புக்களையும் நிமித்திருக்கவில்லை. ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னரான கடன்கள், கடன்பாடுகள், வட்டியுடன் சேர்ந்த கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பன பயனுறு வட்டி வீத முறையையும் உபயோகித்து, தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் என்பன பொறுப்புக்களானவை அங்கீகாரமிழக்கும் போதும், பயனுறு வட்டி வீத முறையிலுள்ள தேய்மானச் செலவு படிமுறையின் ஊடாகவும், அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கையேற்கும் போது செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கெடுப்பதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் வருமானத்தின் கீழ் பயனுறு வட்டி வீதத் தேய்மானச் செலவானது உள்ளடக்கப்படுகின்றது.

### 3.1.3.2.2 அங்கீகரிக்கப்படாதவை

நிதிப் பொறுப்பு ஒன்று செயலிழக்கப்பட்ட பின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட பின் அல்லது காலாவதியான பின் அது நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படும்.

### 3.1.3.3 நிதியியல் சாதனங்களை தீதறுப்புச் செய்தல்

நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களை அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் தீதறுப்புச் செய்வதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய தீதறுப்புக்கான சட்ட உரிமை ஒன்று உள்ளவிடத்து மாத்திரமே அத்துடன், நிகர அடிப்படையில் சமரசப்படுத்துவதற்கான மன எண்ணம் ஒன்று உள்ள போதும் அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை மாற்றுவதற்கும் பொறுப்புக்களைச் சமரசப்படுத்துவதற்கும் ஏற்பாடு ஒன்று உள்ள போது மாத்திரமே தீதறுப்புச் செய்ய முடியும்.

### 3.1.3.4 நிதி இடர் முகாமைத்துவம்

**கடன் இடர்**

நிதி சாதனம் ஒன்றுக்கு உரிய வாடிக்கையாளர் ஒருவர் அல்லது மறு திறத்தவர் அவர்களுடைய ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறுகின்றவிடத்து, கம்பனிக்கு ஏற்படுகின்ற நிதி ரீதியான நட்டம் கடன் இடர் எனப்படும். மேலும், இது, வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்களிடம் இருந்து கம்பனிக்கு பெறவேண்டிய தொகைகளில் இருந்து எழும்.

கம்பனியுடைய வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள் மற்றும் முதலீடுகள் என்பனவற்றில் இருந்து உறப்படும் நட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைப் பிரதிபலிப்பதற்காக கம்பனி அந்தப் பாதிப்பை ஈடு செய்வதற்காக அலவன்ஸ் ஒன்றை ஸ்தாபிக்கும்.

**திரவ இடர்**

கம்பனி அதன் கடப்பாடுகளைச் சந்திக்கின்ற போது, கடப்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள பணத்தை வழங்குவதன் மூலம் அல்லது வேறு நிதிச் சொத்தை அளிப்பதன் மூலம் ஈடு செய்யக்கூடிய நிதிப் பொறுப்புக்கள் தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போது ஏற்படும் இடர் திரவ இடர் எனப்படும். கம்பனியுடைய நன்மதிப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத அளவு நட்டங்கள் ஏற்படாத வகையிலும் சாதாரண மற்றும் அழுத்தம் கொடுக்கக்கூடிய நிலைகளிலும் கம்பனி சந்திக்க வேண்டிய பொறுப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமான வரையில் போதுமான அளவு திரவத்தன்மையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் கம்பனியுடைய திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்யும் அணுகுமுறை காணப்படல் வேண்டும்.

**வட்டி விகித இடர்**

கம்பனியுடைய சந்தைப்படுத்தல் வட்டி விகிதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பான இடர், பிரதானமாக, கம்பனியுடைய நீண்டகால கடன் கடப்பாடுகளுடன் தொடர்புபடும். இது, மிதக்கும் வட்டி விகிதங்களுடன் சேர்ந்தது. கம்பனி தன்னுடைய வட்டி விகித இடரை நிலையான மற்றும் மாற்றமடையக்கூடிய விகிதத்திலான கடன்கள் மற்றும் பெறுவனவுகள் என்பன தொடர்பான ஒரு சமமான நிலையைப் பேணுவதன் மூலம் முகாமைத்துவம் செய்யும்.

### 3.1.4 இருப்புச் சரக்கு

#### 3.1.4.1 உயிரியல் சொத்துக்களில் இருந்து அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்தி

அறுவடை செய்யப்பட்ட விவசாயப் பொருட்கள் அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் விற்பனை செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தங்களில் குறித்துரைக்கப்பட்ட விலைகளில் மதிப்பீடு செய்யப்படும். அத்துடன், கணக்கியல் கூற்றுக்கள் தயார் செய்யப்படும் வரையில் ஈடுபடாத விற்பனை ஒப்பந்தங்களில் விவசாயப் பொருட்களின் பெறுமதி நிகர விற்பனை விலையின் சராசரியில் மதிப்பீடு செய்யப்படும்.

தேங்காய்களைப் பொறுத்தவரையில், சந்தையில் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்ற பொழுது, கொப்பறாவாக மாற்றப்பட்ட பின்னர் அதனுடைய நிகர கைவரப் பெறக்கூடிய பெறுமதி மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும்.

#### 3.1.4.2 மேலதிக செயற்பாட்டின் பின்னரான விவசாயப் பொருட்கள்

மேலதிகச் செயற்பாட்டின் மூலம் பெறப்பட்ட விவசாயப் பொருட்கள் வழக்கற்றுப்போன மற்றும் மந்தகதியில் செல்கின்ற பொருட்களுக்கான அலவன்சுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட பின்னர் குறைந்த விலையிலும், மதிப்பிடப்பட்ட நிகர கைவரப் பெறப்பட்ட பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். நிகர கைவரப்பெறக்கூடிய பெறுமதி என்பது, மதிப்பிடப்பட்ட விற்பனை விலை ஆகும். இதனடிப்படையிலேயே சாதாரண வியாபாரச் சூழ்நிலைகளின் போது இருப்பிலுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்படும். இதிலிருந்து பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படுகின்ற மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட விலை ஆகியன கழிக்கப்படும்.

#### 3.1.4.3 உள்ளீட்டுப் பொருள், நுகர்வுப்பொருள் மற்றும் உதிரிப்பொருட்கள்

உள்ளீட்டுப் பொருட்கள், உதிரிப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் என்பன FIFO அடிப்படையில் உண்மையான விலையில் மதிப்பீடு செய்யப்படும்.

#### 3.1.4.4 பயிர் வளர்ப்பு நாற்றுப் பண்ணைகள்

நாற்றுப் பண்ணை விலை, நேரடிப் பொருட்களின் விலை, நேரடி ஊழியம் மற்றும் பொருத்தமான விகிதாசார அடிப்படையிலான நேரடியாக அடையக்கூடிய மேலதிகச் செலவுகள் மிகை வளர்ச்சியடைந்த தாவரங்கள் என்பவற்றுக்கு ஏற்படுகின்ற செலவுகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

### 3.1.5 காசு மற்றும் காசுக்கு சமமானது

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், காசு மீதிகள், அழைப்பு வைப்புகள், கேள்வி வைப்புகள் மற்றும் குறைந்தகால உடனடியாக பணத்தொகைகளாக மாற்றக்கூடிய உயரிய திரவ முதலீடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களுக்காக கேள்வியின் மீது மீளச் செலுத்தக்கூடிய வங்கி மேலதிகப்பற்றின் பெறுமதி ஆயின் அது குறிப்பிடத்தக்க அளவு இடர் மாற்றங்களுக்கு உட்படக்கூடியது ஆகியன இவற்றில் உள்ளடங்கும்.

## 3.2 பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்

பொறுப்புகள் நிதி நிலைமை கூற்றுக்களின் மீதான நடைமுறைப் பொறுப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும். அவையாவன: கேள்வியின் மீது கொடுப்பனவு செய்ய வேண்டியவை அல்லது அறிக்கையிடும் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவை என்பனவாகும். நடைமுறை அல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியில் இருந்து ஒரு வருடம் பூர்த்தி அடைந்த பின்பு செலுத்தப்பட வேண்டிய தொகைகளின் மீதிகளாகும். அனைத்து பொறுப்புக்களும் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்படும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்வு ஒன்றின் காரணமாக, கம்பனி தற்போது சட்ட அல்லது ஆக்கம் சார்ந்த கடப்பாடு ஒன்றுக்கு பொறுப்புள்ள போது அத்துடன் அது உண்மையான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற போதும் அத்துடன் அத்தகைய கடப்பாடு ஒன்றை சமரசப்படுத்துவதற்கு பொருளாதார அனுகூலத்தின் வெளிப்பாய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ள போது ஒதுக்கீடு ஒன்று அங்கீகரிக்கப்படும்.

### 3.2.1 தொழிலாளர்களுக்கான அனுகூலங்கள்

#### 3.2.1.1 வரையறுக்கப்பட்ட பங்கீட்டுத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம்

வரையறுக்கப்பட்ட பங்கீட்டுத் திட்டம் என்பது, தொழிலின் பின்னர் வழங்கப்படும் ஒரு அனுகூலமாகும். இதன் கீழ் ஒரு கம்பனி, நிலையான பங்கீடுகளை இன்னுமொரு அமைப்புக்குச் செலுத்துவதுடன், மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சட்ட ரீதியான அல்லது ஆக்கம் சார்ந்த கடப்பாடு ஒன்று ஏற்படாது. திட்டமிடப்பட்ட பங்கீட்டு ஓய்வூதியத் திட்டங்களுக்கான பங்கீடுகளைச் செய்வதற்கான கடப்பாடுகள் ஊழியர் நலன் செலவு என அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், ஊழியர்களால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு சேவைகளை வழங்கிய காலப்பகுதியின் போது கம்பனி இலாபம் அடைந்திருந்தாலும், நட்டம் அடைந்திருந்தாலும் இதனை வழங்க வேண்டும்.

நிறுவனம் மொத்த பணியூதியங்களில் இருந்து 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) தோட்டப் பணியாட்கள் சேமலாப அமைப்புக்கும் (ESPS) வழங்குகிறது.

அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். அத்தகைய ஊழியர்களுக்கு கம்பனி மொத்த பணியூதியங்களில் இருந்து 3% பங்களிப்புச் செய்கிறது.

#### 3.2.1.2 வரையறுக்கப்பட்ட நலன்திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்கள் ஒரு ஊழியர் ஓய்வு பெறுகின்ற போது பெறக்கூடிய தொகையை வரையறை செய்கிறது. இது பொதுவாக வயது, சேவைக்காலம், நட்டஈடு போன்ற ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளின் அடிப்படையிலோ தீர்மானிக்கப்படும்.

கம்பனி தகுதியான ஊழியர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட நலத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நிதி முழுமையாக கம்பனியில் இருந்து பங்களிப்புச் செய்யப்படுகிறது. சுயாதீனமான, தகுதிவாய்ந்த காப்பீட்டுக் கணிப்பாளர்களுடைய ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு, கம்பனி பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டது.

நிதிநிலைக் கூற்றில் வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்பு என்பது, அறிக்கையிடும் திகதியில் வரையறுக்கப்பட்ட அனுகூலம் தொடர்பான கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதியைக் குறிக்கும். இது, கடந்தகால அங்கீகரிக்கப்படாத சேவைக்கான செலவுகளையும் உள்ளடக்கும். கம்பனி வரையறுக்கப்பட்ட நலத் திட்டத்திற்கான கடப்பாட்டினை வருடம் தோறும் கணக்கிடுவதுடன் அதற்கு ஊழியர்கள் நலன் தொடர்பான இலங்கையின் கணக்கியல் தரம் 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகடன் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட நலன் தொடர்பான கடப்பாடுகளுடைய நடைமுறைப் பெறுதியைத் தீர்மானிக்கும் போது, நாணய அடிப்படையில் பெயரிடக்கூடிய அரசாங்க முறிகளுக்கான வட்டி வீதங்களைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நிதிப் பாய்ச்சல்கள் கழிக்கப்பட்டு கணக்கிடப்படும். இந்த அடிப்படையில் நலன்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன், அது, தொடர்புடைய ஓய்வூதியப் பொறுப்புடைமை தொடர்பான விதிகளோடு பொருந்தக்கூடியதாக இருக்கும்.

அனுபவமுள்ள சீர்ப்படுத்தல்கள் மற்றும் காப்பீட்டுக் கணிப்பீட்டாளர்களின் ஊகங்களில் இருந்து எழக்கூடிய பெறுவனவுகளும், நட்டங்களும், அக்காலப்பகுதியின் போது இருக்கக்கூடிய ஏனைய விரிவான வருமானத்தில் இருந்து அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும்.

தொழிலாளர்களின் மிகுதி சேவைக்காலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருக்குமாயின், அக்காலத்தில் ஏதேனும் மாற்றங்கள் எற்படாத வரையில், கடந்தகால சேவைக்கான செலவுகள் விரிவான வருமானக் கணக்கில் உடனடியாக அங்கீகரிக்கப்படும். (கையளிக்கும் காலப்பகுதி) இச்சந்தர்ப்பத்தில், கடந்தகால சேவைக்கான செலவுகள் நேர் கோட்டு அடிப்படையில் கையளிக்கும் காலப்பகுதியில் கடன் தீர்ப்பு செய்யப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி தொடர்ச்சியாக 05 வருடகால சேவையைப் பூர்த்தி செய்கின்ற போது மாத்திரமே நிறுவனம் ஒன்றுக்கு கடப்பாடு தோன்றும்.

ஓய்வு நலத் திட்டம் தொடர்பான கடப்பாடுகளைத் தீர்மானிப்பதில் கருத்தில் எடுக்கப்படுகின்ற முக்கியமான ஊகங்கள் குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளன.

### 3.3 மூலதனப் பொறுப்புகளும் எதிர்பாரா செலவுகளும்

எதிர்பாராத செலவுகள் கடந்கால நிகழ்வு ஒன்றின் மூலம் எழுகின்ற சொத்துக்களாகவோ அல்லது பொறுப்புக்காகவோ இருக்கலாம். இது, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் இடம்பெறுகின்ற போதோ அல்லது இடம்பெறாத போதோ மாத்திரமே பூர்த்தி செய்யப்படும். இது கம்பனிகளுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்.

அனைத்து மூலதனப் பொறுப்புகளும் எதிர்பாராத செலவு தொடர்பான பொறுப்புகளும் குறிப்பு 29 இல் வெளிப்படுத்தப்படடுள்ளன.

### 3.4 ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

#### 3.4.1 அரசாங்க மானியங்களும் உதவு தொகைகளும்

அரசாங்க மானியங்கள் முறையாகப் பெறப்படும் அத்துடன் அதனோடு இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்ற நியாயமான உறுதிப்பாடு ஒன்று இருக்கும் போது மாத்திரமே அரசாங்கக் கொடைகள் அங்கீகரிக்கப்படும். இக்கொடை சொத்து ஒன்றாக இருக்கின்ற போது சொத்தைப் பராமரிப்பதற்கான தொகை அதிலிருந்து கழிக்கப்படும். குறிப்பிட்ட கொடை செலவுக்கான ஒரு அம்சமான இருக்கின்ற போது அது, ஈடு செய்யப்பட வேண்டிய செலவுகளின் அடிப்படையில் ஒரு கிரமமான அடிப்படையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குத் தேவையான வருமானம் என அங்கீகரிக்கப்படும்.

### 3.5 விரிவான வருமானக் கணக்குக் கூற்று

விரிவான வருமானக் கணக்குக் கூற்று ஒன்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக செலவு தொடர்பான விடயங்கள் கம்பனியுடைய செயற்பாட்டு அம்சங்களை நியாயமான அடிப்படையில் பிரதிபலிக்கும் என்ற கருத்தை இயக்குநர்கள் கொண்டுள்ளனர். எனவே, அத்தகைய சமர்ப்பிக்கும் முறைமை கணக்குக் கூற்று சமர்ப்பணம் LKAS 1 ஏற்பாட்டின் பிரகாரம் கையாளப்பட்டுள்ளது.

#### 3.5.1 வருமான அங்கீகாரம்

வருமானம் ஒன்று கம்பனியுடைய பொருளாதார நலன்கள் சுமுகமாக நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கின்ற அளவுக்கும் அத்துடன், அதனோடு தொடர்புபட்ட உறப்பட்ட செலவுகள் அல்லது உறப்படவுள்ள செலவுகளை உண்மையாக மதிப்பீடு செய்யப்படுகின்ற போது மாத்திரமே அங்கீகரிக்கப்படும். வருமானமானது, பெறப்பட்ட பிரதிபயன் அல்லது பெறப்பட இருக்கின்ற பிரதிபயன் என்பவற்றை நியாயமான பெறுமதியின் அடிப்படையிலும், நிகர வர்த்தக கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் அத்துடன் அவற்றிலிருந்து கம்பனிக்குள் நடைபெற்ற விற்பனைகளை நீக்கி அறவிடப்படும். வருமானத்தை அங்கீகரிக்கும் நோக்கத்திற்காக கீழே தரப்பட்டுள்ள விசேட தகுதிகாண் அளவுகள் பயன்படுத்தப்படும்.

##### 3.5.1.1 பொருள் விற்பனைகள்

பொருட்கள் விற்பனைகளில் இருந்து பெறப்படுகின்ற வருமானமானது, தூண்டக்கூடிய சான்றுகள் இருக்கின்ற போது அங்கீகரிக்கப்படும். இது, வழமையாக நிறைவேற்றப்பட்ட விற்பனை உடன்படிக்கை அடிப்படையில் இருக்கும். குறிப்பிடத்தக்க விசேட இடர்கள் மற்றும் உரிமையாளரின் வெகுமதிகள் பொருட்களை வாங்குபவருக்கு மாற்றப்படும். இது வழமையாக பொருட்களை விநியோகிக்கின்ற போது செய்யப்படும். பிரதி-பயனை மீளப் பெறுவது சாத்தியமாக உள்ள வேளையில் இது நடைபெறும். இதனுடன் தொடர்புபட்ட செலவுகளும் சாத்தியமான பொருள் திரும்பல்களும் உண்மையாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும். பொருட்கள் தொடர்பான தொடர்ச்சியான முகாமைத்துவம் ஒன்று இருக்காது. அத்துடன், வருமானத்தின் அளவு உண்மையாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும். வருமானம் விலைப்பட்டியல் பெறுமதியில் பதிவு செய்யப்படும்.

##### 3.5.1.2 வட்டி வருமானம்

வட்டியைச் சேகரிப்பதில் எவ்வித ஐயப்பாடும் ஏற்படாத வரையில் பெறப்படுகின்ற வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்படும். (சொத்தில் இருந்து பெறப்பட்ட வினைத்திறனான பெறுபேறு கருத்தில் எடுக்கப்படும்)

##### 3.5.1.3 தீர்வு முடிப்பின் போதான பெறுவனவுகளும் நட்டங்களும்

ஏதேனும் ஒரு சொத்து, உபகரணங்கள் என்பவற்றின் தீர்வு முடிப்பின் போதான பெறுவனவுகளும் நட்டங்களும் அந்த சொத்து, உபகரணங்கள் தொடர்பாக கொண்டு செல்லக்கூடிய தொகைகளுடன் பெறப்பட்ட நிகர விற்பனை வருவாய்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அத்துடன், இது, கம்பனியின் விரிவான வருமானக் கூற்றில் “ஏனைய வருமானம்” என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

#### 3.5.2 செலவுகளின் அங்கீகாரம்

##### 3.5.2.1 செயற்பாட்டு செலவுகள்

வியாபார நடவடிக்கையின் போது நாளாந்தம் எற்படுகின்ற செயற்பாட்டு ரீதியான அனைத்து செலவுகளும் சொத்துக்கள், உபகரணங்கள் என்பவற்றை நல்ல நிலையில் பேணிப் பாதுகாப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் என்பனவாகும். நிதி சாராத சொத்துக்கள், மந்தகதியில் செல்லும் இருப்புக்கள் மிகை வளர்ச்சியைடந்த தாவரங்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் சொத்து பெறுமானத் தேய்வு, சொத்து உபகரணங்கள் என்பனவுடனான தேய்வு ஈடு செய்வதற்காக ஒதுக்கீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

##### 3.5.2.2 நிதிச் செலவு

வெளியிலிருந்து பெறப்பட்ட பெறுவனவுகளுக்கான வட்டிச் செலவுகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள குத்தகைக்கான

கொடுப்பனவுகள் என்பன நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படும். பெறுவனவுகளுக்கான செலவுகள் பலன்தரும் வட்டி விகித முறைமையைப் பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தை அங்கீகரித்துள்ள தகுதிவாய்ந்த சொத்து ஒன்றை உற்பத்தி செய்தல் அல்லது நிர்மாணித்தல், கையேற்புச் செய்தல் என்பவற்றுடன் நேரடித் தொடர்புடையதாக இருக்காது. செயற்பாட்டிலுள்ள குத்தகைக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் குத்தகைக் காலப்பகுதியின் போது வருமான நட்டத்தில் வருமானமாக அல்லது நட்டமாக நேர்கோட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்படும்.

### 3.5.2.3 வரிச் செலவு

வருமான வரிச் செலவு நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்கியது. வருமான வரிச் செலவு விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது பங்குகளில் அங்கீகரிக்கப்படும் போது, பங்குகளில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பொருட்களுடன் தொடர்புடையதாக இருக்கும்.

### 3.5.2.3.1 நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிகளுக்கான நடைமுறை வரி செலவு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு (அறிக்கையிடப்படும் திகதியில் உள்ள திருத்தங்கள் உள்ளடங்கலாக) அமைய வருமான வரி செயலாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட வரி ஆண்டின் கணக்கெடுக்கப்பட்ட வருமானம் தொடர்பாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்த எதிர்பார்க்கின்ற தொகையாகும்.

### 3.5.2.3.2 ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு

கொண்டு செல்லப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு நிதி அறிக்கையிடும் நோக்கங்களுக்காக அவற்றுக்கிடையில் ஏற்படுகின்ற தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக பொறுப்பு முறையைப் பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு அங்கீகரிக்கப்படும்.

ஒத்திவைக்கப்பட்ட வரி கீழே தரப்பட்டுள்ள தற்காலிக வேறுபாடுகளுக்கு அங்கீகரிக்கப்படவில்லை. ஒரு வியாபாரத்துடன் இணைப்பாக அல்லாத ஒரு கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்ட ஆரம்ப சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அத்துடன் அது, கணக்கியல் அல்லது வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தை அத்துடன் துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளில் ஏற்பட்ட வேறுபாடு அத்துடன் கூட்டிணைந்த கட்டுப்பாட்டில் இருந்த அமைப்புகள் என்பனவற்றைப் பாதிக்காத போது அந்த அளவில் அது எதிர்காலத்தில் வேறு விதமாக நடைபெறாது என்பதற்கு சாத்தியம் உள்ள போது. மேலும், ஒத்திவைக்கப்பட்ட வரி ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் நன்மதிப்பில் இருந்து தோன்றுகின்ற வரிவிதிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

அறிக்கையிடப்படும் திகதியில் உருவாக்கப்பட்ட சட்டம் அல்லது அதற்கு முன் உருவாக்கப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வேறுபாடுகள் மீள் திரும்புகின்ற போது இருக்கக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட பிரயோகிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு பிரயோகிக்கக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட வரி விகிதங்களின் அடிப்படையில் அளவிடப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி ஆதனம், பயன்படாத வரி நட்டங்கள், வரி கடன்கள் அல்லது கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் என்பற்றுக்கு அங்கீகரிக்கப்படும். இது, எதிர்கால வரி விதிப்பு இலாபங்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியுமோ அந்தளவிற்கு அங்கீகரிக்கப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி ஆதனங்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படும். அத்துடன், உத்தேசிக்கப்பட்ட வரி அனுகூலம் பெறப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்ற போது அந்த அளவிற்கு ஒத்திவைக்கப்பட்ட வரி குறைக்கப்படும்.

ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களும், ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புக்களும் நடைமுறை வரிச்சொத்துக்களுக்கு எதிராக நடைமுறை வரி பொறுப்புக்களை தீதறுப்புச் செய்வதற்கான சட்ட ரீதியான செயற்படத்தக்கூடிய உரிமையுள்ள போதும் ஒத்தி வைக்கப்பட்ட வரிகள் அதே வரி விதிக்கக்கூடிய அமைப்பு மற்றும் அதே வரிவிதிப்பு அதிகார சபையாக உள்ள போது தீதறுப்புச் செய்யப்படும்.

பொருத்தமான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் உரிய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.6 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்

காசுப்பாய்ச்சல் கூற்று "உட்கிடை முறையைப்" பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட குத்தகை வாடகை செலுத்தப்பட்ட பங்குலாபம் மற்றும் பெறப்பட்ட கொடைகள் என்பன நிதியிடல் காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படுள்ளன. அதேவேளையில், பெறப்பட்ட வட்டி, பெறப்பட்ட பங்குலாபங்கள் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றினைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக முதலீட்டு காசுப்பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.7 ஒரு பங்கிற்கான வருமானம்

கம்பனி அதனுடைய சாதாரண பங்குக்கு ஒரு பங்குக்கான அடிப்படை வருமானங்களுக்கான (EPS) தரவுகளை சமர்ப்பித்துள்ளது. அடிப்படை EPS கம்பனியுடைய சாதாரண பங்குதாரர்களுக்கு ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களை குறிப்பிட்ட காலப்பகுதியின் போது செலுத்தப்பட வேண்டிய சாதாரண பங்குகளின் எடையிட்ட சராசரி அளவில் வகுக்கப்பட்டு கணக்கிடப்படும்.

## 3.8 அறிக்கையிடப்பட்ட காலப்பகுதிக்குப் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

அறிக்கையிடப்படுகின்ற இறுதிக் காலப்பகுதிக்கும் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட காலப்பகுதிக்கும் இடையில் நடைபெற்ற சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் ஆகும். அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குப் பின்னர் நடைபெறும் நிகழ்வுகளில் நடைமுறைப்படுத்தப்படல் கருத்தில் எடுக்கப்படுவதுடன் தேவையான நேரத்தில் சீர் செய்யப்படும் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும்.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| **4 வருமானம்** | | |
| தென்னை (குறிப்பு 4.1) | **532,156,734** | 459,162,402 |
| இறப்பர் (குறிப்பு 4.2) | **27,016,608** | 34,990,910 |
| தேங்காய் மட்டை | **27,045,956** | 24,494,539 |
| றம்புட்டான் | **6,516,631** | 7,827,142 |
| மிளகு | **1,107,361** | 4,343,035 |
| மர முந்திரிகை | **9,982,565** | 6,207,285 |
| மா மரம் | **1,272,630** | 5,498,639 |
| மேய்ச்சல் புல்லும் அலங்கார செடிகளும் | **799,150** | 4,777,282 |
| ஏனையவை | **6,862,448** | 5,731,188 |
| | **612,760,082** | 553,032,421 |
| **4.1 தெங்கு மூலமான வருமானம்** | | |
| பாவனைத் தேங்காய்கள் | **501,018,678** | 422,555,707 |
| விதைத் தேங்காய்கள் (373,529 தேங்காய்கள்) | **24,034,439** | 20,524,602 |
| கொப்பறா | **7,103,617** | 16,082,094 |
| | **532,156,734** | 459,162,402 |
| | | |
| உற்பத்தி (தேங்காய்கள்) | **12,553,886** | 10,647,351 |
| விற்பனை (தேங்காய்கள்) | **12,311,991** | 10,525,008 |
| நிகர சராசரி விற்பனை (ஒவ்வொரு 1000 தேங்காய்களுக்கும்) | **43,223** | 43,626 |
| விற்பனைச் செலவினம் (ஒவ்வொரு 1000 தேங்காய்களுக்கும்) | **24,071** | 23,590 |
| | | |
| **4.2 இறப்பர் மூலமான வருமானம்** | | |
| RSS | **11,815,954** | 15,097,246 |
| லேரெக்ஸ் | **12,807,686** | 18,241,340 |
| கழிவுகள் மற்றும் வெட்டுத் துண்டுகள் | **2,392,967** | 1,652,325 |
| | **27,016,608** | 34,990,910 |
| | | |
| உற்பத்தி (கிலோ கிராம்) | **113,085** | 119,486 |
| விற்பனை (கிலோ கிராம்) | **111,112** | 113,407 |
| நிகர சராசரி விற்பனை (ஒவ்வொரு 01 கிலோவுக்கும்) | **243** | 309 |
| விற்பனைச் செலவினம் (ஒவ்வொரு 01 கிலோவுக்கும்) | **340** | 324 |

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018 | 2017 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **5 விற்பனைச் செலவினம்** | | |
| தென்னை | 296,360,095 | 248,279,748 |
| இறப்பர் | 37,828,715 | 36,775,391 |
| றம்புட்டான் | 2,721,547 | 1,862,186 |
| மிளகு | 3,449,054 | 3,659,498 |
| மர முந்திரிகை | 2,770,708 | 3,112,925 |
| மா மரம் | 2,567,175 | 1,610,230 |
| மேய்ச்சல் புல்லும் அலங்கார செடிகளும் | 1,627,893 | 4,981,673 |
| வலுக்குறைந்த தோட்டங்கள் மூலமான நட்டம் | - | 11,110,806 |
| ஏனையவை | 8,335,610 | 4,650,293 |
| | 355,660,797 | 316,042,751 |
| **6 ஏனைய செயற்படு வருமானம்** | | |
| பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் விற்பனைகள் மூலம் இலாபம் (குறிப்பு 6.1) | 24,939,181 | 28,536,868 |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் விற்பனை மற்றும் அகற்றல் மூலமான இலாபம்/(நட்டம்) | 1,464,506 | 64,886 |
| நீதியான பெறுமதியிலிருந்து மாற்றப்பட்ட இலாபம் - பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் | 19,262,318 | 48,452,131 |
| காலம் தாழ்த்தி அகற்றுதலும் கொடுப்பனவுக் கட்டணமும் - தேங்காய் | 6,850,141 | 7,870,634 |
| குத்தகைக் கட்டண வருமானம் | 11,891,000 | 9,237,202 |
| மணல் / மண் | - | 2,791,229 |
| பின்பதிவு / (பதிவழிப்பு) | 2,769,017 | 1,561,305 |
| ஏனைய நானாவித வருமானம் | 1,427,040 | 1,916,280 |
| | 68,603,202 | 100,430,534 |
| | | |
| 6.1 பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் மூலமான இலாபம் - தென்னை மர விற்பனைகள் | 18,248,411 | 21,470,764 |
| கழி: ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் மரங்களை அகற்றுவதற்கான செலவு | (425,961) | (669,216) |
| கூட்டு: டிசம்பர் 31 இல் திரட்டிய தேய்மானம் | 376,822 | 569,728 |
| | 18,199,272 | 21,371,276 |
| | | |
| பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் விற்பனை மூல இலாபம் - இறப்பர் மர விற்பனைகள | 7,484,991 | 7,285,504 |
| கழி: ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் மரங்களை அகற்றுவதற்கான செலவு | (3,722,367) | (457,776) |
| கூட்டு: டிசம்பர் 31 இல் திரட்டிய தேய்மானம் | 2,977,286 | 337,864 |
| | 6,739,910 | 7,165,592 |
| | | |
| பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் விற்பனை மூல இலாபம் | 24,939,181 | 28,536,868 |
| | | |
| **7 நிர்வாகம் மற்றும் பொதுச் செலவினம்** | | |
| சம்பளப் பட்டியல் தொடர்பான செலவினம் (குறிப்பு 7.1) | 108,336,423 | 84,786,006 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 11,908,938 | 10,607,911 |
| ஏனைய நிர்வாகச் செலவினங்கள் | 34,101,054 | 36,092,636 |
| | 154,346,415 | 131,486,553 |

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| | **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான இலாபம்** | | |
| | கீழ்க்காணும் விடயங்கள் சீராக்கப்பட்ட பின் - | | |
| | | | |
| | பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் | **4,092,350** | 5,554,762 |
| | சட்டபூர்வ கணக்காய்வுக்கான கணக்காய்வாளர் கட்டணம் | **632,500** | 575,000 |
| | அன்பளிப்புக்கள் | **399,052** | 547,026 |
| | தேய்மானம்/படிப்படியாகச் செலுத்துதல் - | | |
| | JEDB தோட்டங்களின் வெற்றுக்காணிகளுக்கான குத்தகை உரிமை | **2,614,258** | 2,614,258 |
| | JEDB தோட்டங்களின் அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் | **3,541,561** | 3,904,648 |
| | முதிர்ந்த பெருந்தோட்டங்கள் | **14,202,140** | 12,585,172 |
| | ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | **30,693,539** | 37,525,461 |
| | ஆளணிச் செலவு உள்ளிட்ட - | | |
| | குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை<br>குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம் - | **15,753,184** | 16,001,335 |
| | ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி (குறிப்பு 7.1) | **49,337,035** | 30,571,724 |
| | செயற்பாட்டு ஊக்கத் தொகை | **35,595,238** | 27,535,405 |
| | போனஸ் | **10,690,875** | 10,876,615 |
| | விடுமுறைக் கொடுப்பனவு | **6,698,059** | 6,659,951 |
| | மருத்துவ விடுமுறை | **4,713,525** | 4,406,811 |
| | சம்பளங்களும் கட்டணங்களும் | **245,443,029** | 225,877,260 |
| | | | |
| 8 | **தேறிய நிதித்துறை வருமானம்/(செலவுகள்)** | | |
| | நிதித்துறை வருமானம் | | |
| | தவணை வைப்பு மீதான வட்டி | **73,291,169** | 64,113,947 |
| | REPO மீதான வட்டி (குறிப்பு 8.1) | **2,317,053** | 1,938,563 |
| | ஊழியர் கடன் பெறுகைகள் மீதான வட்டி | **827,809** | 644,427 |
| | ஊழியர் நன்மைகள் முற்கொடுப்பனவு மீளப் பெறுகை | **1,340,190** | 909,966 |
| | | **77,776,221** | 67,606,903 |
| | | | |
| | கழி: நிதித்துறைச் செலவினம் | **26,380,300** | 24,704,796 |
| | குத்தகை மீதான வட்டி | **1,340,190** | 909,966 |
| | ஊழியர் செலவினம் இலதாக்கல் | **27,720,490** | 25,614,762 |
| | | | |
| | தேறிய நிதி மூல வருமானம் / (செலவுகள்) | **50,055,731** | 41,992,141 |
| | | | |
| 9 | **வருமான வரி செலவுகள்** | | |
| | தற்போதைய வருமான வரி செலவுகள் (குறிப்பு 9.1 மற்றும் 9.2) | **15,825,106** | 29,025,262 |
| | ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு (குறிப்பு 9.3 மற்றும் 25) | **16,592,478** | 57,103,319 |
| | | **32,417,584** | 86,128,581 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |

**9.1** தற்போதைய வருமான வரி செலவு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கம்பனிகளுக்கான வரி விகிதங்கள் என்ற பிரிவில் முதலாவது அட்டவணை விடயம் 4, 2(c) யின் பிரகாரம், பாரிய அளவில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஒரு நிறுவனம் (விவசாய, தோட்ட வேளாண்மை அல்லது எந்தவொரு விலங்கின உற்பத்தியை முக்கியமாகக் கொண்ட நடவடிக்கைகள், கால்நடை அல்லது கோழிப்பண்ணையை நடத்துதல்) 14% இல் வருமான வரியை செலுத்துவது அவசியமாகும். வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் மொத்த விவசாய வருமானம், அதன் மொத்த வருமானத்தில் 80% இலும் பார்க்க கூடியதாக உள்ளதனால் அந்த நிறுவனம் அதன் வரிவிதி வருமானத்தில் 14% ஐ வருமான வரியாக செலுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளது.

## 9.2 வருமான வரிக்கு கணக்கியல் இலாபத்திற்கிடையிலான இணக்கம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| வரிக்கு முந்திய கணக்கியல் இலாபம் (குறிப்பு 09.2.1) | **221,411,803** | 247,925,792 |
| ஏனைய துறைகளிலிருந்து வருமானமும் விலக்களிக்கப்பட்ட வருமானமும் | **(101,698,300)** | (117,821,882) |
| | **119,713,503** | 130,103,910 |
| அனுமதிக்கக்கூடாத விடயங்களின் தொகை | **68,768,174** | 84,225,958 |
| அனுமதிக்கக்கூடிய விடயங்களின் தொகை | **(163,772,235)** | (147,882,429) |
| வர்த்தகத்திலிருந்து சீராக்கப்பட்ட இலாபம் | **24,709,441** | 66,447,439 |
| ஏனைய வளங்கள் மூலமான வருமானம் | **88,327,031** | 66,696,937 |
| மதிப்பிடக்கூடிய வருமானம் | **113,036,472** | 133,144,376 |
| தகைமைபெற்ற கொடுப்பனவுகள் -- | **-** | - |
| **வரிவிதி வருமானம்** | **113,036,472** | 133,144,376 |

| | | |
|---|---|---|
| சலுகை விகிதம் முக்கியமாக 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விவசாய சட்டத்தின் ஏற்பாடு | **113,036,472** | |
| சலுகை விகிதத்தில் வரிவிதி வருமானம் - 48A 2016 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) | | 45,862,019 |
| ஏனைய வருமானம் | | 87,282,358 |
| | **113,036,472** | 133,144,376 |

| | | |
|---|---|---|
| சலுகை விகித வரி, முக்கியமாக விவசாயத்திற்கான ஏற்பாடு | **15,825,106** | - |
| விவசாய நடவடிக்கைகள் மீதான வரி | **-** | 4,586,202 |
| ஏனைய வருமானங்கள் மீதான வரி | **-** | 24,439,060 |
| மொத்த வருமான வரி பொறுப்பு | **15,825,106** | 29,025,262 |

## 9.3 ஒத்தி வைக்கப்பட்ட வரி

நிதித்துறை அறிவிப்புகள் காரணமாக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் தொகைகளிலிருந்து எழும் தற்காலிக வேறுபாடுகள் சம்பந்தமாக, பொறுப்புக்கள் வழிமுறையின் கீழ் பின்தள்ளிய வரி தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 26 ஆம் இலக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம், தொகைகள் வரி அமைப்பில் இடம்பெற்றுள்ள அறிக்கைகளில் ஆண்டிற்கான நிதித்துறை அறிக்கைகளின் கீழ், பின்தள்ளி வைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள், குறிப்பிட்ட ஆண்டில் நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கைகளில் எதிர்கால வரி விதிப்பு விகிதத்தில் 14% ஒத்திவைக்கப்பட்ட வரி கணக்கிடப்படுகிறது.

**பின்தள்ளிய வரி செலவினம் / (வருமானம்) இருந்து உருவானது:**

| | 2018 | 2017 |
|---|---|---|
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | **1,784,565** | 4,423,620 |
| பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் | **13,355,775** | 44,465,243 |
| நுகர்வுக்குரிய உயிரியல் சொத்துக்கள் | **1,723,140** | 10,898,784 |
| அறவிட முடியாக்கடன்கள் மற்றும் சந்தேகக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | **(37,596)** | (122,994) |
| சேவையாளர் நன்மைப் பொறுப்புக்கள் | **(233,406)** | (2,561,334) |
| | **16,592,478** | **57,103,319** |

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |

## 10. ஒரு பங்கிற்கான சம்பாத்தியம்

ஒரு பங்கிற்கான சம்பாத்தியத்தின் கணிப்பு, சாதாரண பங்குதாரரின் ஆண்டுக்கு உரித்தான இலாபத்தை அந்த ஆண்டுக்கான கணக்கிடப்பட்ட சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் தொகையாகும்.

### 10.1 ஒரு பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்கு ஒதுக்க வேண்டிய இலாபம் (ரூபா) | **188,994,219** | 161,797,211 |
| மதிப்புறு சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | **20,000,001** | 20,000,001 |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் (ரூபா சதம்) | **9.45** | 8.09 |

### 10.2 ஒரு பங்கிற்கான காத்திரமன்ற சம்பாத்தியம்

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் எந்தவொரு சமயத்திலும், எந்தவொரு காத்திரமற்ற சாதாரண பங்குகளும் எஞ்சியிருக்கவில்லை. எனவே, ஒரு பங்கிற்கான காத்திரமற்ற சம்பாத்தியம் மேலே தரப்பட்ட ஒரு பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியமாகும்.

## 11. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் வெற்றுக் காணிக்கான குத்தகை உரிமை

11.1 நிறுவனம் அமைக்கப்பட்டதுடன், 1992 ஜுன் 18 ஆம் திகதியில் சகல பெருந்தோட்டங்களினதும் குத்தகை உரிமை நிறுவனத்தின் பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் துரித நடவடிக்கைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1995 மார்ச் 08 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் காணிகள் அனைத்தும் மீள் மதிப்பீடு செய்யப்படும் என்றும், நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்னர் காணி மதிப்பீட்டு நிபுணர் திரு.டீ.ஆர்.விக்கிரமசிங்கவினால் தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 1992 ஜுன் 18 ஆம் திகதிய நிதி நிலைமை சம்பந்தமான அறிக்கைக்கென கொண்டு செல்லப்பட்ட மீள் மதிப்பீட்டுத் தொகை ரூபா 189,234,932 ஆகும். கொண்டு செல்லப்பட்ட பெறுமதிகளின் விபரங்கள் குறிப்பு 11.3 இல் தரப்பட்டுள்ளன. இருந்த போதிலும், LKAS/SLFRS இன் தீர்மானம் நடைமுறைக்கிடப்பட்டதை அடுத்து, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் UITF தீர்மானத்தை வாபஸ் பெற்றதோடு, குத்தகைக் காணி சம்பந்தமாகப் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகளைக் கொண்டு அறிக்கையை (SoRP) 2012 டிசம்பர் 19 ஆம் திகதி அறிமுகம் செய்துள்ளது. பரிந்துரை செய்யப்பட்ட வழிமுறைகள் அறிக்கைக்கு அமைய காணியை உபயோகிக்கும் உரிமை இருப்பதனால் மாத்திரம் மேலும் மீள் மதிப்பீடு அனுமதிக்கப்பட மாட்டாது.

11.2 மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை (JEDB) சகல 13 பெருந்தோட்டங்களையும் நிறுவனத்திடம் ஒப்படைத்த போதிலும், ஐந்து பெருந்தோட்டங்களின் குத்தகை ஒப்பந்தம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எஞ்சிய 08 பெருந்தோட்டங்களின் (தம்பதெனிய, தொடங்கஸ்லந்த, ஹிரியால, கட்டுகம்பொல, குருநாகல், மஹாயா, நாரம்மல மற்றும் வாரியப்பொல) குத்தகைய ஒப்பந்தங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்றப்படாத பெருந்தோட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், நிறுவனம் மக்கள் பேருந்தோட்ட அபிவிருத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்தப் பதிவேட்டு ஒப்பந்தம், நிறுவனத்திற்கும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இடையிலான உடன்படிக்கை எனக் கருதப்படுகின்றது.

## 11.3 வெற்றுக்காணிகளுக்கான குத்தகை உரிமம் (53 வருடங்கள்)

| செலவினம் | | ரூபா. |
|---|---|---|
| 18.06.1992 இல் மூலதனப் பெறுமானம் | | |
| 18.06.1992 - 31.12.2017 முதல் கட்டுப்பாட்டு வட்டி மாற்றத்தை அகற்றுவதற்கான தீர்மானம் | | 189,234,932 |
| 31.12.2017 அன்று நிலுவை | - | (50,586,168) |
| 01.01.2018 முதல் 31.12.2018 வரை கட்டுப்பாட்டு வட்டி மாற்றத்தை அகற்றுவதற்கான தீர்மானம் - | | 138,648,764 |
| | - | - |
| 31.12.2018 அன்று நிலுவை | | 138,648,764 |

| இலதாக்கல் | |
|---|---|
| 01.01.2017 இல் திரட்டிய இலதாக்கல் | 64,196,140 |
| 2017 ஆம் ஆண்டிற்கான இலதாக்கல் | 2,614,257 |
| 31.12.2017 இல் திரட்டிய இலதாக்கல் | 66,810,397 |
| 2018 ஆம் ஆண்டிற்கான இலதாக்கல் | 2,614,258 |
| 01.01.2018 முதல் 31.12.2018 வரை கட்டுப்பாட்டு வட்டி மாற்றத்தை அகற்றுவதற்கான தீர்மானம் | - |
| 31.12.2018 இல் நிலுவை (குறிப்பு A) | 69,424,655 |

| பதிவழிக்கப்பட்ட பெறுமதி | |
|---|---|
| 31.12.2017 இல் 71,838,367 | 71,838,367 |
| 31.12.2018 இல் 69,224,109 | 69,224,109 |

| குறிப்பு – A | |
|---|---|
| 18.06.1992 - 17.06.2045 வரை குத்தகைக்கால நாட்கள் 19,358 | 19,358 |
| 18.06.1992 - 31.12.2018 வரை குத்தகைக்கால நாட்கள் 9,693 | 9,693 |
| 31.12.2018 இல் இலதாக்கல் (138,648,765 / 19,358 x 9,693)69,424,655 | 69,424,655 |

## 12 அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் (வெற்றுக் காணிகள் தவிர)

ஏற்கனவே, குறிப்பு 11 இல் விபரிக்கப்பட்ட பிரகாரம் UITF இன் தீர்ப்பின் காரணமாக, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் சகல குத்தகைகளும் இன்று வரை நிறைவேற்றப்படாத போதிலும், நிதிக் குத்தகையின் கீழ் உள்ள இந்தப் பெருந்தொட்டங்களில் காணப்படும் சகல அசைவற்ற சொத்துக்களும் 1992 ஜுன் 18 ஆம் திகதியில் இருந்து நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளன. இதற்கென 1995 மார்ச் 08 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் நிறுவனம் அமைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இவையனைத்தும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பெரேடுகளில் இடம்பெற்றுள்ளதனால், இவை அவற்றின் புத்தகப் பெறுமதியில் பேரேடுகளில் இடம்பெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

| மீள் மதிப்பீடு | சொத்துக்களின் காலம் வருடங்கள் | 18.06.1992 இல் ரூபா | மாற்றம் உள்ளே/(வெளியே) ரூபா. | அகற்றல்கள் ரூபா. | 31.12.2017 இல் நிலுவை ரூபா. |
|---|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 30 | 1,127,305 | | (4,000) | 1,123,305 |
| கட்டடங்கள் | 25 | 22,130,873 | | (4,437,121) | 17,693,752 |
| இயந்திரசாதனங்கள் | 15 | 34,841 | | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 | 43,001,122 | 90,335,750 | (28,140,337) | 105,196,535 |
| முதிராத தோட்டங்கள் | | 90,647,222 | (90,335,750) | (311,472) | - |
| | | 156,941,363 | - | (32,892,930) | 124,048,433 |

ஆண்டுக்கென கொண்டு செல்லப்பட்ட பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன

| மீள் மதிப்பீடு | 2018.01.01 இல் நிலுவை ரூபா. | வருடத்திற்கான கட்டணங்கள் ரூபா. | அகற்றல்கள் ரூபா. | 31.12.2018 இல் நிலுவை ரூபா. |
|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 1,123,305 | - | - | 1,123,305 |
| கட்டடங்கள் | 17,693,752 | - | - | 17,693,752 |
| இயந்திரசாதனங்கள் | 34,841 | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் (குறிப்பு A) | 105,196,535 | - | (651,211) | 104,545,323 |
| | 124,048,433 | - | (651,211) | 123,397,222 |

| இலதாக்கல் | 2018.01.01 இல் நிலுவை ரூபா. | வருடத்திற்கான கட்டணங்கள் ரூபா. | அகற்றல்கள் ரூபா. | 31.12.2018 இல் நிலுவை ரூபா. |
|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 956,301 | 37,420 | - | 993,721 |
| கட்டடங்கள் | 17,693,752 | - | - | 17,693,752 |
| இயந்திரசாதனங்கள் | 34,841 | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் (குறிப்பு B) | 77,466,241 | 3,504,142 | (556,414) | 80,413,969 |
| | 96,151,135 | 3,541,561 | (556,414) | 99,136,282 |

## அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் (வெற்றுக் காணிகள் தவிர) தொடர்ச்சி...

| இருப்புப் பெறுமதி | இருப்புப் பெறுமதி 2018.01.01 இல் நிலுவை | 2018.12.31 இல் நிலுவை |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காணி அபிவிருத்திச் செலவினம் | 167,004 | 129,585 |
| கட்டடங்கள் | - | - |
| இயந்திர சாதனங்கள் | - | - |
| முதிர்ந்த தோட்டங்கள் | 27,730,294 | 24,131,355 |
| | 27,897,299 | 24,260,939 |

பெருந்தோட்டக் குத்தகைக் காலத்தில் கையளிக்கப்பட்ட சமயம் முதிர்ச்சியடையாதவை எனக் குறித்துரைக்கப்பட்ட பெருந்தோட்டச் சொத்துக்களிலான முதலீடுகள், முதிர்ச்சியடையாத தோட்டங்கள் எனக் காண்பிக்கப்பட்டுள்ளன. (1992.06.18 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது) இத்தகைய முதிர்ச்சியடையாத தோட்டங்களை, பயன்தரும் தோட்டங்களாக மாற்றுவதற்கான முதலீடுகள் குறிப்பு 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பெருந்தோட்டங்கள் பயன்தர ஆரம்பித்ததும், அத்தகைய நிலைமைக்கு அவற்றைக் கொண்டுவரவென செலவிடப்பட்ட மேலதிக முதலீடுகள் குறிப்பு 13 இன் கீழ் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்கள் என்ற பிரிவில் இருந்து மாற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களில் இருந்து முதிர்ந்த தோட்டங்களுக்கென இடம்பெற்ற மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### குறிப்பு A - முதிர்ந்த தோட்டங்களுக்கான செலவு

| | |
|---|---|
| 1992.06.18 இல் மீதி | 43,001,122 |
| 18.06.1992 - 31.12.2018 வரை ஏற்பட்ட கட்டுப்பாட்டு உரிமத்தின் மாற்றத்தினால் குறித்த முதிர்ந்த தோட்டங்களில் அகற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன. | (6,979,587) |
| 31.12.2017 வரை (ஏனைய மாற்றங்கள் தவிர) அகற்றிய தென்னை மரங்களின் பெறுமதி | (10,771,905) |
| 2018 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட தென்னை மரங்களின் பெறுமதி (உரிமம் மாற்றத்தினாலானவை தவிர) | (425,961) |
| 31.12.2018 இல் நிலுவை – [a] | 24,823,668 |
| **1992.06.18 இல் காணப்பட்ட முதிர்ச்சியடையாத மரங்கள், அவற்றின் முதிர்ச்சிக்கு ஏற்ப காலப்போக்கில் முதிர்ச்சியடைந்த பிரிவுக்கு மாற்றப்பட்டன.** | |
| 18.06.1992 இல் நிலுவை | 90,647,222 |
| உரிமம் மாற்றத்தினால் முதிர்ச்சியடையாத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அகற்றல்கள் | (311,472) |
| முதிர்ச்சியடைந்த பிரிவுக்கு மாற்றப்பட்டு, உரிமம் மாற்றலினால் அகற்றப்பட்டவை | (8,730,966) |
| 31.12.2017 வரை அகற்றப்பட்ட இறப்பர் மரங்களின் பெறுமதி (உரிமம் மாற்றத்தினாலானவை தவிர) | (1,657,878) |
| 2018 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட இறப்பர் மரங்களின் பெறுமதி (உரிமம் மாற்றத்தினாலானவை தவிர) | (225,250) |
| 31.12.2018 இல் நிலுவை – [b] | 79,721,655 |
| 31.12.2018 இல் முதிர்ச்சியடைந்த தோட்டங்கள் (a + b) – [c] | 104,545,323 |

### குறிப்பு B – முதிர்ச்சியடைந்த தோட்டங்களின் இலதாக்கல்

| | |
|---|---|
| 18.06.1992 இல் முதிர்ச்சியடைந்த தோட்டங்கள் | |
| 18.06.1992 - 17.06.2022 (30 வருடங்கள்) காலப் பகுதியில் மொத்த நாட்கள் | 10,957 |
| 18.06.1992 - 31.12.2018 வரை மொத்த நாட்கள் | 9,693 |
| 31.12.2018 இல் இலதாக்கல் (24,823,668 / 10,957 x 9,693) - [ d ] | 21,960,009 |
| 18.06.1992 இல் காணப்பட்ட முதிர்ச்சியடையாத மரங்கள், அவற்றின் முதிர்ச்சிக்கு ஏற்ப காலப்போக்கில் முதிர்ச்சியடைந்த பிரிவுக்கு மாற்றம் (குறிப்பு – B-01) | 58,453,960 |
| மொத்த இலதாக்கல் | 80,413,969 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

குறிப்பு B – 01

**18.06.1992 இல் காணப்பட்ட முதிர்ச்சியடையாத மரங்கள், அவற்றின் முதிர்ச்சிக்கு ஏற்ப காலப்போக்கில் முதிர்ச்சியடைந்த பிரிவுக்கு மாற்றம்**

| | அகற்றிய திகதி | செலவு | 31.12.2018 இல் இலதாக்கல் |
|---|---|---|---|
| 18.06.1992 இல் மாற்றப்பட்ட முதிர்ச்சியற்ற தோட்டங்களில் 31.12.1994 இல் முதிர்வடைந்த தோட்டங்களுக்கான செலவு | | 37,756,930 | |
| அகற்றல் - கொரகஹ - முதிர்ச்சியற்ற நிலையில் அகற்றப்பட்டது | | (311,473) | |
| அகற்றல் - மஹாயாய | 07.08.1997 | (2,957,425) | |
| அகற்றல் - மல்வத்த | 07.08.1997 | (355,313) | |
| அகற்றல் - அம்பான (இறப்பர்) | 10.09.1994 | (223,374) | |
| அகற்றல் - சூரியபுர | 06.06.2000 | (92,705) | |
| அகற்றல் - பொல்கம்மான | 01.01.2016 | (322,347) | |
| அகற்றல் - பொல்கம்மான | 01.01.2016 | (410,721) | |
| அகற்றல் - இறப்பர் மரங்கள் 2013-2015 | 01.01.2016 | (990,854) | |
| அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2016 | 31.12.2016 | (209,249) | |
| அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2017 | 31.12.2017 | (326,797) | |
| அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2018 | 31.12.2018 | (207,232) | |
| **31.12.2018 இல் மீதி** | | **31,349,440** | **25,078,408** |
| 1992.06.18 இல் முதிர்வடையாத பெருந்தோட்டச் செலவினங்கள் 31.12.1995 அன்று முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டது | | 8,429,585 | |
| அகற்றல் - மாவத்தகம | 15.08.1997 | (493,832) | |
| அகற்றல் - வல்போதலே | 31.05.2011 | (721,401) | |
| அகற்றல் - இறப்பர் தோட்டங்கள் - 2018 | 31.12.2018 | (18,018) | |
| **31.12.2018 இல் மீதி** | | **7,196,334** | **5,517,102** |
| 1992.06.18 இல் முதிர்வடையாத பெருந்தோட்டச் செலவினங்கள் 31.12.1996 அன்று முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டது | | 12,394,880 | 9,089,428 |
| **31.12.2018 இல் மீதி** | | **12,394,880** | **9,089,428** |
| 1992.06.18 இல் முதிர்வடையாத பெருந்தோட்டச் செலவினங்கள் 31.12.1997 அன்று முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டது | | 8,045,288 | |
| அகற்றல் - மாவத்தகம | 15.08.1997 | (412,325) | |
| அகற்றல் - பன்னல | 09.04.1999 | (748,578) | |
| அகற்றல் - பேதியகந்த | 06.06.2000 | (242,922) | |
| அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2017 | 31.12.2017 | (130,979) | |
| **31.12.2018 இல் மீதி** | | **6,510,485** | **4,557,399** |
